# புதுமை மனிதர்கள்

கிறிஸ்துவின் சாயலில் வாழ்ந்தோரின் வியத்தகு செயல்கள்

*ஆசிரியர்*

**வில்லியம் மெக்டொனால்டு**

*தமிழாக்கம்*

**இரா. மாணிக்கவாசகம்**

மோரியா
ஊழியங்கள்

**Living above average** *in Tamil*
William MacDonald
© William MacDonald 2009.

ISBN

Publication No. 014

*Published by*
Moriah Ministries
Email: <moriahministries@gmail.com>
Phone: 91-044-2664 5010

Typeset & Cover Design: Moriah Ministries
Printed at: Horeb Print House, Sivakasi.

Moriah Ministries
Post Box No. 2540,
Shenoy Nagar,
Chennai - 600 030,
India

Moriah Ministries
C/o
Bethany Gospel Hall
16, North Street,
Mannarpuram,
Tiruchirapalli,
620 020, India.

உங்களுடைய சொந்தக் கண்ணோட்டத்தின்படி, நீங்கள் தரும் விளக்கத்தின் அடிப்படையில், தாங்கள் வாழ்ந்து காட்டும் கிறிஸ்தவ வாழ்க்கை முறையினால், உங்களுடைய அயலகத்தாருக்கு நீங்கள் வழங்குவது என்ன? அவருடைய வாழ்க்கைமுறையைப் பற்றி அவர் தன் கண்ணோட்டத்தின் அடிப்படையில் விளக்கம் அளிக்கிறபோது, நீங்கள் ஒரு "சமயப்பற்றுள்ளவர்" எனவும், அவரோ அப்படிப்பட்டவர் அல்லர் என்பதுமாகவே அது காணப்படும்! கிறிஸ்தவம் உங்களது ஓய்வுநேரப் பழக்கமாக விளங்குகிறது. ஆனால் அவரோ அப்படியில்லை. உங்களுடைய வாழ்க்கையின் எந்தவொரு அம்சமும் அவருடைய உணர்வைத் தொடும்படிச் சிறப்புவாய்ந்ததாக இல்லை. அவர் ஒரு கிறிஸ்தவராக மாற்றம் பெறாமல் நீங்கள் செய்கிற செயல்களைச் செய்ய முடியாது என்று அவர் நினைக்கும்படி, உங்களுடைய வாழ்க்கையில் ஏதொரு செயலும் அவரை உய்த்துணரச் செய்யும் புதிராகவோ, போற்றுதற்குரியதாகவோ காணப்படுவதில்லை.

— *மேஜர் இயான் தாமஸ்*

# பதிப்பகத்தார் உரை

திருமறையில் காணும் கிறிஸ்தவன் ஒரு புதுமை மனிதனாக விளங்குகிறான். அவன் தன்னலம் பேணாமல் பிறர்க்கென வாழ்கிறான். அவன் தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினால் வெல்லுகிறான். தன்னைப் பகைக்கிறவனிடத்தில் அவன் அன்புகூருகிறான். தனக்கு ஏற்படும் இன்னல்களுக்காக அவன் பிறரைக் குறை கூறுவதில்லை; அவை கர்த்தரால் அனுமதிக் கப்பட்டவை என்று அறிந்து பொறுமையைக் காக்கிறான். பழிச்சொல் ஏற்றும் தன் நாவை அவன் காக்க மறப்பதில்லை. கேட்கிறவனுக்குக் கொடுக்கிறான். தன்னிடத்திலிருந்து எடுத்துக்கொண்டதை அவன் திரும்பக் கேட்பதில்லை. அவன் தனதுரிமையை விட்டுக்கொடுக் கிறான். பெற்றோரைக் கனம் பண்ணுகிறான், எளியோரை ஆதரிக் கிறான். அயராது உழைக்கும் அவன், எப்பொழுதும் கர்த்தருக்குள் களிகூருகிறான். தன்னைத் தாழ்த்தி வாழும் அவன் கிறிஸ்துவின் புகழ்ச்சி ஒன்றையே தனது நோக்கமாகக் கொண்டிருக்கிறான். அதற்காக அவன் எதையும் இழக்க ஆயத்தமாயிருக்கிறான்; தன்னு யிர் கொடுக்கவும் தயங்குவதில்லை. சுருங்கக்கூறின் அவனுடைய வாழ்க்கை கிறிஸ்துவைப் பிரதிபலித்துக் காட்டுவதாக இருக்கிறது.

இத்தகைய குணநலன்களைக் கொண்ட மனிதர்களைக் காண முடியுமா என்பதே கேள்வி. உண்மையாகவே இத்தகைய நற்பண்பு களைத் தங்களுடைய வாழ்வின் இலக்கணமாகக் கொண்டு வாழ்ந் தோர் பலர். அங்ஙனம் வாழ்ந்தோர் சிலரது வாழ்க்கையில் நடந்த சீரிய நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது இந்நூல்.

திருவாளர் வில்லியம் மெக்டொனால்டு அவர்களுடைய கைவண்ணத்தினால் பக்திப் பரவசமூட்டும் நிகழ்ச்சிகள் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன. இவற்றைப் படிக்குங்கால் நம் கண்கள் கலங்குகின்றன, உள்ளங்கள் அசைக்கப்படுகின்றன. விசுவாச

வீரர்கள் கர்த்தருக்காக அரிய பல செயல்களைச் செய்து, தொடர்ந்து பேசும் உன்னத சாட்சிகளாகத் திகழ்கின்றனர்.

இந்நூலில் பழிச்சொல்லை ஏற்றுக்கொண்ட பண்பு மிக்கவரையும், எளியோருக்கு வாரிவழங்கிய வள்ளல்களையும், விசுவாசத்திற்காக உறுதியுடன் நின்ற மாணவியையும், உரிமையை விட்டுக் கொடுத்த மனிதர்களையும், பிள்ளைகளை இழந்த அன்புள்ளம் கொண்ட தாயையும், பகைவரிடம் அன்பு பாராட்டிய பக்தனையும், ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டிய கடமை வீரனையும், தம்முயிர் மாய்த்த மாவீரர்களையும் நாம் காண்கிறோம். அவர்கள் யாவரும் கிறிஸ்துவின் திருப்பெயரை ஏந்தி நம் கண் முன்னர் உலா வருகின்றனர். அன்னாரது வியத்தகு செயல்கள் உயிரூட்டமிக்க அறைகூவல்களாகத் திகழ்கின்றன.

பொதுவாக நமது வாழ்க்கை மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் மேலாக உயர்ந்து காணப்படுவதில்லை. சராசரி மனிதர்களாக நாம் வாழ்வதில் என்ன பயன்? எக்காலத்திலும் எச்சூழ்நிலையிலும் கிறிஸ்துவை உலகிற்குப் பிரதிபலித்துக் காட்டிட வேண்டும். சத்தியத்தை மக்கள் கேட்கும்படியாக, அதைச் சொல்வது மட்டும் போதாது; அதனை அவர்கள் நமது வாழ்க்கையில் கண்கூடாகக் காணவும் வேண்டும்.

கர்த்தரின் சிந்தையின் ஆக்கக்கூறுகளாகிய தாழ்மை, தியாக மனப்பான்மை, தன்னலமின்மை, பிறர் மேன்மை கருதுதல் போன்ற நற்பண்புகளை நம்முடைய அனுதின வாழ்வில் பயிற்றுவிப்பதின் வாயிலாக அவ்வுன்னத இலக்கை நாம் அடைவோம்.

கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக புதுமை மனிதர்களாக வாழ நம்மை நாம் ஒப்புவிப்போமாக.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | இயேசு கிறிஸ்து என்ன செய்திருப்பார்? | 001 |
| 02. | தேவனுடைய நண்பன் | 006 |
| 03. | அன்புள்ளம் கொண்ட அப்போஸ்தலன் | 009 |
| 04. | வேதனையில் ஆறுதல் | 018 |
| 05. | கீழ்ப்படிதலின் விலை | 021 |
| 06. | உடைந்த உள்ளம் அடைந்த வெற்றி | 025 |
| 07. | உன்னதமான பணி | 029 |
| 08. | தாய்நாட்டிற்குப் பெருமை சேர்த்த மண்ணின் மைந்தன் | 033 |
| 09. | பணிவு தந்த மேன்மை | 040 |
| 10. | நோயிலும் நலத்திலும் | 043 |
| 11. | ஆத்தும நாயகர் | 048 |
| 12, | புறக்கணிக்கப்பட்டவரின் நண்பர் | 052 |
| 13. | தீமையை நன்மையால் வென்ற இறையூழியர் | 056 |
| 14. | மறுகன்னத்தைக் காட்டிய கடமைவீரன் | 060 |

15. கடுங்குளிரில் இளஞ்சூடு 063
16. பகைஞரிடம் அன்பு பாராட்டிய பக்தன் 066
17. தெய்வீக மன்னிப்பு 070
18. அற்ப ஆசை 074
19. அநுக்கிரக கால மனிதன் 076
20. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பாராட்டிய தயை 080
21. விண்ணவரின் புகழ்பாடும் மாவீரர்கள் 082
22. வாக்குறுதியுடன்கூடிய முதலாம் கற்பனை 086
23. அன்புகூரும் தேவன் 089
24. நம்புதற்கரிய கிருபை 095
25. ஏழைகளின் நண்பன் 099
26. அலங்கார ஆலயத்தில் அழகான கால்கள் 102
27. எரிந்த விமானத்தில் எரியாத உள்ளங்கள் 106
28. பெரிய விருந்திற்கு அழைக்கப்பட்ட சிறிய நண்பர் 111
29. இன்னும் பலர் . . . 117
30. தெய்வீக இயல்பு வாழ்க்கை 126

# 1

## இயேசு கிறிஸ்து என்ன செய்திருப்பார்?



**குன்றின் மீது** ஏறிச் சென்று, முழு இரவையும் இயேசு கிறிஸ்து திருத்தந்தையிடம் மன்றாட்டில் கழித்தார். அதன் பின்னர் அவர் தமது திருத்தொண்டர் பன்னிருவரை தெரிந்தெடுத்தார். நற்செய்தியைப் பரப்புவதற்கென அவர்களை அனுப்ப எண்ணங்கொண்ட இயேசு கிறிஸ்து, அவர்களைத் திருதூதுவர் (அப்போஸ்தலர்) என்று அழைத்தார். அப்போஸ்தலர் என்னும் சொல் "அனுப்பப்பட்டவர்" எனப் பொருள்படும்.

குன்றினின்று அவர்கள் இறங்கிய பிறகு, ஊழியத்திற்குத் தேவையான பயிற்சியை அவர்கள் பெற்றனர். முதலாவதாக, அவர்களுக்கு வாழ்க்கை முறையைப் பற்றிய பயிற்சியை அவர் கற்றுக்கொடுத்தார். தியாக மனப்பான்மை உடையவர்களாகவும், தாங்கள் பெற்ற அழைப்பினைக் குறித்துக் கருத்தூன்றியவர்களாகவும், மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாதவர்களாகவும் கர்த்தருக்காகப் பாடுகள் ஏற்றவர்களாகவும் அவர்கள் வாழவேண்டும் எனப் போதித்தார்.

அதன் பின்னர் அன்னாரது குணவியல்பு எங்ஙனம் திகழவேண்டும் என்பதற்கான படிப்பினையைப் புகட்டினார்.

> "எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்.

> உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு; உன் அங்கியை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் எடுத்துக்கொள்ளத் தடைபண்ணாதே. உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும்கொடு; உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே. மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" (லூக்கா 6:27 – 36).

கர்த்தருடைய இக்கட்டளைகளுக்கு நாம் என்ன மறுமொழி கூறுவோம்? "ஆம், அவ்வாறுதான் நம்புகிறேன். கிறிஸ்தவர்களாகிய நாம் அவ்வண்ணமே செயல்புரிகிறோம்" என்று நீங்கள் கூறுகிறீர்களா? இவ்வாறுதான் வாழ்கிறோம் என்னும் மனநிறைவோடு நீங்கள் இருப்பீர்கள் என்றால், இத்திருமறைப் பகுதியைக் கவனத்துடன் மீண்டும் படிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன். அது என்ன கூறுகிறது என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்வீர்கள் எனில் அதிர்ச்சியடைவீர்கள்.

வேற்றுலக வாழ்வின் நடைமுறைகளையே இங்கு கர்த்தர் தமது மாணாக்கருக்குப் படிப்பினையாக எடுத்தியம்பியுள்ளார். இயல்பான குணநல நடக்கையை இங்கு நாம் காண்கிறதில்லை. இதில் கூறப்பட்டுள்ளவை மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் அப்பாற்பட்டவை, மேலான நோக்குடையவை. என்னுடைய வாழ்க்கை முறையானது, ஏனைய அயலகத்தாரின் வாழ்க்கை முறையினின்று வேறுபட்டதாயிருக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து இங்கே வலியுறுத்துகிறார்.



வேற்றுலகத் தன்மை உடையவனாக நான் வாழ்ந்து காட்டவில்லையெனில், "நானும் உங்களைப் போல சாதாரண மனிதன்தான். என்னைக் கண்டு பயப்பட வேண்டாம்" என்று நான் அவர்களிடம் கூறுவதாக அது அமையும். அவர்களுக்கும் நமக்கும் எவ்வித வேறுபாடும் இல்லையெனில், இயேசு கிறிஸ்து என்ன எதிர்பார்க்கிறாரோ அதை அவர்களிடம் நாம் வலியுறுத்தி, அதற்கு அவர்கள் செவிசாய்க்க வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பது தகுமா? அந்த வேறுபாடு மிகவும் இன்றியமையாததாகும். அதுவே இயல்பு வாழ்விற்கு மேலான வாழ்வு ஆகும். அதுவே கர்த்தர் இயேசு கிறிஸ்து எதிர்நோக்கும் வாழ்வு ஆகும்.

மாறாக அவர்களது வாழ்க்கை முறைக்கும் எனது வாழ்க்கை முறைக்கும் பெரும் வேறுபாட்டை அவர்கள் காண்பார்கள் எனில், அதற்கான காரணத்தை அறிய முற்படுவர். மேலும், தங்களது உள்ளத்தை எனக்குத் திறந்து கொடுத்து நான் அவர்களுக்கு நற்செய்தியைப் பகிர்ந்து அளிக்கத்தக்கதான சூழ்நிலை உருவாகும். தீப்பந்தம் ஏந்துவோர் (*Torch Bearers*) இயக்கத்தை நிறுவிய மேஜர் இயான் தாமஸ் இது குறித்து எழுதியதாவது:

> உங்களுடைய வாழ்க்கை முறையின் பண்பு அயலகத்தாரை மலைக்கச் செய்யும்போதுதான் உங்களால் அவர்களது உள்ளத்தைத் தொட இயலும். அவ்வாழ்வு மற்றவர்களால் காணப்பட்டு போற்றுதற்குரியதாய் இருப்பது மட்டுமின்றி, மனிதர்களுடைய விளக்கங்களுக்கு அப்பாற்பட்ட வகையிலும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகத் திகழ வேண்டும். மனிதனுடைய செயல்திறனுக்கு இவ்வாழ்வுமுறை அப்பாற்பட்டதாயிருக்கிறது. தேவனுடைய செயல்திறன் உங்களிடம் செயல்படும்போதே நீங்கள் அவரைப் பிரதிபலித்துக் காட்ட முடியும் என்பதை ஓரளவு அறிவுடைய மனிதர்களும் தெளிவாய் அறிவர்.
>
> சுருங்கக்கூறின், நீங்கள் சான்று பகர்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, நீங்கள் வாழ்கின்ற வாழ்வின் ஆக்கக்கூறுகளாகத் திகழ்கிறார் என்பதை உங்கள் அயலகத்தார் நம்பத் தொடங்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

கிறிஸ்தவரல்லாதோர் அவ்வப்போது வீரதீரச் செயல்களைச் செய்கின்றனர். சிறுநீரகங்கள் பழுதடைந்தோருக்குத் தங்களது சிறுநீரகத்தைத் தானமாக வழங்குகின்றனர். தங்களுடைய வயது முதிர்ந்த பெற்றோரிடம் அளவுகடந்த கரி

சனையோடு நடந்துகொள்கின்றனர். அறம் செய விருப்பம் கொண்டோராய், அந்நோக்கங்களுக்காகத் தாராளமாகப் பணம் கொடுக்கின்றனர். இவ்விதமான பல முயற்சிகளை அவர்கள் செய்கின்றனர். நாமோ அவிசுவாசிகளின் இவ்வாறான இயல்பான செயல்களுக்கு அப்பாற்பட்டுச் செல்லும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு கூறும்போது, கிறிஸ்துவிற்கு ஒப்பான நடத்தையை ஒரு கிறிஸ்தவர் வெளிப்படுத்திக் காட்டும் ஒவ்வொரு முறையும், இரட்சிக்கப்படாதோர் இரட்சகருக்கென்று வெல்லப்படுவர் என்னும் உறுதியில்லை என்பதையும் சொல்லியே ஆக வேண்டும். ஒரு செயலைக் கர்த்தர் எவ்வாறு செய்வாரோ அவ்வாறே நாமும் செய்யக் கடன்பட்டோராய் இருக்கின்றோம். அவிசுவாசிகளும் கர்த்தரிடம் விசுவாசம் கொள்வதற்குக் கடன்பட்டோராய் இருக்கின்றனர். எப்பொழுதும் சிலர் விலகிச் செல்வார்கள். ஆனால் இத்துடன் கதை முடிவடைகிறதில்லை. நீங்கள் கிறிஸ்துவை அணிந்திருப்பீர்களெனில், நீங்கள் இயல்பு திரிந்தவர் என்று பலர் எண்ணுவார்கள். உங்களுடைய புத்தியை நீங்கள் இழந்துவிட்டீர்கள் என்றும் அவர்கள் நினைப்பார்கள். அன்று அவர் மனிதர்களால் நடத்தப்பட்டதைக் காட்டிலும் சிறப்பாக நீங்கள் நடத்தப்படுவீர்கள் என்று எண்ணியும் பார்க்க முடியாது. குருவைக் காட்டிலும் சீடன் பெரியவனல்லன்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் ரஷ்ய நாட்டுக் கதாசிரியர் ஃபையோடோர் டோஸ்டோவ்ஸ்கி என்பார் ஒரு நூலை இயற்றினார். அவர் அந்நூலில் மனித குலத்தின் நிறைவான மாதிரியாக இளவரசன் மிஷ்கின் என்பானைச் சித்தரித்துக் காட்ட முயற்சி செய்தார். குடிமக்களால் அவ்விளவரசனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் பயித்தியக்காரன் என்றே அனைவரும் எண்ணினர். அந்நூலின் பெயர் ‘மடையன்’ என்பதாகும். கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றம் அடைவதில் நாம் பெருகுகிறபோது, ‘மடையர்கள்’ என்று அறியப்படுவதற்குரிய ஆபத்தும் பெருகுகிறது.

ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல் கூறிய கூற்று சரியானதே! நாம் சிலருக்கு, “ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும்” மற்றவர்களுக்கு “மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும்” இருக்கிறோம். நம்முடைய தெய்வீக நடக்கையினாலே அவர்களை மலைக்கச் செய்து மனதில் பதிய வைக்கிறோம் அல்லது அவர்களைக் குழப்புகிறோம். இவ்வித இருவகையான விளைவுகளினாலும் உன்னதமானவரின் குமாரர்களாக நாம் இருக்கிறோம் என்று அவரைப் பிரதிபலிப்பதினாலே வெளிப்படுத்திக் காட்டுகிறோம்.

தொடர்ந்து வருகின்ற பக்கங்களில் சிலருடைய வாழ்க்கையில் நடைபெற்ற மேலான சில நிகழ்ச்சிகளைப்பற்றி சிந்திப்போம். இயேசு கிறிஸ்துவின் சொற்களை அந்தப் புதுமைக் கிறிஸ்தவர்கள் எழுத்தின்படி நிறைவேற்றியுள்ளனர். அவர்கள் தங்களுடைய பகைஞரிடம் அன்பு பாராட்டினர், எதிரிகளை மன்னித்தனர், தீமைக்கு நன்மை செய்தனர், பழி வாங்காமல் சகித்துக் கொண்டனர், பிரதிபலன் எதிர்பாராமல் கொடுத்தனர். சுருங்கக் கூறின், “இயேசு கிறிஸ்து என்ன செய்திருப்பார்?” என்று தங்களிடமே வினவி, அவர் செய்திருக்கக் கூடியதையே அவர்கள் செய்தனர்.

2

## தேவனுடைய நண்பன்



**முன்புறக் கதவை** யாரோ வேகமாகத் தட்டினார்கள். ஓடிச்சென்று கதவைத் திறந்தார் சூசோ. முன்பின் தெரியாத பெண்ணொருத்தி அங்கு நின்றுகொண்டிருந்தாள். அவள் தன் கரங்களில் ஒரு கைக்குழந்தையை ஏந்தி நின்றாள். சற்றும் எதிர்பாராத வகையில் சூசோவின் கரங்களில் அச்சிறு பாலகனைத் திணித்தவள், "இதோ, உன் பாவத்தின் கனி" என்றசொல்லிவிட்டுச் சடுதியில் மாயமாய் மறைந்தாள்.

*13* - ஆம் நூற்றாண்டில் ஜெர்மானிய நாட்டில் வாழ்ந்த ஹென்றி சூசோ இறைவனோடு நெருங்கிப் பழகிய மனிதர். அவரும் அவருடைய நண்பர்கள் சிலரும் "தேவனுடைய நண்பர்கள்" என்று அறியப்பட்டிருந்தனர். பக்தி நிறைந்த பால் டெர்ஸ்டீகன் என்பாரும் அக்குழுவில் ஒருவர். "உன்னதமானவரின் மறைவில்" அவர்கள் வசித்துக்கொண்டிருந்தனர். "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருந்த" அந்த மனிதர்கள் முதல் சங்கீதத்தில் காணும் பாக்கியவானுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். அவர்களுடைய குடியிருப்போ விண்ணுலகம். அவர்களது வாழ்வின் பரிசுத்தம் போற்றுதற்குரிய பழமொழியாகத் திகழ்ந்தது.

இப்பொழுது, கையில் ஏந்திய குழந்தையோடு கலங்கி நின்றார் சூசோ. உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு, அவர் மீது விழுந்த பேரிடியாகத் தோன்றிற்று. அப்பெண்ணின் பாவத்தின் விளைவே அந்தக் குழந்தை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதில் அவருக்கு எவ்விதத் தொடர்புமில்லை. இந்நாட்களில் குழந்தையை ஒரு பையில் கட்டி, குப்பைத்தொட்டியில் போட்டு மறைத்து விடுகிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணோ யார் மீதாவது பழி சுமத்தவேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்தாள் போலும்.

அடுத்த நாள் இச்செய்தி அந்த ஊர் முழுவதும் காட்டுத் தீயெனப் பரவிற்று. சூசோ ஒரு பொய்யன் என்றும், ஒரு பெண்ணை ஏமாற்றியவன் என்றும் எல்லாரும் வசைபாடினர். மதம் என்னும் போர்வைக்குள் மறைந்து வாழ்ந்த மிருகம் என்றும் அவரைத் தூற்றினர். அவரால் என்ன செய்ய முடியும்?

அவருக்குத் தெரிந்த ஒரே வழி! கர்த்தரிடம் சென்றார். கதறி அழுதார். "கர்த்தாவே, நான் என்ன செய்வேன்? நான் ஒன்றும் அறியாதவன் என்பதை நீர் அறிவீர்" என்று சொல்லிக் கண்ணீர் விட்டார்.

மெல்லிய குரலில் தேவன் சூசோவுடன் பேசினார். அதை அவர் தெளிவாகக் கேட்டார்: "நான் செய்தது போல நீயும் செய். பிறரது பாவங்களுக்காக நீயும் பாடு அனுபவி, ஒன்றும் சொல்லாதே." சிலுவைக் காட்சி புதிய பொருளோடு அவர் கண்முன் தோன்றியது. புதுமை மனிதரின் உள்ளம் அமைதியால் நிறைந்தது.

தான் குற்றமற்றவன் என்று அவர் மறுத்துரைக்கவில்லை, வழக்காடவுமில்லை. தன்னுடைய குழந்தையைப் போல அவர் அந்தக் குழந்தையை வளர்த்தார்.

ஆண்டுகள் பல கடந்தன. ஒருநாள் அந்தப்பெண் அவ்வூருக்குத் திரும்பி வந்தாள். ஊர் மக்கள் கூடுமிடத்தில் நின்று, சூசோவின் மீது தான் சாட்டிய குற்றம் பொய்யென்று கூறினாள். அவர் ஒன்றும் அறியாதவர் என்றும் கூறினாள். தீங்கு ஏற்கனவே நடந்துவிட்டது. ஆனால் தேவனோ எல்லாவற்றையும் நன்மையாக மாற்றினார். கிறிஸ்துவின் சாயலை அணிந்து மறுரூபம் கொண்டவராக சூசோ காட்சியளித்தார். தான் பெற்ற சோதனையில் கிறிஸ்துவுக்காக அவர் வெற்றிபெற்றுவிட்டார்.

பழைய ஏற்பாட்டு நூலில் யோசேப்பை நாம் காண்கிறோம். பொய்க்குற்றம் சாட்டப்பட்டு அநீதியாக அல்லல் பல அடைந்தான். காமவெறி பிடித்த பெண், கற்பைச் சூறையாட வந்தவன் என்றல்லவா கூறினாள். அவனுடைய மேலாடை அவளுக்குக் கிடைத்த சான்று. அவனுடைய மேலாடையே அவனுக்கு எதிராகச் சாட்சி கூறிற்று. அவன் செய்தது என்ன? தன்னுடைய வாழ்க்கையைக் கர்த்தரிடம் ஒப்புவித்தான் யோசேப்பு. உண்மை புலப்படும்வரை அவரையே சார்ந்திருந்தான்.

இயேசு கிறிஸ்து தவறாகக் குற்றம் சாட்டப்பட்டார். அவருடைய கன்னிப்பிறப்பை அறியாத கயவர்கள், அவருடைய பிறப்பைக் குற்றப்படுத்தினர். அற்புதங்கள் பல செய்தார். மாற்றானின் வல்லமை என்று வசைபாடினர். இறையரசைப் பறையறிவித்தார். ரோம அரசைக் கவிழ்க்கும் சதி என்று சாடினர். பகைத்த பகைஞரின் கொடுமையால் இன்னலுற்ற இயேசு கிறிஸ்து, "ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது" என்றுரைத்தார்.

நாம் குற்றம் அற்றவர் என்று நம்மைத் தற்காத்துக்கொள்ளத் தேவையில்லை என்பதை கிறிஸ்துவின் சான்று நமக்கு எடுத்துரைக்கிறது. வழக்கு தொடுத்து நல்லதொரு தீர்ப்பை நாடவேண்டுமென்று நாம் எண்ணவேண்டியதில்லை. இப்பாடத்தை இயேசு நாயகர் நமக்குக் கற்றுத் தருகிறார். பாவம் தன்னில்தானே வெளிப்படும், அது குற்றவாளியைச் சுட்டிக் காட்டும், தீமைக்கு ஆளானவர் பெருமதிப்பைப் பெற்றிடுவர். தேவன் தம்மில் அன்புகூருவோருக்கு எல்லாம் நன்மையாகச் செய்கிறார்.

# 3

## அன்புள்ளம் கொண்ட அப்போஸ்தலன்



**கண்ணைக் கவரும்** மாடமாளிகை, செல்வம் கொழிக்கும் குடும்பம், அலுவல் புரிவதற்கு வேலைக்காரர்கள் கூட்டம், கோமகன் சின்னத்தை ஏந்தி வரும் வாகனம். அது சமயப்பற்று மிக்க குடும்பம், ஆயினும் கிறிஸ்துவுக்குள் ஊன்றக் கட்டப்பட்டோர் ஒருவரும் இல்லை. இந்த இல்லத்தில்தான் தனது இளமைப் பருவத்தைக் கழித்தார் இராபர்ட் சேப்மேன்.

இராபர்ட்டுக்கு இருபது வயது நிறைவடைந்தபோது அவருடைய வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அந்த நாட்களில் ஜேம்ஸ் ஹாரிங்டன் ஈவான்ஸ் என்னும் இறையூழியர் நற்செய்திக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்திற்கு வரும்படியாக அவருடைய நண்பரொருவர் சேப்மேனை அழைத்தார். அழைப்பினை ஏற்று அக்கூட்டங்களுக்கு சென்ற சேப்மேன் சிலநாட்களில் மனம் மாற்றம் பெற்று மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைப் பெற்றார்.

கிறிஸ்துவை விசுவாசிப்போர் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்ற கட்டளையைப் புதிய ஏற்பாட்டில் கண்ட சேப்மேன், தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படியாக ஈவான்ஸ் அவர்களை வேண்டிக் கொண்டார். "நீங்கள் சிறிது காலம் காத்திருந்து இதைக் குறித்துச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டாமா?" என்று திருவாளர் ஈவான்ஸ் சற்று எச்சரிப்போடு கூறினார்.

"இல்லை, கர்த்தருடைய கட்டளைக்கு நான் துரிதமாய்க் கீழ்ப்படிய வேண்டும்" என்று விடை பகர்ந்தார் சேப்மேன். தர்க்கங்களை விட்டொழித்து உடனே கீழ்ப்படியும் ஆவி இவ்வகையில் வாழ்நாள் முழுவதும் அவரிடத்தில் நிலைத்திருந்தது.

சட்டப்படிப்பை முடித்த சேப்மேன் வெகுவிரைவில் புகழ்மிக்க வழக்கறிஞரானார். ஆனாலும் வாய்ப்பு மிகுந்த தொழிலில் அவரால் நீடித்திருக்க முடியவில்லை. முழுநேரக் கிறிஸ்தவப் பணிக்கென, கிறிஸ்துவின் அன்பு அவரை நெருக்கி ஏவிற்று. கர்த்தரின் அழைப்பிற்குச் செவிமடுத்த சேப்மேன் வெகுவிரைவில் தனது தொழிலை உதறித் தள்ளினார். தனது உடைமைகள் யாவற்றையும் விற்பது, கர்த்தரின் பணிக்கெனப் பெருஞ்செல்வத்தைக் கொடுத்துவிடுவது, வழக்கறிஞர் தொழிலால் உண்டான செல்வாக்கையும் கௌரவத்தையும் இழப்பது ஆகியவையே, அவரைப் பொருத்தமட்டில் "அனைத்தையும்" துறப்பது என்பதன் பொருளாக இருந்தது.

"தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?" (யாக். 2:5). இவ்வுண்மை வெகுவாக அவருள்ளத்தை ஆட்கொண்டது. இதுதானே தேவனுடைய திட்டம். ஏழைகளுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டாமா? (மத். 11:5). மக்கள் கர்த்தருடைய உபதேசத்தை விரும்பிக் கேட்க வேண்டாமா? (மாற்கு 12:37). ஏழைகள் மத்தியில் இறையூழியத்தைச் செய்யவேண்டும் என்னும் நோக்கம் அவருடைய வாழ்வின் இலக்காகத் திகழ்ந்தது.

"நல்ல உயரமான இளைஞன், புன்சிரிப்போடு கூடிய முகம், வழக்கறிஞர் தொழிலில் புகழ்பெற்ற மனிதன்; முதுமையினால் சிதைந்துபோன கண்தெரியாத ஏழை மூதாட்டியை சபைக்கூட்டங்களுக்கு அழைத்து வருவதை மக்கள் கண்டனர். உதவுவார் இன்றி வாழும் அந்த ஏழை மூதாட்டியை சேப்மேன் கைகோத்து அழைத்து வருவதைக் கண்ட 'வேதவிற்பன்னர்களுடைய' முகத்தில் ஏளனப் புன்னகை தோன்றிற்று. சமய உபதேசங்களைக் கற்றுக் கொண்டதில் அவர்களுக்குக் குறைவில்லை. தன்னலம் மிக்க 'பெரியவர்கள்' அன்பை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்திக்காட்ட அறிந்திலர்."

பின்னர், குடியிருக்க வீடு இல்லாதோர், ஆதரவு அற்ற அநாதைகள் ஆகியோரைச் சந்திக்க வேண்டும் என்னும் நல்நோக்கத்துடன் இங்கிலாந்தில் உள்ள பார்ன்ஸ்டேப்பிள் என்னும் பகுதியில் உள்ள சேரி ஒன்றிற்கு சேப்மேன் குடிபெயர்ந்தார். அப்பகுதியில் தெருக்கள் அழுக்கடைந்து காணப்பட்டன, துர்நாற்றம் வீசியது, நோய்வாய்ப்பட்ட மக்கள் திறந்தவெளியில் படுத்துக் கிடந்தனர், கவனிப்பாரற்ற சிறுவர்கள் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தனர். வறுமையின் காட்சிக்கூடமாக அப்பகுதி விளங்கியது. அங்கே சேப்மேன் தனது இறையூழியத்தைத் தொடங்கினார். அம்மக்களுக்காக அவருடைய வீடு எப்பொழுதும் திறந்திருந்தது.

"பலர் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் எல்லாரும் கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுவதில்லை. கிறிஸ்துவை வாழ்ந்து காட்டுவதே என்னுடைய பெரிதான இலக்காயிருக்கிறது" என்று அவர் உரைத்தது வெறும் வாய்ச்சொல் அல்ல. பல ஆண்டுகள் கழித்து, "நான் எதைப் பிரசங்கிக்கிறேனோ அதை இவர் வாழ்ந்துகாட்டுகிறார்" என்று அவரைப் பற்றி திரு J. N. டார்பி கூறினார்.

அவருடைய மேலங்கி நைந்து கிழிந்து போனதைக் கண்ட அவருடைய கிறிஸ்தவ நண்பரொருவர் புதிய மேலங்கி ஒன்றை வாங்கிக் கொடுத்தார். ஆனால் அந்தப் புதிய அங்கியை அவர் அணிவதை நண்பர் காணவேயில்லை. சேப்மேன் அந்தப் புதிய அங்கியை ஒரு வறியவருக்குக் கொடுத்துவிட்டார். எல்லாரும் சேப்மேனைப் புதுமை மனிதன் என்றழைத்தனர். கிறிஸ்தவர்கள் இப்படித்தானே வாழவேண்டும் என்னும் எண்ணங்கொண்ட சேப்மேன் அவர்களுடைய நினைவை எண்ணிக் குழம்பினார். தன்னுடைய செயல்களில் ஏதும் புதுமை இல்லையென்றே அவர் நினைத்தார்.

சேப்மேனின் தியாக வாழ்க்கையைக் கண்ட அவரது நண்பர்களும் உறவினர்களும் குழப்பத்தில் தடுமாறினர்.

அவர் என்ன செய்கிறார் என்பதைக் கண்டறிய பேராவல் கொண்டவராக ஓர் உறவினர் அவருடைய வீட்டிற்குச் சென்று அவரைக் காண முடிவு செய்தார். வாடகைக் கார் ஒன்றில் அவருடைய இல்லம் நோக்கிச் சென்றார். சேப்மேன் வீட்டின் வாசலில் வண்டி நின்றது.

"திருவாளர் சேப்மேனின் வீட்டிற்குப் போகச் சொன்னேன். இங்கு வந்து நிறுத்துகின்றீரே" என்று காரோட்டியை அந்த உறவினர் கடிந்துகொண்டார். "இதுதான் ஐயா அவருடைய வீடு" என்னும் பதிலைக் கேட்ட உறவினர் அதிர்ச்சியடைந்தார்.

வீட்டின் உள்ளே நுழைந்த உறவினருக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. "இராபர்ட், இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்" என்று வினவினார் உறவினர்.

"கர்த்தர் என்னை அனுப்பிய இடத்தில் அவருக்காக ஊழியம் செய்கிறேன்" என்று சேப்மேன் விடை கூறினார்.

"உங்களுடைய தேவைகள் எவ்வாறு சந்திக்கப்படுகின்றன. உங்களுடைய வங்கிக் கணக்கில் தேவையான பணம் இருக்கிறதா?" என்று ஆதங்கத்தோடு வினவினார் அந்த உறவினர்.

"நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன். என்னுடைய தேவைகளை அவரிடம் சொல்லுவேன். என்னுடைய தேவைகளை அவர் சந்திக்காமல் போனதேயில்லை. அதனால் என்னுடைய விசுவாசம் பெருகுகிறது. ஊழியமும் தொடர்கிறது" என்று அமைதியோடு பதிலுரைத்தார் சேப்மேன்.

அடுக்களைக்குச் சென்று பார்த்த உறவினருக்குத் தூக்கி வாரிப்போட்டது. உணவு ஆயத்தம் செய்ய ஒரு பொருளும் இல்லை. மளிகைப் பொருட்களை வாங்கிவருவதாக உறவினர் கூறினார். சரியென்று ஒப்புக்கொண்ட சேப்மேன், உறவினரை ஒரு குறிப்பிட்ட கடைக்குச் செல்லும்படியாகக் கேட்டுக்கொண்டார். அந்தக் கடைக்காரருக்கு சேப்மேனைக் கண்டாலே வெறுப்பு. பலமுறை கசப்புடன் பேசியிருக்கிறார். மிக அதிகமான தொகைக்குரிய பொருட்களை சேப்மேன் வீட்டிற்கு அனுப்பும்படி வந்தவர் பணத்தைக் கொடுத்தவுடன் கடைக்காரருக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று. தானே எல்லாப்பொருட்களையும் எடுத்துக்கொண்டு கடைக்காரர் சேப்மேனின் இல்லம் நோக்கிச் சென்றார். அவரைச் சந்தித்தக் கடைக்காரரின் கண்களில் கண்ணீர் பெருகிற்று. அவர்மீது கொண்டிருந்த வெறுப்பை எண்ணி மனவருத்தம் அடைந்தார். தனது பாவத்தை உணர்ந்து மன்னிப்பு வேண்டினார். அதுமட்டுமின்றி, அன்றைய தினமே கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டவராக அவர் தம் இல்லம் திரும்பினார்.



சேப்மேனுடைய ஊழியத்தில் விருந்தோம்பல் முக்கிய பங்கு வகித்தது. தனது வீட்டிற்கு எதிரே இருந்த வேறொரு வீட்டை விலைக்கு வாங்கினார். கர்த்தருக்கு விருப்பமான மக்கள் அங்கு விருந்தினர்களாக வருகைபுரிய வேண்டுமென்று அவர் ஜெபிக்கத் தொடங்கினார். அந்த வீட்டில் தங்குவதற்குக் கட்டணம் ஏதுமில்லை. என்றைக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்பதையும் சொல்ல வேண்டியதில்லை. விருந்தினர்கள் தங்களுடைய காலணிகளை ஒவ்வொரு நாள் இரவிலும் அவரவர் அறைக்கு வெளியே வைத்துவிடும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுவர். காலையில் காலணிகள் அனைத்தும் பளிச்சென்று இருக்கும். தம்முடைய விருந்தினர்களின் கால்களை இவ்வகையில் திரு சேப்மேன் கழுவினார். விசுவாச வாழ்க்கையைக் குறித்தும், கர்த்தருடைய மக்களுக்கு சேவைபுரிவது பற்றியும், திருமணமாகாத இளைஞருடைய விருந்தோம்பலின் மூலமாகக் கற்பிக்கப்பட்டது எத்தனை வியப்பளிக்கிறது.

"விருந்து பரிமாறும் வேளையில் அந்த இடம் களிகூரும் இடமாகத் திகழ்ந்தது. ஞானம் நிறைந்த சொற்கள் அங்கே பேசப்பட்டன. கிருபையினால் நிறைந்த வார்த்தைகள் கேட்கப்பட்டன. பயனற்ற வீண் பேச்சுகளுக்கு அங்கு இடமில்லை. அங்கு இல்லாத ஒருவரைப் பற்றித் தரக்குறைவாகப் பேசக்கூடாது என்பது அந்த வீட்டின் விதியாகும். அந்த விதியை மீறுகிறவர்கள் கண்டிப்பான முறையில் கடிந்துகொள்ளப்படுவார்கள். எனினும் அந்தக் கடிந்துகொள்ளுதல் கிருபையுள்ளதாக இருக்கும்."

நற்பண்புகள் மிகுந்த இராபர்ட் சேப்மேனுடைய அன்பு பாராட்டும் தன்மை எல்லாராலும் அறியப்பட்டிருந்தது.

தனக்கும் சேப்மேனுக்கும் எந்த உறவும் இல்லை, அவரோடு இனி ஒருக்காலும் பேசப்போவதுமில்லை என்று ஒருவர் சபதம் செய்திருந்தார். தம்மைக் குறைகூறித் திரிந்த அந்த மனிதனை ஒருநாள் சேப்மேன் சந்திக்க நேர்ந்தது. இருவரும் நடைபாதையில் எதிரெதிரே நடந்து வந்துகொண்டிருந்தனர். அந்த மனிதன் தன்னைக் குறித்துச் சொன்ன எல்லாவற்றையும் சேப்மேன் அறிந்திருந்தார். இருவரும் ஒருவரையொருவர் நெருங்கியபோது, சேப்மேன் அவருடைய தோளில் தனது கரத்தைப் போட்டவராக, "அன்புள்ள சகோதரனே, தேவன் உங்களிடத்தில் அன்புகூருகிறார், கிறிஸ்து உங்களிடத்தில் அன்புகூருகிறார், நானும் உங்களிடத்தில் அன்புகூருகிறேன்" என்று கூறினார். அந்த மனிதன் மனம் வருந்தினார், சபையின் ஐக்கியத்திற்கு மீண்டும் வரலானார்.

நம்புவதற்கு அரிய ஒரு நிகழ்ச்சி. வெளிநாட்டிலிருந்து அவருக்கு ஒரு நண்பர் மடல் எழுதினார். "*R. C.* சேப்மேன், அன்பின் பல்கலைக் கழகம், இங்கிலாந்து" என்று மேல் முகவரியாக உறையில் எழுதி, அக்கடிதத்தை அனுப்பி வைத்தார். அந்த மடல் அவரை வந்து சேர்ந்தது!

கிறிஸ்தவச் சபைப் பாகுபாடுகளை அவர் விரும்பவில்லை. ஒவ்வொரு உண்மையான தேவனுடைய பிள்ளையினிடத்திலும் அவர் அன்பு பாராட்டுகிறவராக இருந்தார். ஒருவர் எந்தச் சபைப் பாகுபாட்டைச் சார்ந்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவரிடம் அன்பு செலுத்திய சேப்மேனின் பண்பு போற்றுதற்குரியது. அவர் ஐக்கியம் கொண்டிருந்த சபையில் ஒரு கூட்டத்தார் பிரிந்து செல்ல விரும்பினர். மேலும் அவர்களுக்குத்தான் சபைக் கட்டிடம் சொந்தமானது என்றும் கூறினர். அவர்களுடைய கோரிக்கைக்கு இசைந்து கொடுத்தார் சேப்மேன். சபைக்கூடம் கட்டுவதற்காக வேறொரு இடத்தை வாங்கினார். ஆனால் அந்த இடத்தில் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று நகரசபை தீர்மானித்தது. அந்த இடத்தையும் நகர சபைக்குக் கொடுத்துவிட்டார். எல்லாச் சட்ட நுணுக்கங்களையும் அறிந்தவராயிருந்தும் சேப்மேன் நீதி வேண்டி நீதிமன்றத்தை நாடவில்லை. அவருக்கு எதிராக எழுந்த தனிப்பட்ட பிரச்சனைகளிலும் அவர் எவ்விதத்திலும் துரிதமாகச் செயல்படவில்லை. அந்நேரங்களில் ஜெபத்தையே நாடினார். ஒரு பிரச்சனையின்போது *J. N.* டார்பி முன்பின் ஆராயாமல் துரிதமாய் நடந்துகொண்டார். அதைக் கண்ட சேப்மேன் அவரைக் கடிந்துகொண்டார். "ஆறு வாரங்கள் காத்திருந்தோம்" என்று கூறி டார்பி தான் நடந்துகொண்டவிதம் சரியென்று வாதிட்டார். "ஆறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்" என்று பதிலுரைத்தார் சேப்மேன்.



ஒவ்வொரு அலுவலுக்கும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவதில் சேப்மேன் ஒழுங்கைக் கடைப்பிடித்தார். ஜெபம், வேதம் வாசித்தல், உணவு, வீடுகள் சந்திப்பு, பசியுற்றோருக்கு உணவளித்தல், ஆதரவற்றோருக்கு உதவிசெய்தல், வெளிப் பிரசங்கம், வேதபாட வகுப்புகள் என்று ஒவ்வொரு வேலைக்கும் அவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கியிருந்தார். சனிக்கிழமைகளில் அவர் உபவாசத்தைக் கடைப்பிடித்தார். அன்று தனது பட்டறையில் வேலை செய்வார். பலகையில் தட்டுகளைச் செய்து மக்களுக்கு அதை அன்பளிப்பாகத் தருவார்.

சேப்மேனின் வாழ்க்கை வரலாற்றைப் பலர் எழுதினார்கள். அவர்களில் ஒருவர் ஃபிராங் ஹோம்ஸ். அவர் கூறுவதைக் கேளுங்கள்:

> "இவருடைய பரிசுத்த வாழ்க்கை, நற்பண்புகளின் நிறைவு, தன்னையே தியாகமாக அர்ப்பணித்த நிலை ஆகியவற்றில் ஒரு சிலரே இவருக்கு ஈடாக முடியும். எனினும் இவர் ஒரு சிறு குழந்தையைப் போல எளிமையும் தாழ்மையும் உடையவராக விளங்கினார்... ஆவிக்குரிய நிலையில் இவர் ஒரு பலவான். தற்புகழைப் பறைசாற்ற வேண்டுமென்ற எண்ணம் அவருடைய உள்ளத்தில் ஒரு துளிகூட இல்லை. ஜென்ம சுபாவத்திற்குக் கொஞ்சமும் அவர் இடம் கொடுக்கவில்லை."

மக்கள் மத்தியில் கிறஸ்துவுக்கென்று ஒரு தாக்கத்தை உருவாக்க வேண்டுமென்றால் சராசரி மனிதர்களைப் போலன்றி புதுமை மனிதர்களாக வாழ வேண்டும் என்று இயேசு கிறிஸ்து தம் சீடர்களுக்குக் கற்பித்தார். திருவாளர் *R. C.* சேப்மேன் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவின் எண்ணங்கள் நிறைவேறின. இந்த உலகத்தை அறவே ஒழித்த வாழ்க்கையை வாழும்படியாக சேப்மேன் மாறிய காரணத்தை அறிய ஓர் உறவினர் பேராவல் கொண்டார். "தன் அறிவிற்குப் புலப்படாத உள்ளார்ந்த உணர்வுகளே சேப்மேனை இப்படிப்பட்ட வாழ்க்கையை மேற்கொள்ளச்

செய்தது" என்று அவர் உணர்ந்து கொண்டார். தன்னிடத்தில் என்ன குறை இருக்கிறது என்பதையும் அவர் கண்டறிய விரும்பினார். "தன்னுடைய நிலை என்னவென்பதை அவர் சேப்மேனிடம் வெளிப்படையாகக் கூறினார். இருவரும் சேர்ந்து ஜெபித்தனர். இருவரும் சேர்ந்து திருமறையைப் படித்தனர். அந்த உறவினர் வீடு திரும்பியபோது மாற்றம் அடைந்தவராகக் காணப்பட்டார்."

இந்தக் காலம் சொற்புரட்டு மிகுந்த காலமாகும். மனிதர்கள் தன்னலம் பேணி ஏமாற்றுகின்றனர், தந்திரமாய்க் காரியங்களைச் சாதித்துக்கொள்கின்றனர். ஆனால் இராபர்ட் சேப்மேனது வாழ்க்கை வேற்றுவகை மனித வாழ்க்கையாகக் காட்சியளித்தது. வேறொரு கோளில் இருந்து வந்தவரைப் போன்று அவர் காணப்பட்டார். "உன்னதமானருவடைய மறைவில் இருக்கிறவராக" அவரது வாழ்க்கை காணப்பட்டது. "சர்வ வல்லவருடைய நிழலில்" அவர் தங்கியிருந்தார். இப்படிப்பட்ட மனிதர்களைப் பற்றியே A. W. டோசர் இவ்வாறு எழுதினார்:

> உண்மையான ஆவிக்குரிய மனிதன் விசித்திரமான புதுமை மனிதனாகவே இருக்கிறான். அவன் தனக்கென்று வாழாமல் கர்த்தருடைய எண்ணங்களை உயர்த்திக் காட்டவே வாழ்கிறான். தன்னுடைய கர்த்தருக்கு எல்லாவற்றையும் ஒப்புவிக்கும்படி மக்களை உற்சாகப்படுத்துவதையே நாடுகிறான். தனக்கு ஒரு பங்கைத் தரும்படி அவன் வேண்டுகிறதில்லை. தான் கனப்படுத்தப்படுவதில் அவன் களிகூருகிறதில்லை. மற்றவர்களுடைய பார்வையில் இரட்சகர் மகிமையடைய வேண்டுமென்பதே அவனுடைய விருப்பமாக இருக்கிறது. தன்னுடைய கர்த்தர் உயர்த்தப்படவேண்டும் என்பதும் தான் குறைவுபட வேண்டும் என்பதும் அவனுடைய மகிழ்ச்சியாகும்.
>
> தன்னுடைய தலையாய விருப்பத்திற்கு ஏற்ப பேசுகிற மனிதர்களை அவன் காணாததால், பெரும்பாலும் அமைதியாகவே இருக்கிறான். சமயத்தைத் தொழிலாகக்கொண்டு கூச்சலிடும் மக்கள் கூட்டத்தின் நடுவில் அவன் வேறுவகை மனிதனாகக் காணப்படுகிறான். கர்த்தரைப் பற்றிய சிந்தனையில் அவன் ஈடுபாடு கொண்டவனாக இருக்கிறான். ஆகவே பிறர் அவனைக் குறித்து மந்தமானவன் என்றும், வீண் கவலை கொள்கிறவன் என்றும் கூறுவர். ஆகவே அவனை எவரும் விரும்புவதில்லை. சமுதாயத்திற்கும் அவனுக்கும் இடையே உள்ள இடைவெளி அதிகரிக்கிறது. தந்தத்தினால் செய்த அரண்மனையிலிருந்து வருகிற, வெள்ளைப்போளம், சந்தனம், லவங்கம் ஆகியற்றின் வாசனை உடைய ஆடைகள் அணிந்த நண்பர்களை அவன் தேடியலைகிறான். அவ்வாறான நண்பர்களை அவன் காணாததால் மரியாளைப் போன்று எல்லாவற்றையும் தனது இருதயத்தில் வைத்து வைக்கிறான்.



இந்தத் தலைமுறையில் உண்மையான ஆவிக்குரிய விசுவாசிகளாகத் திகழ்வதை நமது நோக்கமாகக் கொள்வோமாக.

4

# வேதனையில் ஆறுதல்



**ஆஸ்த்ரேலியா** நாட்டைச் சேர்ந்த ஒரு விதவையைக் குறித்த மறக்கமுடியாத கதையைப் பல ஆண்டுகளுக்கு முன்னர் திரு. *H. A.* அயன்சைடு கூறினார். "அந்தக் கிறிஸ்தவத் தாயார் தேவனுடைய மகளாக விளங்கினார். அவருடைய ஆவிக்குரிய ஆழத்தை அப்பகுதி மக்கள் அனைவரும் அறிந்திருந்தனர். கர்த்தரிடத்தில் அப்பெண்மணி கொண்டிருந்த அசையா நம்பிக்கையும், அவருக்குத் தன்னை முற்றிலுமாக ஒப்புவித்திருந்த தன்மையும் அவருடைய வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க அம்சங்களாயிருந்தன."

அப்பெண்ணின் கணவர் இறந்த பின்பு தனது ஐந்து குமாரர்களையும் வளர்க்க வேண்டிய பொறுப்பு அவர் மீதே விழுந்தது. "அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்" (சங். 146:9) என்னும் வசனத்தின் மூலமாக அப்பெண்மணி தனக்குத் தேவையான இறை வலிமையைக் கண்டடைந்தார். அதுவே அவருடைய வாழ்வின் பெலனாக இருந்தது. அந்த வாக்குறுதியைத் தனது உரிமையாகக் கொண்டாடி வாழ்க்கையை நடத்தி வந்தார். ஆண்மக்கள் ஐவரும் "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளரும்" மேன்மையான நற்பேற்றைப் பெற்றிருந்தனர். ஏற்ற காலத்தில், அவர்கள் ஐவரும் இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக அறிக்கை செய்தனர்.



யுத்தம் மூண்டது. நாட்டைப் பாதுகாப்பதற்காக இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த ஐந்து இளைஞரும் படையில் சேர்ந்தனர். அவர்களது விருப்பத்திற்கிணங்க ஐவரும் ஒரே படைப்பிரிவில் பணியாற்றினர். அவர்களது தாயார் ஒவ்வொரு நாளும் அவர்களைக் கர்த்தரிடத்தில் ஒப்புவித்து மன்றாடுவார். அவர்களது வாழ்வு அவருடைய கவனிப்பிலும் வழிநடத்துதலிலும் இருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தார்.

ஒருநாள் பகலில் அந்தத் தாயார் ஒரு மனிதன் தன்னுடைய வீடு நோக்கி வருவதைப் பார்த்தார். அந்த மனிதன் யார் என்பதை அவர் அறிவார். அந்தச் சிற்றூரில் போதகராகப் பணியாற்றும் அவருக்கு அரசாங்கம் வேறொரு வேலையையும் கொடுத்திருந்தது. போரில் உயிரிழந்தோர் மற்றும் காணாமல் போனவர்கள் ஆகியோரது இல்லங்களுக்குச் சென்று அந்தச் செய்தியை அறிவிக்க வேண்டிய வேலை அவருடையது. பக்திமிக்க ஊழியருக்கு இந்த வருத்தத்திற்குரிய பொறுப்பும் இருந்தது.

அவரைக் காண வாசல்வரை வந்து நின்றார் அந்தத் தாயார். அவ்வூழியரின் கையில் சிவப்பு நிற தந்தி ஒன்று இருந்தது. அந்தத் தாயார் தனது இதயத்துடிப்பை உணர்ந்தார். ஆனாலும் வந்தவரை வரவேற்க மறக்கவில்லை. கர்த்தருக்குள் வாழ்த்துதல் கூறி வரவேற்றார். போதகரும் வாழ்த்துதல் கூறி உள்ளே நுழைந்து இருக்கையில் அமர்ந்தார். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.

கடைசியில் அந்தத் தாயாரே மனதைத் திடப்படுத்திக் கொண்டு வினவினார்:

"எந்த மகன்?"

போதகருக்கு விடை சொல்வது மிகக் கடினமாக இருந்தது. பதிலைக் கூறினால் தாயார் அதைத் தாங்கிக் கொள்ள இயலாது போய்விடுவாரோ என்று அஞ்சினார். தனது ஐந்து குமாரர்களில் யார் போர்க் களத்தில் மடிந்தது என்பதை அறிய அவரது மனம் ஏங்கியது.

"ஐந்து பேரும் போரில் மடிந்துவிட்டனர்" என்று தடுமாற்றத்துடன் அவர் கூறினார். தாயின் முகம் வெளிறிற்று.

தாடை நடுங்கியது. கண்கள் கண்ணீரில் நிறைந்தன. பின்னர் நம்பிக்கையின் ஆவியினால் நிறைந்தவராய், "அவர்கள் யாவரும் கர்த்தருடையவர்கள். தம்மோடு இருக்கும்படியாக அவர் அவர்களை எடுத்துக் கொண்டார்" என்று அவர் பதில் கூறினார்.

இருவரும் முழங்காற்படியிட்டு ஜெபித்தனர்.

"அந்த அம்மையார் கூக்குரலிட்டு அழவில்லை, முறுமுறுக்கவில்லை, உள்ளத்தில் கசப்படையவில்லை, குறை கூறவுமில்லை. தங்களது நாட்டிற்காகப் போர்க்களம் சென்றபோது உடன்படிக்கையின் தேவனிடத்தில் தனது குமாரர்களை ஒப்புவித்தே அனுப்பினார். எல்லா அறிவிற்கும் அப்பாற்பட்ட சமாதானத்தை அவர் உடையவராயிருந்தார். கர்த்தரே அன்னாரது வேதனையில் ஆறுதலாக விளங்கினார். ஆண்டாண்டு காலமாய் ஆற்றிய பிரசங்கங்களை விட அவரது சாட்சியே அச்சிற்றூரில் மேலானதாக விளங்கியது."

கிறிஸ்தவர்கள் அனைவரும் இவ்விதச் சூழ்நிலையில் அந்தக் கிறிஸ்தவத் தாயாரைப் போன்றே நடந்துகொள்வார்கள் என்று நாம் கூறமுடியாது. ஈடுசெய்ய இயலாத இப்பேரிழப்பைத் தாங்கிக்கொள்ளும் வலிமையைக் கர்த்தர் தாமே அந்தப் பெண்மணிக்குச் சிறப்பான முறையில் கிருபையாகத் தந்தருளினார். தமக்கு இன்பமானவர்கள் இவ்வுலகினைவிட்டு எடுத்துக் கொள்ளப்படும் வேளையில் மனிதர்கள் அழுவது வெட்கத்திற்குரியதன்று. அதைத் தோல்வி மனப்பான்மை என்று சொல்வதற்கும் இடமில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே கண்ணீர்விட்டார் என்று வாசிக்கிறோம். எனினும், கிறிஸ்தவர்களுடைய வாழ்வில் கொடிய சோக நிகழ்ச்சிகள் நடக்கும்போது உலகத்தாரினின்று வேறுவிதமாக அவர்கள் நடந்துகொள்கின்றனர். அதைக் காணும் உலகத்தார் வியப்படைகின்றனர். தேவனுடைய வாக்குறுதிகளை விசுவாசிகள் தங்களுக்கு உரியதாக ஆக்கிக்கொள்ளும்போது மற்றவர்களுடைய புத்திக்குப் புலப்படாத உன்னதத்திலிருந்து பெறும் மகத்தான ஈவுகளை உடையோராய், புதுமை மனிதராய்த் திகழ்கின்றனர்.

# 5

## கீழ்ப்படிதலின் விலை



**பட் புரூங்கேயின்** வாழ்க்கையில் அந்நாட்களை வசந்தகாலம் என்றுதான் சொல்லவேண்டும். அவருடைய அன்புக்கினிய மனைவி ஜேனிஸ், அருமையான ஆறு குழந்தைகள், வீட்டில் இன்பமான சூழ்நிலைக்குக் காரணமாக விளங்கினர். இல்லியனாய்ஸ் மாநிலத்தில் உள்ள எல்ஜின் விமானத்தளத்தில் இறங்கும் விமானங்கள் அனைத்தும் செவ்வையாகச் செயல்புரிகின்றனவா என்பதைக் கண்டறிந்து பழுதுபார்க்கும் நிறுவனத்தின் உரிமையாளர் இருவரில் அவரும் ஒருவர். நல்ல வருமானம். ஆகவே இவ்வுலகம் அவருக்கு மகிழ்ச்சியின் கிண்ணமாகத் தோன்றியது. இதுவே அவருடைய எண்ணமாக இருந்தது.

அந்த மகிழ்ச்சி அவருடைய வாழ்வில் நிலைத்திருக்கவில்லை. காலம் செல்லச் செல்ல அவருடைய உள்ளம் அமைதியை இழந்தது. அவருடைய ஆவிக்குரிய நிலை அவரை அலைக்கழித்தது. அவ்வூர் லூத்தரன் கிறிஸ்தவ ஆலயத்தில் உண்மையான கிறிஸ்தவர் என்ற பெயர் பெற்றிருந்தார். உதவிக்காரர் பதவியும் வகித்தார். ஆனாலும் அது அவருக்கு மன நிறைவு அளிக்கவில்லை. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது பற்றி அவர் உள்ளத்தில் ஏற்பட்ட ஐயமே அவருடைய குழப்பத்திற்குக் காரணமாயிற்று. ஒரு சிறு குழந்தையின் தலையில் ஒருசில நீர்த்துளிகளைத் தெளிப்பதால் அக்குழந்தை கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக மாறும் என்பதும், அதன் காரணமாக அக்குழந்தை இறை அரசின் வாரி

ாக மாறும் என்பதும் அவருக்குப் புரியாத புதிராக இருந்தன. அக்கூற்றை அவருள்ளம் ஏற்றுக்கொள்ள மறுத்தது.

இந்நிலையில் அவருடைய வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடந்தன. மாலைநேர வேதாகமப் பள்ளியில் சேர்ந்து வேதத்தைக் கற்கலானார். ஒருசில வாரங்களில் அவருடைய ஆத்துமாவில் ஒளி பிரகாசித்தது. ஒருநாள் தொலைக்காட்சியில் நற்செய்தி நிகழ்ச்சி ஒன்றைக் கண்டபோது அவர் தன்னை ஆண்டவருக்கு ஒப்புவித்து மெய்யான கிறிஸ்தவரானார்.

எடுத்த எடுப்பிலேயே, திருமறையைக் கற்கவும், அதற்குக் கீழ்ப்படியவும் அவருள்ளத்தில் வேட்கை பெருகிற்று. தான் இரட்சிப்படைந்துவிட்டதாலே இனி எவ்விதப் பிரச்சனையும் உண்டாகாது என்று எண்ணியவருக்கு, தனது எண்ணம் தவறு என்பதை அறிவதற்கு அதிக நாட்கள் ஆகவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பிரச்சனை தலை தூக்கியது. தனது நிறுவனத்தின் மற்ற பங்குதாரர் விசுவாசி அல்லவே என்பதுதான் அந்தப் பிரச்சனை. இதுவரை அவருக்கு அது பிரச்சனையாகத் தோன்றவில்லை. ஆனால் 2 கொரிந்தியர் 6:14-18 ஆகிய வசனங்கள் அவரோடு தொடர்ந்து பேசின:

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2 கொரி. 6:14–18).

"அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" என்னும் வசனத்தைப் படிக்கும்போதெல்லாம் வாளின் கூர்முனை நெஞ்சைக் குத்துவதுபோல பட் நினைத்தார். ஆம், அது உண்மைதான். இப்பொழுதோ அவருக்கும் அவருடைய



கூட்டாளிக்கும் தொழிலை நடத்தும் முறையிலும், எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதிலும் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. தொழிலில் முறையற்ற செயல்கள் கையாளப்பட்டதை பட் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. முன்னர் அந்த முறைகேடுகள் அவருக்குப் பாரமாகத் தோன்றவில்லை. இப்பொழுதோ அவை அகோரக் காட்சியளித்தன. ஒரே நுகத்தில் எருதும் கழுதையும் பூட்டப்பட்டது போன்று அது காணப்பட்டது. அவர்களால் ஒன்று சேர்ந்து இழுக்கமுடியவில்லை.

தான் என்ன செய்ய வேண்டுமென்பதை பட் அறிந்திருந்தார். அந்நிய நுகத்திலிருந்து அவர் விடுதலை பெறவேண்டும். ஆயினும் அந்தத் தொழிலையே அவருடைய குடும்பம் சார்ந்திருந்தது. தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது அவருடைய கடமையல்லவா? குடும்பத்தைப் பராமரிக்கிறதற்கு வேறு எங்கிருந்து வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்? வேறு வழி எதுவும் தெரியவில்லை.

முதலாவதாக, சபையின் மூப்பர் ஒருவரைக் கலந்து ஆலோசிக்க அவர் தீர்மானித்தார். நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் அவரிடம் கூறினார். இருதலைக்கொள்ளி எறும்பு போலத் தன்னுடைய நிலை இருப்பதையும் எடுத்துரைத்தார்.

"இதில் பெரிய பிரச்சனை ஏதும் இல்லை. உங்களுடைய கூட்டாளியின் பங்கை நீங்கள் விலை கொடுத்து வாங்கி விடுங்கள். தொழில் உங்களுக்குச் சொந்தமாகும். அப்பொழுது திருமறைக்கு ஏற்றபடி நீங்கள் தொழிலை நடத்தலாம்" என்று அந்த மூப்பர் ஆலோசனை கூறினார்.

"என்னிடத்தில் அவ்வளவு பணம் இல்லையே."

"அப்படியானால், உங்களுடைய பங்கை அவருக்கு விற்று விடுங்கள். அவ்வாறு ஏன் நீங்கள் செய்யக்கூடாது?"

அது நல்ல ஆலோசனையாகத் தோன்றியது. தன்னுடைய கூட்டாளியுடன் பட் இதுபற்றிப் பேசினார். உடனடியாக அந்தக் கூட்டாளி இந்த யோசனைக்கு ஒப்புக்கொண்டது அவருக்கு மிகுந்த வியப்பளித்தது. 40000 டாலர்கள் பணம் தருவதாக அவர் ஒப்புக்கொண்டார். உண்மையிலேயே இது நல்லதொரு உடன்பாடாகத் தோன்றியது. பணம் கொஞ்ச

மாக கொஞ்சமாக வரத் தொடங்கியது. ஒவ்வொரு மாதமும் 200 டாலர் கிடைத்தது. காலம் செல்லச்செல்ல பணம் ஒழுங்காக வரவில்லை. வங்கியில் காசோலை பணமாக மாறவில்லை. "பணம் இல்லை" என்ற குறிப்புடன் காசோலைகள் திரும்பிவரத் தொடங்கின.

அந்தக் கூட்டாளி நீதிமன்றத்தில் 'திவாலா' கணக்கு சமர்ப்பித்தது பட் அவர்களுக்கு எவ்வித வியப்பையும் ஏற்படுத்தவில்லை.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" என்னும் கட்டளைக்குக் கீழ்ப்படிய பட் முடிவுசெய்தது அவருக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது. அவர் என்ன செய்திருக்க வேண்டும்? அவர் செய்ததில் தவறேதுமில்லை. ஆனால் தேவன் தமது வாக்குறுதியை மறக்கவில்லை. "அப்பொழுது, நான் உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்" (2 கொரி. 6:18). சிறிது காலத்திற்குள்ளாக அவருக்கு நல்லவேலை கிடைத்தது. ஒரு கிறிஸ்தவரிடத்தில் பட் வேலைக்குச் சேர்ந்தார். இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து அங்கே வேலை செய்தார். 65 வயது நிரம்பியபோது அலுவலில் இருந்து ஓய்வு பெற்ற பட், தான் இழந்த தொகையைப் போன்று மூன்று மடங்கு பணத்தைப் பெற்றார். இதுவே தேவ செயல். தேவன் ஒருவருக்கும் கடனாளியாக இருப்பதில்லை.

# 6

## உடைந்த உள்ளம் அடைந்த வெற்றி



**ஒரு புகழ்பெற்ற** செய்தித்தாள் நிறுவனத்தில் மேல்நிலை பத்திரிக்கை நிருபராக டேவிட் ஏக்மன் பணிபுரிந்தார். ஹாங்காங்கில் அலுவல் புரிந்த அவர் நற்சாட்சி பெற்ற கிறிஸ்தவராக விளங்கினார். கர்த்தருக்கு வெளியரங்கமாகச் சாட்சி பகர்வதற்கு ஒருபோதும் அவர் தயங்கியதில்லை.

இவருடைய மேல்அதிகாரியாகிய செய்தித்துறைத் தலைவர் தன்னுடைய புனிதமற்ற சொற்களினாலே தேவனை நிந்திக்கிறவராயிருந்தார். கர்த்தருடைய பெயரை வீணிலே வழங்காமல் அந்த மனிதனால் பேசவே முடியாது. கர்த்தர் பேரில் ஆணையிட்டுப் பேசுவதும் அவருடைய வழக்கமாயிருந்தது. இது ஏக்மனுக்கு பெருந்தொல்லையாக இருந்தது. தன்னுடைய கோபத்தை அடக்கிக்கொண்டவாறே எப்பொழுதும் அவர் தன் மேலதிகாரியிடம் பேச வேண்டியதாயிருந்தது. எனினும் உள்ளத்தில் கொதிப்பு ஏறிக்கொண்டே போயிற்று.

ஒருநாள் அடக்கிவைத்த கோபம் வெடித்துச் சிதறியது. அன்று அந்த மேலதிகாரி மிகவும் ஈனமான சொற்களைக் கூறி தேவன்மீது சபதம் செய்தார். "தேவனுடைய நாமத்தை நீங்கள் வீணிலே வழங்குகிறது எனக்குப் பிடிக்கவில்லை. இதை நான் சொல்வதற்காக என்னை மன்னியுங்கள்" என்று ஏக்மன் கூறினார். இந்த வார்த்தைகளைக் கிருபை

நிறைந்தவராகவோ அமைதியாகவோ சொல்லாமல் கடுங் கோபத்துடன் அவர் கூறினார். இதைக்கேட்ட தலைவர் பொறுத்துக்கொள்ளவில்லை, நல்லாலோசனையாகவும் கருதவில்லை. மிகுந்த கோபத்துடன், "நீர் இவ்வாறு பேசுவதை நான் விரும்பவில்லை" என்று வெடுக்கெனப் பதிலுரைத்தார்.

இந்த நிகழ்ச்சி நடந்த பிறகு ஏக்மன் உள்ளத்தில் மன நிறைவு ஏற்பட்டது. அது பெருமையாகவும் இருந்தது. அவர் தலைவரில் உரைக்கும்படி சொல்லிவிட்டோம் என்ற பெருமிதத்தில் இருந்தார் ஏக்மன். இந்தப் பிரச்சனை இனி தொடராது. ஈனமான சொற்களை இனி கேட்கத் தேவையில்லை. ஒரு கடினமான பிரச்சனையைச் சாமர்த்தியமாக எதிர் கொண்டதாகவே அவர் நினைத்தார். எல்லாம் நன்றாய் நடந்ததா?

ஆனால் தன் சாட்சியத்தை "ஊதி அணைத்துவிட்டதாக" அதன் பின்னரே ஏக்மன் உணர்ந்தார். அவர் மேலதிகாரியிடம் கூறியது சரியானது என்றாலும் சொன்னவிதம் சரியில்லை. அவருடைய சாட்சி களங்கப்பட்டுவிட்டது. அவர்களுக்கிடையே இருந்த தொடர்பு அறுந்துவிட்டது. இந்த நினைவுகள் அவரைத் தொடர்ந்து தொல்லைகளுக்குட்படுத்தின.

ஏக்மன் மனஅமைதியின்றி தன்னுடைய படுக்கையில் படுத்திருந்தார். தான் ஒரு கிறிஸ்தவன், இப்பொழுது என்ன செய்யவேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தார். அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். "நாளைக்கு நான் அவரிடம் செல்வேன். எல்லாத் தவறும் என்னுடையது என்று ஒப்புக்கொள்வேன்" என்று அவர் தனக்குள்ளாகக் கூறிக்கொண்டார். இது அவருடைய பெருமைக்கு வந்த பேரிடி. அந்த மனிதனுக்கு முன்பாகத் தாழ்ந்து போகவேண்டுமே? ஆனால் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அடுத்த நாள் காலை தனது மேலதிகாரியின் அறையை நோக்கி விரைந்தார்.

ஏக்மன் தன் அதிகாரியிடம் பேச ஆரம்பித்தார். "இரண்டு காரியங்களைச் சொல்லிவிட்டுச் செல்கிறேன். ஒன்று, நம்முடைய உறவு முறிந்துவிட்டது. நாம் ஒருவரோடொருவர்



பேசிக்கொள்வதில்லை. நானே அதற்குக் காரணம். நான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்காக என்னை மன்னியுங்கள். உங்களிடம் எந்தத் தவறும் இல்லை. நானே தவறிழைத்தவன்" என்று அவர் கூறினார். இந்தச் சொற்களைக்கேட்ட அந்த அதிகாரி திகைத்து நின்றார்.

இப்பொழுது இரண்டாவது படியையும் கடக்க வேண்டும். "இரண்டாவதாக, இப்பொழுதிருந்து எல்லாவற்றிலும் உங்களுக்கே முதலிடம். ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய கதையை எழுத முதலுரிமை உங்களுடையது. நீங்கள் அதை எழுத விரும்பினால் எழுதுங்கள். உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் நான் அதை எழுதுவேன். நமக்குள்ளாகப் போட்டி எதுவும் இல்லை. எல்லாம் உங்களுடையது. விட்டுப் போனவைகளை நான் செய்கிறேன்" என்று ஏக்மன் தொடர்ந்து கூறினார்.

இவ்விதமாக மன்னிப்புக்கேட்கும் முறையும், தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுப்பதும் பத்திரிக்கை உலகத்தில் நடப்பதில்லை. செய்தித்துறைத் தலைவர் வாயடைத்துப் போனார். ஏக்மன் அந்த அறையை விட்டு வெளியேறினார். அவர்களுக்குள்ளாக இருந்த உறவு புதிப்பிக்கப்பட்டு விட்டது. அவருக்கு அது பெருமகிழ்ச்சி அளித்தது.

சில நாட்கள் சென்றன. ஒரு கிறிஸ்தவத் தொழிலதிபர் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அங்கு வேறொரு தொழிற்துறை வல்லுநர் தனது கிறிஸ்தவச் சாட்சியைக் கூறப்போகிறார். இதனைக் கேள்விப்பட்ட ஏக்மன் தனது மேலதிகாரியைச் சென்று சந்தித்தார். "ஒரு தொழிலதிபர் தான் தேவனிடம் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பற்றிப் பேசப் போகிறார். அந்த விருந்திற்கு நான் செல்லப்போகிறேன். அங்கு போவதற்கு உங்களுக்கு விருப்பமா?" என்று சற்று சந்தேகத்துடன் வினவினார். இவ்வாறான கூட்டங்களுக்கு அந்தத் தலைவர் செல்கிற வழக்கமில்லை. ஆனால் என்ன ஆச்சரியம், "நான் போகிறேன்" என்று சொன்னார். அந்த விருந்தில் அவர் கலந்துகொண்டார். அன்றைய நாளில் அவருடைய வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கூட்டத்தின்

முடிவில் செய்தித்துறைத் தலைவர் தன்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புவித்து இயேசு கிறிஸ்துவைத் தனது கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டார்.

“இப்பொழுது அந்த மனிதன் புது சிருஷ்டியாகிவிட்டார். அந்த நாளில் அவ்வாறு நான் நடந்திராவிட்டால் இவரைக் கிறிஸ்துவுக்காக வென்றிருக்க முடியாது” என்று மகிழ்ச்சிபொங்கக் கூறினார் ஏக்மன்.

இவ்வுலக அரங்கில் நிபந்தனையற்ற மன்னிப்பு என்பதை நாம் கேள்விப்படுவதில்லை. போட்டி போட்டுக் கொண்டு செயல்படும் இக்காலகட்டத்தில் உள்ளம் நொறுங்குண்ட நிலையில் தன்னுடைய உரிமை யாவற்றையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அரியதாயிருக்கிறது. ஆயினும், இத்தகைய வேற்றுலக நடத்தையினால், முரட்டுத்தனமான கீழ்நிலை மனிதர்களும் கிறிஸ்துவுக்கென்று வெல்லப்படுகின்றனர்.

# 7

## உன்னதமான பணி



**இந்திய நாட்டிற்கு** நற்செய்தியை ஏந்திச் செல்லும்படி டௌ நிக்கோல்ஸ் தேவனுடைய அழைப்பைப் பெற்றார். அந்த அழைப்பைக் குறித்து அவருக்கு எவ்விதச் சந்தேகமும் ஏற்படவில்லை. இந்திய நாட்டின் ஆவிக்குரிய நிலை கவலைக்குரியதாகவே இருந்தது. பல கோடி மக்கள் தவறான சமயப் பற்றுக்குள் சிக்கிக்கொண்டவர்களாக இருந்தனர். தேவனுடைய மெல்லிய சத்தம் அவருடைய செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. தேவன் தனது முதுகில் தட்டி அவ்வூழியத்திற்கு உற்சாகப்படுத்துவதை அவர் உணர்ந்தார்.

இவையாவும் உண்மையா? இப்பொழுது டௌ என்ன செய்துகொண்டிருக்கிறார்? எலும்புருக்கி நோயில் பாதிக்கப்பட்டவராக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு எங்கும் செல்லமுடியாமல் ஓர் அறையில் அடைந்து கிடக்கிறார். வசதிகள் அற்ற மருத்துவமனையில் பல நோயாளிகளுடன் ஒரே அறையில் படுத்துக் கிடப்பது அவ்வளவு எளிதானதல்ல. இந்த நோய் ஏன் வந்தது? இது வராதிருந்தால் எவ்வளவு நலமாக இருந்திருக்கும். கர்த்தருக்கென்று ஆக்கபூர்வமான பணிகள் ஏராளமாய்ச் செய்திருக்கலாமே!

இவ்வாறு நினைத்த டௌ மனந்தளரக் கூடாது என்று உறுதிபூண்டார். தன்னோடு தங்கியிருந்த மற்ற நோயாளிகளிடம் ஆண்டவரைக் குறித்துச் சொல்ல முடிவு செய்தார்.

நற்செய்தி அடங்கிய கைப்பிரதிகளைக் கையில் எடுத்துக் கொண்டார். ஒவ்வொரு படுக்கையாகச் சென்று கைப்பிரதியை வாங்கிப் படிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். அவர் எதிர்பார்த்த வரவேற்பு அவருக்குக் கிடைக்கவில்லை. மற்ற நோயாளிகள் அவரை வெறுக்கவே செய்தனர். ஒரு பணக்கார வெள்ளையர் இந்த மருத்துவமனையில் ஏன் தங்க வேண்டும்? அவர் இங்கு வரவில்லையென்றால் வேறு ஒரு இந்தியருக்கு அந்தப் படுக்கை கிடைத்திருக்குமே. இதுவே அவர்களுடைய எண்ணமாயிருந்தது. அவரைக் கண்ட அந்த மக்கள் தங்கள் முகத்தை வெடுக்கென்று திருப்பிக்கொண்டனர்.

ஆனால் தேவனோ அமைதியாக இருக்கவில்லை. அந்த மக்களுக்கு நற்செய்தியை அளிப்பதற்கு அவர் வேறொரு திட்டத்தை வைத்திருந்தார். டௌ மூலமாகவே அந்தத் திட்டமும் செயல்பட வேண்டும்.

ஓர் இரவில் அந்த அறையில் இருந்த வேறொரு நோயாளி கழிவறைக்குச் செல்ல எழுந்தார். மெலிந்த உடல், எழுந்து நடப்பதற்கு உடலில் தெம்பு ஏதும் இல்லை. தடுமாறி எழுந்தவர் மெதுவாகக் கழிவறையை நோக்கி நடந்தார். ஆனால் பாதி வழியிலேயே கீழே விழுந்தார். அங்கேயே மலமும் கழித்துவிட்டார். அவருடைய ஆடை முழுவதும் ஈரமாகிவிட்டது. அதுமட்டுமல்ல தரையில் சிறுநீர் பெருகி ஓடிற்று. அந்த அறை முழுவதும் தாங்க முடியாத துர்நாற்றம் வீசியது.

செவிலிகளும் தாதிகளும் அவரை நோக்கி வந்தனர். அந்த நோயாளியை வசைமாரிப் பொழிந்தனர். ஒரு பெண் அவரைக் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். அவர்கள்தானே அந்த அறையைச் சுத்தம் செய்யவேண்டும். அந்த அறையில் இருந்த நோயாளிகள் அனைவரும் மனம் உலைந்து போனார்கள்.

பகல் கழிந்தது. இரவும் கழிந்தது. அதிகாலையில் அந்தப் பரிதாபத்திற்குரிய நோயாளி கழிவறைக்குச் செல்லவேண்டும். படுக்கையிலிருந்து எழ முயற்சி செய்தார். ஆனால் முடியவில்லை. சற்று எழுந்தவர் படுக்கையிலேயே மீண்டும் சாய்ந்தார். கண்ணீர் வடிப்பதைத் தவிர அவர் வேறு என்ன செய்யமுடியும்?



கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட டௌ பலவீனமான நிலையில்தான் இருந்தார். ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. எழுந்து அந்த நோயாளியை நோக்கிச் சென்றார். அந்த நோயாளியைத் தனது கரங்களில் தூக்கிக் கொண்டு கழிவறைக்குச் சென்றார். அந்த மனிதன் காலைக் கடனை முடிக்கும்வரை அங்கேயே காத்திருந்து மீண்டும் அவரைத் தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினார்.

அதற்குள்ளாக அந்த அறையில் இருந்தவர்களெல்லாம் விழித்துக்கொண்டனர். நடந்தவற்றையெல்லாம் கண்டவர்கள் உள்ளத்தில் அந்த வெள்ளையரைக் குறித்த மனப்பான்மை மாறிற்று. அவர் அருகில் வந்த வேறொரு நோயாளி டௌவிற்கு தேநீர் வாங்கி வருவதாகக் கூறினார். தனக்கு ஒரு கைப்பிரதி வேண்டுமென்றும் கேட்டார். மருத்துவர்கள், செவிலிகள், தாதிப்பெண்கள் அனைவரும் அவரிடம் வந்து அன்போடு பேசினார்கள். யோவான் நற்செய்தி நூலை அவரிடமிருந்து வாங்கிச் சென்றார்கள். டௌ நிக்கோல்ஸ் வாழ்வில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் கண்ட சிலர், கர்த்தரை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

இந்தப் பூமிக்குரிய மனிதர்கள் பலர் பிறரிடம் இரக்கம் பாராட்டுகின்றனர். ஆனால் நாமோ அதைக் காட்டிலும் ஒருபடி கூடுதல் நற்கிரியை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய நடத்தைகளில் கிறிஸ்துவை வெளிப்படுத்திக்காட்ட வேண்டும். அத்தகைய செய்கைகள் இவ்வுலகத்தாருக்குப் புதுமையானவையாகத் தோன்றும். மெய் அன்பின் பிரதிபலிப்பு இயற்கைக்கு அப்பாற்பட்டது. நம்முடைய செயல்பாடுகள் உலகத்தாரின் செயல்பாடுகளுக்கு மேலானதாக விளங்கவில்லையெனில், அழிந்து போகிற ஆத்துமாக்கள் நற்செய்தியினால் எவ்வாறு தாக்கம் அடைவர்? எவ்வாறு அவர்கள் இரட்சிப்படைவர்?

# 8

## தாய்நாட்டிற்குப் பெருமை சேர்த்த மண்ணின் மைந்தன்



**ஸ்காட்லாந்து நாட்டைச்** சேர்ந்த எரிக் லிட்டெல் மாவீரன். அவர் வாழ்ந்த நாட்களில் ஸ்காட்லாந்தில் கிறிஸ்தவர்கள் இறைப்பற்று மிக்கவர்களாக விளங்கினர். ஒவ்வொரு வாரமும் அவர்கள் கர்த்தருடைய நாளைப் (ஞாயிற்றுக் கிழமையைப்) போற்றி மதித்து வந்தனர். அந்நாளைக் கிறிஸ்தவர்களுக்கான ஓய்வுநாள் என்றே அவர்கள் கருதி, கர்த்தருக்காகவே அந்நாள் முழுவதையும் அனுசரித்து வந்தனர். அன்றைய தினம் அவர்கள் வேலைக்குச் செல்வதில்லை. எவ்வித விளையாட்டிலும் ஈடுபடுவதில்லை. கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சென்று ஆராதனையில் கலந்து கொள்ளத் தவறுவதில்லை. ஞாயிறு அன்று வீதிகளில் கடைகள் யாவும் மூடியிருக்கும். போக்குவரத்து ஏதுமின்றி சாலைகள் வெறிச்சோடிக் கிடக்கும். அவசரத் தேவைகளுக்கு மட்டுமே வாகனங்கள் ஓடும்.

விசுவாசிகள் அந்த நாட்களை வெகு சிறப்பான முறையில் கர்த்தருக்காகவும் அவருடைய பணிக்காகவும் கைக்கொள்ளுவார்கள். கர்த்தரிடத்தில் அன்புகூருபவர், கர்த்தருடைய நாளிலும் அன்புகூர வேண்டும் என்பதே அவர்களுடைய எண்ணமாயிருந்தது.

எரிக் தனது பதினைந்தாவது வயதில் வாழ்க்கையின் மிகவும் இன்றியமையாத தீர்மானத்தை எடுத்தார். இயேசு கிறிஸ்துவைத் தனது கர்த்தராகவும் இரட்சகராகவும் அவர் ஏற்றுக்கொண்டார். ஓட்டப்பந்தயங்களில் கலந்துகொள்வதில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்த எரிக், தன்னுடைய வாழ்க்கையில் கர்த்தருக்கு முதலுரிமை கொடுப்பதில் எப்பொழுதும் தவறியதில்லை.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தன்னுடைய தாய்நாட்டிற்காக விளையாடுவதற்கு அவர் மாவிருப்பம் கொண்டிருந்தார். அதற்குரிய சந்தர்ப்பம் 1924-ஆம் ஆண்டில் வந்தது. அந்த ஆண்டில் பாரிஸ் மாநகரில் போட்டிகள் நடக்கவிருந்தன. 100 மீட்டர் தடகளப் போட்டியில் கலந்து கொள்வதற்காக எரிக் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவருடைய உள்ளம் உற்சாகத்தினால் நிரம்பி வழிந்தது. போட்டியில் கலந்து வெற்றிபெற வேண்டுமென்று அயராது ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தார். அவருடைய குதூகலம் தொடர்ந்து நீடிக்கவில்லை. ஏனெனில் 100 மீட்டர் தடகளப்போட்டி ஞாயிற்றுக்கிழமையில் நடக்கவிருந்தது. தன் உடன் வீரரிடமிருந்து இதனை அறிந்த எரிக் கவலையில் ஆழ்ந்துபோனார்.

“அது அப்படி இருக்கக்கூடாது”, “அது அப்படி இருக்கக் கூடாது” என்று தனது இதயத்தில் உண்டான வேதனையால் புலம்பினார்.

ஒரு தனிமையான இடத்தை நாடிச் சென்ற எரிக், நெடு நேரத்தை ஜெபத்திலே செலவிட்டார். ஜெபத்திலிருந்து எழுந்த எரிக் மனஉறுதியுடன் காணப்பட்டார். கர்த்தரையோ அவருடைய நாளையோ கனவீனப்படுத்தக் கூடாது என்று முடிவுசெய்தார். இவருடைய முடிவு எல்லாருக்கும் தெரிய வந்தது. அது பெரும் அமளியை உண்டுபண்ணியது. “உன்னுடைய நாட்டிற்கு இழுக்கை உண்டு பண்ணிவிட்டாய், நீ ஒரு துரோகி” என்று எல்லாரும் அவரை வசைபாட ஆரம்பித்து விட்டனர். “நீ இப்படிச் செய்யக்கூடாது” என்று பிரிட்டிஷ் குழுவின் மேலாளர் அவரிடம் கூறி அவரைக் கடிந்துகொண்டார். “என்னால் கர்த்தருடைய நாளில் விளையாட்டில் கலந்துகொள்ள முடியாது” என்று மிக அமைதியான முறையில் எரிக் பதிலுரைத்தார்.

இந்தச் செய்தி பத்திரிக்கைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது. பிரிட்டிஷ் விளையாட்டு சம்மேளனத் தலைவர்கள் கடுங்கோபம் கொண்டனர். இரக்கமற்ற முறையில்

தங்கள் கண்டனத்தைப் பத்திரிக்கைகள் வெளியிட்டன. அவரெடுத்த முடிவு சரியானதே என்று அவருடைய நண்பர்கள் வாதாடினர். அதனால் எவ்விதப் பயனுமில்லை. எல்லாரிடத்திலும் பாராட்டைப் பெற்றிருந்த எரிக் இப்பொழுதோ "விளையாட்டைக் கெடுக்க வந்தவர்" என்று பெயர் பெற்றார்.

அவ்வமயம் ஒலிம்பிக் செய்திகள் அறிவிப்புப் பலகையைச் சென்று பார்த்த எரிக்கிற்கு நல்லதொரு செய்தி அங்கு காத்திருந்தது. 400 மீட்டர் தடகளப்போட்டி ஞாயிற்றுக் கிழமையில் நடைபெறாது என்பதை அவர் அறிந்தார். இதுவரை அந்தப்போட்டியில் அவர் கலந்துகொண்டதில்லை, ஆனால் அதில் முயற்சி செய்யலாம் என்ற எண்ணம் அவருக்கு உண்டானது. உடனே குழு மேலாளரைச் சென்று பார்த்தார். 400 மீட்டர் தடகளப்போட்டியில் ஓட விரும்புவதாக அவர் கூறினார். பொதுவாக இவ்விதக் கடைசிநேர மாற்றங்கள் ஒலிம்பிக் போட்டிகளில் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் மேலாளர் உடனடியாக ஒப்புக்கொண்டது யாவருக்கும் மிகுந்த வியப்பை அளித்தது. முதல் சுற்றில் எரிக் ஓடி அதில் தகுதிபெற்றார். இரண்டாவது சுற்றில் ஓடி அதிலும் வெற்றி பெற்றார். அடுத்தது அரையிறுதிப்போட்டி. அதிலும் வெற்றிபெற்ற எரிக், இறுதிச் சுற்றில் ஓடும் தகுதி பெற்றார். 400 மீட்டர் தடகளப்போட்டி மிகப்பெருமை வாய்ந்த போட்டியாகக் கருதப்பட்ட ஒன்றாகும்.

பந்தய நாளும் வந்துவிட்டது. இன்னும் கொஞ்சநேரம் தான். குழுவின் உடற்தசை நிபுணர் அவர் அருகில் வந்து, ஒரு சிறிய துண்டுத்தாளைக் கொடுத்துச் சென்றார். வாங்கிப் படித்தார் எரிக். "பழைய ஏற்பாட்டில் இப்படி எழுதியிருக்கிறதல்லவா, 'என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்.' எப்பொழுதும் உங்களுக்கு வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன்" என்று அதில் எழுதியிருந்தது. 1 சாமுவேல் 2:30 -ஆம் வசனத்தில் காணும் இந்தச் சொற்கள், எரிக் பந்தயத்தில் ஓடியபோது அவரோடு கூடவே சேர்ந்து ஓடின.

அச்சமயத்தில் பிரிட்டிஷ் ஒலிம்பிக் சம்மேளன அதிகாரி ஒருவர் வருகை புரிந்தார். எரிக் இறுதிச் சுற்றில் ஓடுவதற்கு முன் கூட்டம் ஒன்று அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டி



ருந்தது. அதில் அந்த அதிகாரி விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தும் முறையில் பேசினார். "நம்முடைய வாழ்க்கையில் விளையாட்டில் பங்கு பெறுவதைத் தவிர வேறு எந்தக் குறிக்கோளும் இருக்கக் கூடாது" என்று அவர் தனது பேச்சில் கூறினார். எரிக்கை மனதில் வைத்தே அவர் இவ்வாறு பேசினார். எரிக்கின் உள்ளத்தைப் புண்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் கடுமையாகப் பேசினார். ஆனால் அதைக் காட்டிலும் மேலானவை உள்ளன என்பதை அறிந்திருந்த எரிக்கின் உள்ளம், அவர் எய்த அம்புகளால் பாதிப்படையவில்லை.

400 மீட்டர் தடகளப் போட்டிக்குரிய நேரமும் வந்துவிட்டது. ஓடுபவர்கள் தத்தம் இடத்தில் வந்து நின்றனர். எரிக்கிற்குக் கடைசித் தடமே கிடைத்தது. அந்தத் தடத்தில் ஓடி வெற்றிபெறுவது சற்றுக் கடினம். மேலும் அன்று தாங்க முடியாத வெயில். ஒலிம்பிக் போட்டிகள் சாதாரணமாக இவ்வளவு வெப்பமுள்ள காலத்தில் நடைபெறுவதில்லை.

எரிக் ஓடுவதைக் கண்டவர்கள் அது பயங்கரமானதாக இருந்தது என்று கூறினர். அவருடைய கைகள் முன்னும் பின்னும் அசைந்தும், முஷ்டிகள் காற்றைப் பிளந்துகொண்டும், முழங்கால்கள் மேலும் கீழும் பாய்ந்தும் சென்றன. அவருடைய தலை பின்புறம் சாய்ந்து காணப்பட்டது. அவருடைய ஓட்டத்தை ஒருவர் பெருங்காற்றாடிக்கு ஒப்பிட்டார். இன்னும் இலக்கை அடைய 50 மீட்டர் தொலைவுதான் இருந்தது. அவர் தன்னுடைய வேகத்தை அதிகரிக்கப் பெருமுயற்சி செய்தார். மற்ற ஓட்ட வீரர்களைவிட வெகு முன்னதாக ஓடி, அன்று அவர் புதிய உலகசாதனையைப் படைத்தார்.

"100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் வெல்லும் வாய்ப்பை தூக்கி எறிந்து அவர் கோடிக்கணக்கான மக்களுடைய கவனத்தை ஈர்ந்தார். அந்தப் போட்டியே அவர் பயிற்சி பெற்றதும் சாதகமுமான ஒன்றாக இருந்தது. ஆனால் அவரோ கிறிஸ்தவப் பண்பாட்டை அதனினும் மேன்மையாகக் கருதினார். 400 மீட்டர் பந்தயத்தில் எதிர்பாராத விதமாக அவர் வெற்றிபெற்றபோது அவருடைய நாடே அவருடைய காலில் வீழ்ந்தது" என்று அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் குறிப்பிட்டுள்ளார்.

“ஸ்காட்லாந்து நாடு உருவாக்கிய விளையாட்டு வீரர்களில் மிகப்பெரிய வீரர் எரிக் என்பதில் துளிகூட சந்தேகமில்லை. அவருடைய உள்ளாற்றல், செயல்திறம் யாவையும் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன” என்று புகழ்பெற்ற விளையாட்டு வீரர் ஒருவர் அவரைக் குறித்து விமர்சித்தார்.

பின்னர் அவர் மிஷனரியாகச் சீன நாட்டிற்குச் சென்றார். அவர் சீனாவுக்கு செல்வதற்கு முன்னர், “ஜென்னி, தேவன் என்னை ஒரு நோக்கத்திற்காகப் படைத்திருக்கிறார். சீன நாடே அந்த நோக்கமாகும். நான் ஓடும்போது வேகமுள்ளவனாக ஓடவே தேவன் என்னை உருவாக்கி இருக்கிறார். அதிலும் அவருடைய மகிழ்ச்சியை நான் உணர்கிறேன்” என்று தன் தமக்கையிடம் எரிக் கூறினார்.

உலகப்போரின்போது சீன நாட்டை ஜப்பானியர் பிடித்துவிட்டனர். அப்பொழுது எரிக் சித்ரவதைக் கூடத்திற்கு அனுப்பப்பட்டார். நிலைமை மிகவும் கடுமையாக இருந்தது. கழிவறைகள் போதுமான எண்ணிக்கையில்லை. அவை சொல்லவும் கூடாதபடி தூய்மையற்று இருந்தன. ஆடைகளும் கிடைக்கவில்லை. அங்கு தங்கியிருந்தோர் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். அமெரிக்க வணிகர்கள் பலர் அங்கே அடைக்கப்பட்டிருந்தனர். தங்கியிருந்த கைதிகள் தங்களுக்குள்ளாகச் சண்டையிட்டுக்கொண்டனர்.

தங்களுக்குள் எவ்வித ஒற்றுமையின்றி இருந்த அந்த மனிதர்கள், எரிக்கைப் பற்றி ஒரேவிதமாக எண்ணம் கொண்டிருந்தனர். ஆம், எரிக் ஒரு புதுமை மனிதன் என்றே அவர்கள் எண்ணினர். “அவர் கிறிஸ்தவத்தை வாழ்ந்து காட்டினார். சியோசங் என்னுமிடத்தில் சீனர்கள் மத்தியில் எவ்விதம் இருந்தாரோ, அதுபோலவே அவர் இங்கும் வாழ்ந்ததால், ‘கிறிஸ்துவின் வடிவம்’ என்று மக்களால் சித்தரிக்கப்பட்டார். புறக்கணிக்கப்பட்ட வணிகர்களிடமும், வேசிகளிடமும் நட்பு பாராட்டினார். பலவீனமானவர்களுக்குத் தேவையான நிலக்கரியை அவரே சுமந்து சென்றார். இளைஞர்களுக்குக் கற்பித்தார். ஒருமுறை மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகத் தனது தங்கக் கடிகாரத்தை விற்கத் துணிந்தார். பழைய திரைச்சீலையில் தைக்கப்பட்ட பல வர்ண ஆடைகளை அணிந்துகொண்டு அங்கே உலாவி வந்த எரிக் எப்பொழுதும் எளிமையானவராகவே காட்சி அளித்தார். அவர் தம்மை எவ்வகையிலும் மேன்மை பாராட்டிக்கொள்ளவில்லை.”



இந்தக் காவல் கூடத்தில் ஒரு ரஷ்யப் பெண்ணும் இருந்தாள். அவள் ஒரு வேசி. எரிக் அப்பெண்ணிற்கும் உதவி செய்தார். தன்னிடத்திலிருந்து எதையும் எதிர்பார்க்காமல் தனக்கு உதவி செய்த முதல் மனிதர் இவர்தான் என்று அவள் கூறினாள்.

“எந்த ஒரு மனிதனைப் பற்றியும் எரிக் குறை கூறியதில்லை” என்று இன்னொரு கைதி கூறினார். “எனக்குத் தெரிந்தவர்களில் கிறிஸ்துவைப் போல வாழ்ந்தவர் எரிக் ஒருவர்தான்” என்று வேறொருவர் சான்று பகர்ந்தார்.

ஒருநாள் எல்லாக் கைதிகளும் இருக்கின்றனரா என்று கண்டறிய ஜப்பானியப் படைவீரன் வருகைப்பதிவு எடுத்தபோது எரிக் வரவில்லை என்று தெரிந்தது. எரிக் சிலமணி நேரத்திற்கு முன்னர் இறந்துவிட்டதாக அங்கிருந்த ஒரு கைதி தெரிவித்தார். சற்றுத் தயங்கிய ஜப்பானியன், “எரிக் லிட்டெல் ஒரு கிறிஸ்தவர் அல்லவா?” என்று வினவினான். அந்தப் படைவீரன் ஒருமுறைகூட எரிக்குடன் பேசியதில்லை. ஆனால் அவன் கிறிஸ்துவை அவரிடத்தில் கண்டிருந்தான் என்பதே உண்மை.

சித்ரவதைக்கொடுமையின் காரணமாக அந்தக் கூடத்தில் எரிக் இறந்துபோகவில்லை. மூளையில் ஒரு கட்டி ஏற்பட்டு அதன் காரணமாகவே அவர் இறந்தார். அப்படிப்பட்ட நோயைக் கட்டுப்படுத்த அந்தக் கூடத்தில் மருத்துவ வசதி இல்லை. எரிக்கின் கடைசிச் சொற்கள் அவரது இறை நம்பிக்கையை வெளிப்படுத்தின. “ஆனி, முற்றிலுமாக அவரிடம் ஒப்புவிக்கிறேன்” என்று அங்கிருந்த செவிலி ஆனி பச்சன் என்பவரிடம் கூறினார்.

கிளாஸ்கோ மாநகரை அவருடைய மரணச் செய்தி வந்து சேர்ந்தது. “தன்னுடைய வாழ்நாளின் ஒவ்வொரு மணிநேரத்திலும் தன் நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த ஸ்காட்லாந்தின் மாவீரன் மரணம் அடைந்தார்” என்று மாலைச் செய்தித்தாள் அறிவித்தது.

ஆர்னால்ட் பிரைசன் என்னும் மூத்த மிஷனெரி அடக்க நிகழ்ச்சியில் கூறிய சொற்கள் மறக்க முடியாதவை:

"நான் அறிந்த மனிதர்களில், இயேசு கிறிஸ்துவின் ஆவியை மிக நேர்த்தியாக வெளிப்படுத்தி வாழ்ந்த மனிதர் எரிக் லிட்டெல்" என்று நேற்று ஒருவர் என்னிடம் கூறினார். எரிக்கோடு தொடர்புடைய எவரொருவரும் இவ்விதமாகத்தான் கூறுவர். மற்றவர்களிடம் தாக்கம் உண்டாக்கத்தக்க வகையில் இவ்விதப் புனித வாழ்க்கையை அவர் வாழ்ந்ததற்கான இரகசியம் என்ன? தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலுமாகத் தம்மை ஒப்புவித்து, இயேசு கிறிஸ்துவைப்போன்றே வாழ்ந்து, அவரை வெளிப்படுத்தின வாழ்க்கை முறையே அதன் காரணமாயிருக்கிறது. எரிக்கின் வாழ்க்கை முற்றிலுமாக தேவனால் கட்டுப்படுத்தப்பட்டதாக விளங்கியது. அவர் தன்னுடைய எஜமானனும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் அடிகளைப் பின்பற்றி நடந்தார். அந்த நடக்கையில் வலிமை குன்றிவிடவில்லை; பக்தி மிளிர்ந்தது. அதில் தேவனுடைய நோக்கத்தின் ஊக்கம் வெளிப்பட்டது. அந்த நடக்கையில் உண்மையான கிறிஸ்தவத்தின் சத்தியத்தையும், வல்லமையையும் மனிதர்கள் கண்டனர்.

எரிக்கின் வாழ்க்கைச் சரித்திரம் ஒரு கதையாக வெளிவந்தது. 1977-இல் எரிக்கின் கதையை பிரிட்டிஷ் திரைப்பட இயக்குநர் டேவிட் புட்னாம் கேள்விப்பட்டார். "நடு இரவுப் பயணம்" என்ற ஒரு திரைப்படத்தை அவர் அப்பொழுதுதான் இயக்கியிருந்தார். மனித இயல்பின் மகா பொல்லாங்கை வெளிப்படுத்திய கதை அது. அது மனிதப் பண்பாட்டைக் குறைகூறும் தன்மையுடையதாயிருந்ததால் அதைத் தயாரித்ததற்காக மனவருத்தத்தோடு அவர் இருந்த நேரத்தில்தான் எரிக்கின் மேன்மையான மனித இயல்பைப் பற்றிய கதையை அறிந்தார். "நடு இரவுப் பயணம்" மகத்தான வெற்றியை அவருக்குத் தேடித் தந்தும் அவர் மனச்சோர்வுற்றே இருந்தார். தான்செய்த தவறைத் தூய்மைப்படுத்தும் திரைப்படமாக எரிக்கின் கதை விளங்கும் என்று எண்ணிய இயக்குநர், "இதோ இங்கே ஒரு கதாபத்திரம், தன்னைவிட தேவனுக்கு முதலிடம் கொடுத்த மனிதன் — உலகம் தரும் வெற்றியைக் காட்டிலும் மேலானது தேவனுடைய பணி" என்று அறிவித்தார்.

"அக்கினி இரதம்" என்னும் திரைப்படம் இவ்வாறுதான் வெளிவந்தது. திரைப்படம் வெளிவந்தபோது மக்கள் மத்தியில் அதற்கு அமோக வரவேற்பு இருந்தது. ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வெற்றிபெறுவதைக் காட்டிலும் மேலானது, தனது கொள்கையில் வழுவாமல் நிலைநிற்கும் தன்மை - இதுவே ஸ்காட்லாந்து மண்ணின் மைந்தனின் சிறப்பு என்பதை உலகம் அறிந்தது. எரிக் மெய்யாகவே தனது கொள்கையில் உறுதியான நம்பிக்கை கொண்டவராக வாழ்ந்தார். புகழை நாடி அவர் தன் வாழ்க்கையின் கோட்பாட்டை விட்டுக்கொடுக்கவில்லை.



சென்ற இடமெல்லாம் அந்தத் திரைப்படம் பெரும் வரவேற்பைப் பெற்றது. தம்மைக் கனப்படுத்தின மனிதனை தேவன் எவ்வாறு கனப்படுத்தினார் என்பதைக் கண்ட மக்கள் கண்களில் கண்ணீர் பெருகிற்று. "தயாரிக்கப்பட்ட மிகச் சிறந்த திரைப்படங்களில் இதுவும் ஒன்று. பண்பாடற்ற திரைப்படங்கள் இந்நாட்களில் தயாரிக்கப்படுகின்றன. இது பழங்காலத்துக் கதை. ஆனால் பிரபஞ்சத்தின் சத்தியத்தையும் மனிதனின் ஆழ்ந்த உள்ளுணர்வையும் வெளிப்படுத்தும் திரைப்படம்" என்று திரைப்படத் திறனாய்வாளர் ரெக்ஸ்ரீட் இப்படத்தைக் குறித்துப் புகழ்ந்து எழுதினார்.

1924-ஆம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் எரிக் வெற்றி பெற்றார். 57 ஆண்டுகள் கழித்து அவர் கற்பனையும் செய்து பார்த்திராத வகையில் அவருக்குப் பெருமதிப்பைத் தேடித்தரும் வகையில் "அக்கினி இரதம்" என்ற திரைப்படம் வெளிவந்தது.

# 9

## பணிவு தந்த மேன்மை



***அமெரிக்காவில்*** உள்நாட்டுப் போர் முடிவடைந்து விட்டது. வெற்றிவாகை சூடிய அரசுப்படை, பேரணி ஒன்றை நடத்தத் தீர்மானித்தது. பேரணி வெள்ளை மாளிகை வழியாகச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. திட்டப் பொறுப்புகளைத் தளபதி வில்லியம் ஷேர்மான் ஏற்று நடத்தி வந்தார். திட்ட ஒழுங்கின்படி ஒவ்வொரு படைப்பிரிவையும் அதனதன் தளபதி முன்னின்று நடத்த வேண்டுமென்று அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. தங்களது படைப்பிரிவைத் தலைமையேற்று வெற்றிப் பேரணியில் கலந்துகொள்வது எத்தனை பெருமை.

அணிவகுப்பின் நாளும் வந்துவிட்டது. அதிகாலையில் எதிர்பாராத விதமாக ஒரு தடங்கல் ஏற்பட்டது. தளபதி ஷேர்மான் சற்றுக் கலக்கத்தோடு காணப்பட்டார். அச்சிக்கலைத் தீர்க்கும் நோக்குடன் அவர் ஆலிவர். O. ஹாவார்ட் என்னும் தளபதியை அணுகினார். டென்னஸ்ஸி மாநிலத்திலும் அட்லாண்டா மாநிலத்திலும் மாபெரும் வெற்றியைத் தளபதி ஹாவார்டின் படைப்பிரிவே தேடித்தந்தது. டென்னஸ்ஸி மாநிலப் படையின் தளபதியாக உயர்த்தப் பட்ட ஹாவார்ட், கடற்கரை மாநிலத்தில் அப்படை வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தவர். "தளபதி ஹாவார்ட், உங்களுடைய படைப்பிரிவை முன்னின்று நீங்கள் நடத்த வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று வினவினார் ஷேர்மான்.

"ஆம், அறிவேன் தளபதி அவர்களே" என்று விடை பகர்ந்தார் ஹாவார்ட்.

"உங்களிடம் ஓர் உதவியை நாடி வந்திருக்கிறேன்" என்றார் ஷேர்மான்.

"உங்கள் கட்டளை தளபதி அவர்களே" என்றுரைத்தார் ஹாவார்ட்.

"நீங்கள் பதவி ஏற்பதற்கு முன்னர் டென்னஸ்ஸி படையை நடத்திய முன்னாள் தளபதி உங்கள் படையை முன்னின்று நடத்த விரும்புகிறார். கடைசிப் போரை நீங்கள்தான் நடத்தினீர்கள் என்பதை நான் அறிவேன்.. ஆகவே உங்களுக்குத்தான் இந்த உரிமை இருக்கிறது என்பதையும் நான் அறிவேன். ஆனால் நீங்கள் ஒரு கிறிஸ்தவர். ஆகவே உங்கள் உரிமையை நீங்கள் விட்டுக்கொடுப்பீர்கள் என்று நினைக்கிறேன். முன்னாள் தளபதிக்காக உங்கள் உரிமையை நீங்கள் விட்டுக்கொடுப்பீர்களா?" என வினவினார் ஷேர்மான்.

ஒரு கணப்பொழுது மின்னல் தாக்கியதுபோல அதிர்ச்சியுற்றார் ஹாவார்ட். தமது படையை முன்னின்று நடத்த அவர் பேராவலோடு இருந்தார். தோளோடுதோள் சேர்ந்து அந்தப் படைவீரர்கள் அவருடன் பணிபுரிந்தனர். போர்க்களத்திலே அவர்கள் காட்டின விசுவாசம் மற்றும் தியாக மனப்பான்மை மறக்க முடியாதவை. அவர்கள் ஒருவருக்காக ஒருவர் மரிக்கவும் ஆயத்தமாக இருந்தவர்கள். அவர் தனது கரங்களில் ஒன்றை அந்தப் போரில் இழக்கவும் செய்தார். ஆனால் இப்பொழுதோ அவர் தனது உரிமையை விட்டுக்கொடுக்க வேண்டும். வேறொருவருக்காக இதைச் செய்ய வேண்டும். இதுபோல இதுவரை நடந்ததில்லை. இந்த வேண்டுகோள் சரியானது அன்று.

ஆனால் தளபதி ஹாவார்ட் செய்தது என்ன? ஒரிரு வினாடியில் தன்னிலைக்கு வந்த ஹாவார்ட் படைவீரர்களின் வழக்கத்திற்கு ஒப்ப, "உங்களுடைய வேண்டுகோள் எனது கடமை" என்று பதிலுரைத்தார். தன்னுடைய மேலதிகாரியாகிய ஷேர்மான் முன், நிமிர்ந்து அசையாமல் நின்ற ஹாவார்ட், "நான் ஒரு கிறிஸ்தவன் என்று கூறினீர்கள். ஆகவே எனது உரிமையை மிக மகிழ்ச்சியோடு விட்டுக்

கொடுக்கிறேன். எனது படைப்பிரிவை முன்னாள் தளபதி முன்னின்று நடத்தட்டும்" என்று தொடர்ந்து கூறினார்.

ஒரு பெரிய விடுதலை கிடைத்ததுபோல ஷேர்மான் காணப்பட்டார். ஹாவார்டை வியந்து பேற்றும் வண்ணம் அவரோடு தொடர்ந்து பேசினார். "ஹாவார்ட், என்னுடைய வேண்டுகோளுக்கு நீங்கள் இணங்குவீர்கள் என்பதை நான் அறிவேன். அமெரிக்கப் படை முழுவதையும் முன்நின்று நான் நடத்தப்போகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது என்னோடு இணைந்து நீங்களும் படை முழு வதையும் நடத்தப் போகிறீர்கள்."

பொதுவாகப் படைத்தளபதிகள் தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆனால் தளபதி ஹாவார்ட் கிறிஸ்தவக் குணநலனை வெளிப்படுத்திக் காட்டினார். கிறிஸ்துவின் சிந்தையை அணிந்திருந்த தளபதி, உண்மை யான பணிவைக் கற்றிருந்தார். மனிதனின் இயல்பில் பணி வைக் காண இயலாது. ஆனால் ஹாவார்டின் பணிவு அவ ருக்கு மாபெரும் சிறப்பைப் பெற்றுத் தந்தது. அந்தச் சிறப்பை ஷேர்மான் அவருக்குக் கொடுத்தார். பிரதான தளபதி தனக்கு இணையாக மற்றொரு தளபதியை உயர்த்திச் சிறப்பித்தது வரலாற்றில் எங்கும் நடந்ததில்லை.

# 10

## நோயிலும் நலத்திலும்



**கொலம்பியா** வேதப் பயிற்சிக் கல்லூரி யின் புகழ்பெற்ற தலைவராகத் திருவாளர் இராபர்ட்சன் மேக்குய்க்கென் பணியாற்றி னார். அவருடைய தலைமையின் கீழ் அக்கல் லூரி ஆவிக்குரிய நிலையிலும் கல்வியின் தரத் திலும் சிறந்து விளங்கி, பேரும் புகழும் பெற்றது. அங்கே பயின்ற பல இளைஞர்கள் ஆற்றல் மிக்க இறையூழியர்களா கப் பணியாற்றி அக்கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்தனர். இதனை எண்ணியெண்ணி அவருடைய உள்ளம் பூரித்தது. இதனையே உன்னத நோக்கமாகக் கொண்டு அன்னார் அயராது உழைத்தார்.

பல ஆண்டுகள் செவ்வனே சென்றுகொண்டிருந்த வாழ்க்கை சடுதியில் திசை திரும்பியது. எல்லாம் தலைகீழாக மாறிப்போய்விடக் கூடிய நிலை ஏற்பட்டது. அவருடைய மனைவி முரியேல் சொன்ன கதையை மீண்டும் மீண்டும் சொல்லத் தொடங்கிய போதுதான் அவர் அதை உணர ஆரம்பித்தார். சிறிது நாட்களில் முரியேல் வாசிக்கும் திறனை இழந்து போனார். அவருடைய கலைத்திறனும் அற்றுப் போய்விட்டது. வெளியிடங்களுக்குச் சென்று அவர் செய்து வந்த ஊழியத்தையும் நிறுத்த வேண்டியதாயிற்று. தனது அன் புக்குரிய மனைவி இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாகத் தெளி வற்றுப் போவதைக்கண்ட இராபர்ட்டின் உள்ளத்தில் வேதனை பெருகிற்று. நான்கு நற்செய்தி நூல்களின்

பெயரையும் கூறும்படி அந்த அம்மையாரிடம் ஒரு மருத்துவர் வினவியபோது அவரால் விடைகூற முடியவில்லை. அவரைத் தாக்கிய நோய் என்னவென்று உறுதியாகிவிட்டது. அந்த நோயின் பெயர் "அல்ஜிமெர்" (நினைவு இழத்தல், பேச்சு இழத்தல், எரிச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள ஒருவகை நோய்) என்பதாகும்.

இராபர்ட்சன் தம்பதிகள் மிகவும் பக்தி நிறைந்தவர்கள். பல ஆண்டுகளாக அவர்களது இல்லற வாழ்க்கை நற்பேறு பெற்றதாக விளங்கியது. கனிதரும் ஊழியத்தை அவர் நிறைவேற்றியதற்கு ஆதரவாக அவரது மனைவியாரே விளங்கினார். அவரது மனைவியின்றி அவரால் இவ்வளவாகக் கர்த்தருக்கென்று பணியாற்றியிருக்க முடியாது. இப்பொழுது என்ன செய்வது? மனைவியைக் கண்காணித்துக் கொள்ள ஒரு செவிலியை ஏற்பாடு செய்துவிட்டு அவர் தனது பணியினைத் தொடருவதா? இல்லையேல் இத்தனை ஆண்டுகளாகத் தனது தேவையெல்லாவற்றையும் நிறைவேற்றிய தனது துணைவியின் தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு கல்லூரிப் பணியை விட்டுவிடுவதா?

அவர் தன்னுடன் பணியாற்றிய நண்பர்களுடன் ஆலோசனை நடத்தினார். அவர்கள் மிகத்தெளிவாக ஆலோசனை நல்கினர். முரியேலின் கிறிஸ்தவ அன்பையும் தயவையும் அனுபவித்தவர்கள் அல்லவா அவர்கள்? அம்மையாரைக் கண்காணித்துக்கொள்ளப் பலர் முன்வந்தனர். கொலம்பியா வேதப் பயிற்சிக் கல்லூரி அவருடைய தலைமையில் தொடர்ந்து செயல்படவேண்டும் என்பதே அவர்களது எண்ணம்.

ஆனால் அவருடைய எண்ணமோ வேறு திசையில் ஓடியது. திருமண நாளன்று தனது மனைவிக்குக் கொடுத்த வாக்குறுதியை அவர் எண்ணிப்பார்த்தார். மரணம் பிரிக்கும் வரை, நோயிலும் நலத்திலும் தன் மனைவியோடு பிரியப் போவதில்லை என்றல்லவா வாக்குக்கொடுத்தார். இப்பொழுது அவரது மனைவி நோய்வாய்ப்பட்டு இருக்கிறார். அதுமட்டுமின்றி அந்த நோய் மரணம்வரை நீடிக்கும். முரியேல் அம்மையாரின் வாழ்க்கையில் அற்புதமாக உடல் நலம் அருள தேவனால் முடியும் என்பது உண்மையே. ஒருவேளை அவ்வாறு நடக்காமல் போகலாம். இராபர்ட்சன் வாழ்விலும் தேவனால் அற்புதத்தைச் செய்ய முடியும். இப்பொழுது அவர் என்ன செய்ய வேண்டும். அவர் அளித்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?



ஆம், அவர் அளித்த வாக்கை அவர்தான் நிறைவேற்ற வேண்டும். கிறிஸ்தவ சமுதாயமே திகைக்கும் வகையில், அவர் தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்தார். மன நிலையும் உடல்நிலையும் பாதிக்கப்பட்ட தனது மனைவியைப் பேணிப் பாதுகாப்பதே வேதப் பயிற்சிக் கல்லூரியின் தலைவர் பதவியைக் காட்டிலும் மேலானதாகும். அவர் எடுத்த முடிவைக் குறித்து அவரே எழுதுகிறார்:

> "அதற்குரிய நேரம் வந்துவிட்டது. என்னுடைய முடிவில் நான் உறுதியாக இருக்கிறேன். இந்த முடிவை எடுப்பதற்கு நான் ஒரு பெரிய கணக்கைப்போட வேண்டிய தேவை ஏற்படவில்லை. இது எனது வாய்மையைக் குறித்த விஷயம்.... நான் செய்யப் போகிற வேலை கடுமையானதோ மகிழ்ச்சி அற்றதோ இல்லை. விருப்பு வெறுப்பு எல்லாவற்றையும் இழந்த ஒரு நிலையில் இருப்பவர் மட்டுமே இந்த வேலையைச் செய்ய முடியும் என்பதும் சரியன்று. எனது அன்புக்குரிய மனைவி கடந்த நாற்பது ஆண்டுகளாக எனக்காக அற்புதமாக உழைத்திருக்கிறார். இப்பொழுது நான் அந்தப் பணியைச் செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது. எவ்வளவு அருமையான துணைவி! இன்னும் நாற்பது ஆண்டுகள் நான் பணிவிடை செய்தாலும் என் கடனைச் செலுத்தித் தீர்க்க முடியாது."

தன் சுயநிலையை மறந்து வாழ்ந்த முரியேல் அம்மையாருடன், இராபர்சன் தொடர்ந்து பதினேழு ஆண்டுகள் கழித்தார். அவருடைய அனுபவங்களில் சிலவற்றை அவர் எழுதுகிறார்:

> இரவு மணி 12. எப்பொழுது விடியும் என்று காத்திருப்பேன். இவ்வளவு கொஞ்ச வயதிலேயே இந்த அல்ஜிமெர் நோய் வரக்கூடாது. இவ்வளவு பயங்கரமாக இத்தனை ஆண்டுக்காலம் ஒருவரைத் தாக்கக் கூடாது. ஆனாலும், முரியேல் எவ்வளவு அமைதியாக இருக்கிறாள். தன்னுடைய சிந்தனையில் மனநிறைவோடு காணப்படுகிறாள். ஆம், உண்மையாகவே அன்புகூருவதற்கு அவள் எத்தனை இனிமையானவள். இயேசு கிறிஸ்து அவளைத் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக் கொள்வாரென்றால் நான் என்ன செய்வேன். அவள் என் அருகில் இருப்பது எத்தனை இன்பமானது. மகிழ்ச்சியை இழந்து போவேனே. சில வேளைகளில் நான் எரிச்சல் அடைந்திருக்கிறேன். ஆனால் அடிக்கடி

அவ்வாறு நடந்துகொண்டதில்லை. கோபப்படுவது எவ்விதத்தில் புத்திசாலித்தனமாகும்? என்னுடைய ஆவியை பிருதுவாக்கும் என்று எனது இளமைப் பருவத்தில் ஜெபம் செய்ததை நான் நினைவுகூர்கிறேன். ஒருவேளை தேவன் இப்பொழுது அதற்குரிய பதிலைத் தருகிறார் போலும்.

ஒருமுறை நான் முற்றிலும் தவறாக நடந்துகொண்டேன். என்னுடைய அமைதியை இழந்துபோனேன். அந்த நாட்களில் முரியேலால் நிற்க முடியும். நடக்கவும் செய்வாள். கழிவறைக்குச் சென்று கடன்களை முடிக்கத் தெரியும். ஆனால் சில வேளைகளில் 'விபரீதம்' நடந்துவிடும். அவள் அருகில் அமர்ந்து கழிவையெல்லாம் சுத்தம் செய்வேன். கழிவறையில் என்ன செய்வதென்று அறியாமல் குழம்பியபடி அவள் நின்றுகொண்டிருப்பாள். ஒவ்வொரு முறையும் உதவிக்கு என்னையே நாடுவாள். கொஞ்சம் கொஞ்சமாக என் மனநிலை வெறுப்படைந்தது. ஒரு நாள் அவளை நேராக நிற்கச் செய்யும்பொருட்டு அவளுடைய கெண்டைக்காலை அடித்தேன். அதில் ஏதாவது நன்மை பிறக்குமா? ஓங்கி அடிக்கவில்லை. ஆனால் அவள் மருண்டு போனாள். நானும் மருட்சி அடைந்தேன். நாற்பது ஆண்டுக்கால இல்லற வாழ்க்கையில் கோபத்தோடு ஒருமுறைகூட அவளை நான் தொட்டதில்லை. கடிந்தும் பேசியதில்லை. உண்மையில், கோபத்தோடு நடந்துகொள்ளவேண்டுமென்று எண்ணியதும் இல்லை. ஆனால் இப்பொழுது, என்னுடைய உதவி அவளுக்குத் தேவைப்படும் வேளையில், அவளை நான் அடித்துவிட்டேன்.....

கதறி அழுதேன். தேம்பினேன். மன்னிக்கும்படி கெஞ்சினேன். என்னுடைய வார்த்தைகள் அவளுக்குப் புரியவில்லை. அவள் சொன்ன வார்த்தைகளும் எனக்குப் புரியவில்லை. என்னுடைய கர்த்தரை நோக்கித் திரும்பினேன். எவ்வளவு மனவேதனையோடு நான் இருக்கிறேன் என்பதை அவரிடம் கூறி அழுதேன். அந்த வேதனை குறைய பல நாட்கள் ஆயின. என்னுடைய அழுகையின் கண்ணீரை தேவன் துருத்தியில் சேர்த்து வைத்திருப்பார். ஒருநாள் எரியப்போகிற நெருப்பை அவித்துப் போட அது உதவும் என்று நினைக்கிறேன்.

*இருபத்திரண்டு ஆண்டுக்காலம் இராபர்ட்சன் வேதப் பயிற்சிக் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றினார். தனது மனைவி தன்னிலை மறந்து வாழ்ந்த காலத்தில் அவரைக் கவனித்துக்கொள்ள அந்தப் பதவியை அவர் உதறித் தள்ளினார்.*

*"இன்றைய கிறிஸ்தவம்" என்னும் கிறிஸ்தவப் பத்திரிக்கையில் இந்தக் கதை வெளிவந்தது. படித்தவர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று. பல தம்பதிகள் திருமண நாளன்று கொடுத்த வாக்குறுதிகளைப் புதிப்பித்துக் கொண்டனர். திருமண உறவின் புனிதத் தன்மையை புதியவகையில் பலர் உணர்ந்து அதைப் போற்றினர். இராபர்ட்சன் மேக்குய்ல்கென் வாழ்வில் சிலர் கிறிஸ்துவைக் கண்டோம் என்று அறிக்கை செய்தனர்.*

# 11

## ஆத்தும நாயகர்



"**வெல்லப்படாதவன்**" என்னும் பாடல் வில்லியம் ஏர்னஸ்ட் ஹென்லே என்பவரால் இயற்றப்பட்ட கவிதையாகும். ஆங்கில மொழியின் இலக்கிய நயம் வாய்ந்த பாடலாக அது கருதப்படுகிறது. மேலும், அதைக் கற்போர் எதையும் சார்ந்திடாமல் துணிவும் அஞ்சா நெஞ்சமும் உடையவராய்த் திகழ்வார்கள் என்று ஆழ்ந்த சிந்தனையற்ற மனிதர்கள் கருதுகின்றனர். அந்தப் பாடலை எல்லா மாணவ மாணவிகளும் மனப்பாடம் செய்து வகுப்பறையில் ஒப்புவிக்க வேண்டும் என்று மெல்ரோஸ் என்னுமிடத்தில் உள்ள அரசினர் பள்ளியில் ஓர் ஆசிரியை ஆணையிட்டார்.

அந்தப் பாடல் இறை நம்பிக்கையை மறுக்கும் ஒரு பாடலாகும். தேவனுடைய உளவாம் தன்மையை எதிர்த்து அப்பாடல் கேள்வி எழுப்புகிறது. நிலைபேறான இறைவனை அது எள்ளி நகையாடுகிறது. அப்பாடலாசிரியர் தன்னில்தானே நிறைவு உடையவராக இருப்பதாகப் பெருமை பாராட்டிக் கொள்கிறார். தனது நித்திய வாழ்வை எங்கே கழிப்பது என்பதை முடிவுசெய்ய தேவனுடைய உதவி தேவையில்லை என்று அவர் கூறுகிறார். அதற்காகத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதை, தேவன் சொல்லித்தரத் தேவையில்லை என்றும் அவர் வாதாடுகிறார். சர்வ வல்லமை உள்ள தேவனை அவர் எதிர்த்து நிற்கிறார். ஹென்லே இயற்றிய அந்த ஆங்கிலப்பாடலின் கருத்தினைத் தழுவி எழுதப்பட்ட தமிழ்ப் பாடலைக் கீழே தருகிறோம்:



***வெல்லப்படாதவன்***

கார்முகில் சூழ்ந்த கடுங்குளிர் இரவில்
ஒருமுனை தொடங்கி மறுமுனை வரையிலும்,
எண்ணிலா கடவுளர் எனைவெல்ல வரினும்
வெல்வதற் கரிய நெஞ்சினன் நானே!

சூழ்நிலை இறுக்கிய பிடியினில் சிக்கிநான்
தாழ்வுற்ற போதும் அஞ்சிடேன் அழுதிடேன்,
விதிச்செயல் நிகழ்வென குறுந்தடி தாக்கினும்
கதியென மயங்கிடேன் தலையினைத் தாழ்த்திடேன்!

இந்நிலம் விடுத்து அந்நிலம் காண்கையில்
ஒறுத்தலும் உறுத்தலும் எனப்பலர் உரைப்பர்
நிழலெனத் தோன்றிடும் பொய்யுரை விரும்பிடேன்
தழலெனக் கொதித்திடும் நரகினை அறிந்திடேன்.

ஒறுப்பினை ஈந்திடும் குற்றங்கள் பலப்பல
குறுகிய துளைபோலும் நுழைவாயில் என்றுரைப்பர்
அஞ்சிடா நெஞ்சினன் வெல்லப் படாதவன்,
என்வாழ்வின் நாயகன் நானென்று அறிவீரே!

(ஒறுத்தல் = தண்டித்தல்)

அந்த வகுப்பில் படித்துக்கொண்டிருந்த எடித் வைவல் என்னும் மாணவிக்கு இப்பாடலின் சொற்கள் இடறலாக இருந்தன. வகுப்பறையில் எல்லோருக்கும் முன்பாக இப்பாடலை ஒப்புவிப்பது தேவன் மேலுள்ள தன்னுடைய விசுவாசத்தை மறுத்துரைப்பதாக அமையும் என்று அவள் எண்ணினாள். தன்னுடைய எஜமானராகவும் தலைவராகவும் ஏற்றுக்கொண்டுள்ள ஒருவரைக் கனவீனப்படுத்துவதாக அவள் நினைத்தாள்.

அப்பாடலை மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் உண்மையில் தனது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை தூஷிப்பதாகவே அமையும் என்று அவள் கருதினாள்.

அவள் செய்யக்கூடியது ஒன்றே. ஆசிரியையிடம் சென்று தனது நிலையை அவள் மிகவும் மரியாதையுடன் தெரிவித்

தாள். ஆசிரியையிடம் அவள் வாதிடவும் இல்லை, மரியாதைக் குறைவுடன் நடந்துகொள்ளவுமில்லை. ஆசிரியையோ எடித்திடம் விளக்கிக் கூறி வாதாடினார். அப்பாடலின் கருத்துகளை அவள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லையென்றும், அதனை இலக்கிய நயம் கொண்ட பாடல் என்று கருதி அறிந்திருக்க வேண்டும் என்றும் கூறினார். அவருடைய வாதம் ஒரு பயனையும் விளைவிக்கவில்லை. எடித் தன்னுடைய உறுதியினின்று மனந்தளரவில்லை.

கீழ்ப்படியாமை என்னும் குற்றத்தை எடித் செய்துவிட்டாள் என்றே ஆசிரியை எண்ணினார். பள்ளி நிர்வாகிகளிடம் இதைக் குறித்து அவர் புகார் செய்தார். அதோடு பிரச்சனை முடிவடைந்துவிடவில்லை. உள்ளூர் நாளிதழுக்கு யாரோ ஒருவர் அதைத் தெரியப்படுத்திவிட்டார். இது பரபரப்பான செய்தியாக மாறிவிட்டது. செய்தித்தாட்களில் இதைக்குறித்த செய்திகள் முதல் பக்கத்தில் வெளிவரத் தொடங்கின. ஆசிரியைக்குக் கீழ்ப்படியாத மாணவி என்ற பெயரை அந்த மாணவிக்குச் சூட்டினர். நாட்டின் கொடியை விசுவாசத்துடன் கனப்படுத்தாத யெகோவா சாட்சிகளுக்கு ஒப்பாக எடித் கருதப்பட்டாள். கலகம் விளைவிக்கும் மாணவி என்றும், அமெரிக்காவிற்கு எதிரான கூட்டத்தைச் சார்ந்தவள் என்றும் குற்றம் சுமத்தத் தொடங்கினர்.

அந்தப் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள் யாவரும் எடித்திற்காக தீவிரமாக ஜெபித்தனர். சிறந்ததோர் ஆலோசனை ஒன்றை விசுவாசத்தில் ஊன்றக்கட்டப்பட்ட ஒருவர் எடித்திடம் கூறினார். ஹென்லே எழுதிய பாடலுக்கு இணையானதும் கிறிஸ்தவ விசுவாசம் மிக்கதுமான பாடல் ஒன்றை டொரொத்தி டே என்பார் எழுதியுள்ளார் என்று அவர் கூறினார். ஹென்லே எழுதிய பாடலுக்குப் பதிலாக இந்தப் பாடலை மனப்பாடம் செய்து ஒப்புவிக்க அந்த ஆசிரியை இணங்கக்கூடும் என்றும் அந்த விசுவாசி எடுத்துரைத்தார். அந்தப் பாடலை எடித் தன் ஆசிரியையிடம் காட்டினார். கிறிஸ்தவப் பற்றை எடுத்துரைக்கும் அப்பாடலை எடித் மனப்பாடம் செய்து ஒப்புவிக்க ஆசிரியை ஒப்புக்கொண்டது மிகுந்த வியப்பளித்தது.

வகுப்பறையில் மாணவர்களுக்குமுன் நின்று எடித் கீழ்க்காணும் பாடலை ஒப்புவித்தாள்:



### *என்னை வென்ற நாயகர்*

வெண்கதிர் வீசிடும் பகலவன் போலவே
ஒருமுனை தொடங்கி மறுமுனை வரையிலும்,
தேவனின் ஆளுகை முடிவிலா நிலைத்திடும்
எனைவென்ற கிறிஸ்துஎன் ஆத்தும நாயகர்!

சூழ்நிலை இறுக்கிய பிடியினில் சிக்கிடின்
அணைக்கும் கரமுண்டு, அஞ்சிடேன் அழுதிடேன்,
விதிச்செயல் நிகழ்வுகள் எனப்பலர் கூறினும்
அவர்செயல் என்றறிந்து என்தலை தாழ்த்துவேன்.

இந்நிலம் விடுத்து அந்நிலம் காண்கையில்
மன்னனின் மறைவினில் களிப்புடன் வாழுவேன்
நிழலெனத் தோன்றினும் மெய்யுரை அறிவேன்
தழலெனக் கொதித்திடும் நரகினைத் தவிர்த்தார்!

ஒறுப்பினை ஈந்திடும் குற்றங்கள் நீங்கின
குறுகிய துளைபோலும் நுழைவாயில் பயமிலை
செங்குருதிச் சிலுவையில் என்நிலை மாற்றினார்
என்வாழ்வின் நாயகர் கிறிஸ்தென்று அறிவீரே!

மனிதனுடைய கோபத்தை தேவன் தமக்குப் புகழ்ச்சியுண்டாகும்படி மாற்றினார். கிறிஸ்துவின் மீது அளவற்ற விசுவாசம் உடையவளாக இருந்த இளம்பெண் அவருக்காகப் பழிச்சொற்களைச் சகித்துக் கொண்டாள். கர்த்தரிடம் அவள் கொண்டிருந்த பற்றின் நிமித்தம் அவள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவையும் தவறானவை என்று மெய்ப்பிக்கப்பட்டன. இயேசு கிறிஸ்து தட்டிக்கழிக்கப்படத் தக்கவர் அல்லர் என்பதை அநேகர் இந்நிகழ்ச்சியின் மூலமாக அறிந்துகொண்டனர்.

நீங்கள் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக உறுதியுடன் நிற்கும்போது, உலகம் முழுவதும் உங்களுக்கு எதிராகச் செயல்படுவது போன்று தோன்றும். அது உங்களது உறுதியைத் தகர்த்தெறிவது போலக் காணப்படும். அந்தச் சூழ்நிலையில் சிக்குண்ட எடித் வைல் கர்த்தருக்காக உறுதியுடன் நிலை நின்றாள்.

# 12

## புறக்கணிக்கப்பட்டவரின் நண்பர்



***"ஜீவ வார்த்தை"*** என்னும் நிறுவனம் இறையூழியத்தைத் திறம்படச் செய்து வந்தது. இழந்துபோனவர்கள் இரட்சிப்படைய வேண்டும், ஸ்தல சபைகள் வலுப்பெற வேண்டும் என்னும் உன்னத நோக்கங்களை உடையதாக அது விளங்கியது. நியூயார்க் மாநகரில் ஷீரூன் லேக் என்னுமிடத்தில் அந்நிறுவனத்தின் முகாம் இருந்தது. ஒவ்வொரு கோடை காலத்திலும் அங்கே பற்பல ஆவிக்குரிய நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். வேதாகம மாநாடுகள், இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகள், இன்னும் பல நடவடிக்கைகளால் முகாம் நிரம்பி வழியும்.

திருவாளர் ஜேக் வைர்ட்ஜன் அதன் நிறுவனர் ஆவார். அவரே அதன் தலைவராகவும் செயல்பட்டு வந்தார். இத்தகைய ஆவிக்குரிய தரிசனத்தைப் பெற்ற வைர்ட்ஜன் இறைப்பணி ஆற்றுவதில் அயர்ச்சி கொள்வதில்லை. அவருடைய ஊழிய நாட்களில் வேலை மிகுந்திருக்கும். முகாமின் பொறுப்புகளைக் கவனிக்க வேண்டும், செய்திகள் ஆயத்தம் செய்ய வேண்டும், வருகை புரிவோரைச் சந்திக்க வேண்டும், மற்றும் முகாம் நல்ல முறையில் செயல்புரிவற்கான ஏற்பாடுகளையும் கவனிக்க வேண்டும்.

ஒருமுறை வேதாகம மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உடல் பாதிப்பு அடைந்த ஒருவர் வந்திருந்தார். அவருடைய தோற்றம் விகாரமாக இருந்தது. அவர் உணவருந்துவது காண்பதற்கு மிகவும் அருவருப்பாக இருக்கும். அவர் உண்ணத் தொடங்குவதற்கு முன்னர், செய்தித்தாள் ஒன்றை யாராவது ஒருவர் எடுத்து அவருடைய வாய்க்குக் கீழாக மாட்டிவிட வேண்டும். அந்தத் தாள் அவரது மார்பையும், மடியையும் மூடிக்கொள்ளும்படியாகச் செய்ய வேண்டும். அவர் உணவைத் தன் வாயில் வைக்கும்போது, அதில் ஒரு சிறு பகுதியைத்தான் அவரால் விழுங்க முடியும். உணவின் பெரும்பகுதி அந்தத் செய்தித் தாளில் விழுந்துவிடும். அவருடைய வாயின் தசைநார்கள் பழுதடைந்து போனதால் அவரால் வேறொன்றும் செய்ய முடியாது. அவருடைய உடலில் இன்னும் பல பாதிப்புகள் இருந்தன. ஆனால் அந்தப் பரிதாபத்திற்குரிய பரிசுத்தவான் தேவ வார்த்தையைக் கேட்பதற்கு ஆவலுள்ளவராக இருந்தார். அதன் காரணமாகவே அந்த மாநாட்டில் அவர் கலந்துகொண்டார்.

உணவு சாலையில் அந்த மனிதரின் அருகில் யாரும் செல்லவில்லை. அவர் அருகில் அமர்ந்து உணவு உண்டால், உணவின்மீது இருக்கும் ஆவல் போய்விடும் என்று பலர் நினைத்தனர். அவரைக் காண்பதற்கே சிலருக்கு அருவருப்பாயிருந்தது. பசி போய்விடும் என்று கருதிய பலர் அவர் அருகில்கூடச் செல்லவில்லை. அவ்வளவு பெரிய கூட்டத்தில் அவர் அருகில் உட்காருவதற்கு ஒருவருமில்லை. ஒவ்வொரு முறையும் அந்த தேவனுடைய விலையேறப்பட்ட தாசன் உணவு சாலையில் தனித்தே அமர வேண்டியதாயிற்று.

வேலை மிகுதியின் காரணமாக வைர்ட்ஜன் உணவருந்துவதற்குக் குறித்த நேரத்திற்கு வரமாட்டார். அவர் வரும்போது பெரும்பாலும் உணவருந்தத் தொடங்கி விடுவார்கள். யாவரும் கேட்ட செய்தியைப் பற்றி உற்சாகமாகப் பேசிக்கொண்டு இருப்பார்கள். அன்றும் அவ்வாறுதான் நடந்தது.

வைர்ட்ஜன் உள்ளே நுழையும்போது அவருக்கு உற்சாக வரவேற்பு காணப்பட்டது. எல்லோரும் கையசைத்துத் தங்களுக்கு அருகில் வந்து அமரும்படி அழைத்தனர். சிலர் எழுந்து தங்களது இருக்கையைத் தரவும் முன்வந்தனர். ஆனால் அவரோ அவர்களுக்கருகில் செல்லவில்லை. சரீரம் பாதிப்படைந்து எல்லோராலும் புறக்கணிப்பட்டவராக விளங்கிய அந்த மனிதரின் அருகில் சென்றார். புன்முறுவலு

டன் அவர் அருகில் ஜேக் அமர்ந்ததைக் கண்ட எல்லாரும் அமைதியுடன் அவரையே நோக்கிப் பார்த்தனர். ஆம், அவருடைய செயல் உண்மையிலேயே மிக உன்னதமான பிரசங்கமாயிருந்தது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாழ்மையானவர்களிடம் இறங்கி வந்தார்; கீழானோர், கடை நிலையினர், மிகவும் இழிவானோர் என்று கருதப்பட்டவர்களிடம் அவர் இறங்கி வந்ததை வைர்ட்ஜனின் செயல் அங்கு கூடிய மக்களுக்கு உணர்த்தியிருக்கும். நாமும் அவ்வாறே தாழ்மையானவர்களிடம் செல்லும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். மேட்டிமையான மனிதர்கள் என்று கருதப்படுகிற மக்களோடு தொடர்பு கொள்ளவேண்டும் என்று நாம் சிந்திக்கலாகாது. தாழ்மையானவர்களுக்கே இணங்க வேண்டும் (ரோமர் 12:16).

தங்களுக்கு அருகில் ஜேக் வைர்ட்ஜன் உட்காருவது தங்களுக்குப் பெருமை தரும் என்று அந்த மக்கள் நினைத்தனர். அவர் புகழ்மிக்க வானொலிப் பிரசங்கியாக இருந்தார், எல்லாராலும் அறியப்பட்ட நற்செய்தி ஊழியராக விளங்கினார்; கிறிஸ்தவ ஊழியத்தில் திறம்பட செயலாற்றும் நிறுவனத்தின் தலைவர்; அவ்வளவுதான். ஆனால் முகாமிற்கு வந்திருந்தோர் அவருடைய நட்பைப் பெற ஆர்வத்துடன் இருந்தனர். தத்தம் வீடுகளுக்குச் சென்று ஜேக் வைர்ட்ஜன் எங்களுக்கு அறிமுகமானவர் என்று சொல்லிக்கொள்வதில் நாட்டம் காட்டினர். ஆனால் ஜேக் ஒரு தாழ்மையான விசுவாசியாக இருந்தார். கிறிஸ்துவை அவர் வாழ்ந்து காட்டினார். அவருக்கு தகுதியோ, சிறந்தவர்களின் நட்போ ஒரு பொருட்டல்ல. அந்த உணவு சாலையில் அவருடைய நட்பு மிகவும் தாழ்மையான மனிதரிடத்திலேயே சென்றடைந்தது.

# 13

## தீமையை நன்மையால் வென்ற இறையூழியர்



**ஹொண்டுரான் தேசத்து** சபைகளிலிருந்து முதன்முதலாகக் கர்த்தருடைய முழுநேர ஊழியராக ஒப்புக்கொடுக்கப்பட்டவர் ஆஸ்கார் க்யூபாஸ் என்பவர் ஆவார். இந்தக் குறிப்பிடத்தக்க மேன்மைக்கு ஏற்ப அவருடைய வாழ்க்கை அமைந்திருந்தது. அண்டை நாடான நிகாராகுவா நாட்டில் சுவிசேஷப் பணியைச் செய்வதற்காக அங்கு சென்ற ஆஸ்கார், டௌகில் என்னும் சிற்றூரில் புதிய ஏற்பாட்டுக் கோட்பாடுகளின்படி இயங்கும் ஒரு சபையை தேவனுடைய வழிநடத்துதலின்படி நிறுவினார்.

ஆஸ்கார் பள்ளிக்குச் சென்றதில்லை. அவர் ஒரு எளிமையான கிறிஸ்தவர். தேவ வார்த்தையின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றும் அசைக்க முடியாத நம்பிக்கையும் போற்றுதற்குரியன. அந்தத் திருவார்த்தைகளை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வதில் அவர் அளவிட முடியா ஆர்வமும் கொண்டிருந்தார். மேலும் தான் கற்ற சத்தியங்களின்படி நடக்கவும் செய்தார். அதாவது அவர் தன் வாழ்க்கையில் தாழ்மை, பொறுமை, அன்பு, தயை என்னும் நற்குணங்களைக் கைக்கொண்டு வாழ்ந்தார்.

டௌகில் என்னும் அந்தச் சிற்றூர் பொதுவுடைமை கட்சியினரால் நிறைந்திருந்தது. அவ்வூர் மக்கள் அக்கட்சியினருக்கு ஆதரவு அளித்து வந்தது மட்டுமின்றி அவர்களுக்கு

உண்மையுள்ளவர்களாகவும் இருந்து வந்தனர். அவ்வூர் மக்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து அவரைத் தமது கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கி கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, பொதுவுடைமைக் கொள்கை வலுவிழந்து போயிற்று. கிறிஸ்தவ விசுவாசிகள் அரசியலில் ஈடுபட்டதின் பயனாக அவ்வித நிலை ஏற்படவில்லை. அவர்கள் அரசியலில் ஈடுபடவேயில்லை. அவர்கள் அச்சிற்றூரில் உப்பாகவும் ஒளியாகவும் விளங்கினர். அவர்களுடைய ஆக்கபூர்வமான சாட்சியும், ஆவிக்குரிய ஏவுதலும், நல்லொழுக்கமும் அம்மக்கள் மத்தியில் கிரியை செய்யத் தொடங்கின. அதுவே பொதுவுடைமைக் கூட்டத்தாரின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது.

இக்கால கட்டத்தில் ஆஸ்கார் ஒரு பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. பொதுவாக, கிறிஸ்துவின் மெய்யான ஊழியன் பிரச்சனையைக் கண்டு மருண்டு போகிறதில்லை, உற்சாகமே அடைகிறான். அதுவரை அவ்வூர் விசுவாசிகள் வீடுகளிலே கூடி வந்தனர். அவர்கள் இனிமேல் அவ்வாறு வீடுகளில் சபையாகக் கூடிவர முடியாமல் போயிற்று. ஏனெனில், விசுவாசிகளுடைய வீடுகள் சிறியவை, ஆனால் விசுவாசிகளின் எண்ணிக்கையோ அதிகம். ஆகவே அந்தச் சபை மக்கள் ஓரிடத்தை விலைக்கு வாங்கினர். ஒரு பகுதியில் சபைக்கூடம் கட்டுவதென்றும், மறுபகுதியில் ஆஸ்காரும் அவருடைய இல்லத்தாரும் வசிப்பதற்கென வீடு கட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அந்த இடத்தை அவர்கள் வாங்கும்போது, அதற்கு அடுத்த இடம் ஒரு பொதுவுடைமைக் கட்சித் தலைவரின் இடம் என்பதை அவர்கள் உணரவில்லை. சாண்டோஸ் என்னும் அந்த மனிதனுக்குக் கிறிஸ்தவர்கள் என்றாலே வெறுப்பு. மேலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறவர்கள்மேல் அதிகமான வெறுப்பு உடையவராயிருந்தார். கம்யூனிசம் அந்த ஊரில் வலுவிழந்து போனது அவருடைய வெறுப்பிற்குக் காரணமாயிருந்ததில் எவ்வித ஆச்சரியமுமில்லை. ஆகவே ஆஸ்காருக்கு அவர் தொல்லை கொடுக்கத் தொடங்கினார்.

ஒருமுறை சாண்டோஸ் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் ஆஸ்கார் கைதுசெய்யப்பட்டார். ஒரு மரத்தை ஆஸ்கார் வெட்டி விட்டார் என்பதே அந்தப் புகார். அதிகாரிகள் விசாரித்தபோது உண்மை தெரியவந்தது. அந்த மரம் ஏற்கனவே செத்துப்போனது என்பதுதான் உண்மை. உடனடியாக அவரை விடுதலை செய்தனர்.



கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்ட ஆஸ்கார் செய்தது என்ன? தனது அயலகத்தாரைக் குறித்துக் குறைகூறவும் இல்லை, பழி சொல்லவும் இல்லை. தன்னைக் காத்துக்கொள்வதற்காக அவர் ஏதொன்றும் செய்யவில்லை. பலவகையான இழிவுகளுக்குட்படுத்தப்பட்ட போதும் அவர் கிறிஸ்துவுக்கு ஒப்பாகவே நடந்துகொண்டார். வேற்றுலகப் புதுமை மனிதனாக ஆஸ்கார் நடந்துகொண்டது அவ்வூர் மக்களுக்கு வியப்பளித்தது.

சபைக் கட்டிடம் கட்டி முடிவடைந்தது. ஆஸ்கார் தன் வீட்டைக் கட்டத் தொடங்கினார். இவர் தனது வீட்டை சாண்டோஸின் இடத்தை ஒட்டி வேலிக்கருகில் கட்டினார்; சமையலறை சாண்டோஸின் வீட்டை ஒட்டி அமைந்திருந்தது. அதைக் கண்டவுடன் சாண்டோஸிற்கு ஒரே கொண்டாட்டம். பக்கத்து வீட்டுக்காரரைப் பழிவாங்குவதற்கு இதுவே நல்ல சந்தர்ப்பம் என்று அவர் எண்ணினார். அந்தச் சமையல் அறையை ஒட்டிய வேலிக்கருகில் கழிவுக் குழாயோடு இணைக்கப்படாத ஒரு கழிவறையைக் கட்ட அவர் முடிவு செய்தார். இந்த மனிதனால் இங்கு சமையலும் செய்ய முடியாது, குடியிருக்கவும் முடியாது என்று நினைத்த சாண்டோஸ், தான் நினைத்ததைச் செயல்படுத்தியும் விட்டார். அந்த நெடியில் யார்தான் நின்று சமையல் செய்ய முடியும்?

ஆனால், என்ன ஆச்சரியம், ஆஸ்கார் எப்பொழுதும் போல சாண்டோஸைக் காணும்போதெல்லாம் வாழ்த்தினார். நட்புடன் புன்முறுவல் பூத்தவராக மரியாதையை வெளிப்படுத்தினார். இருந்தபோதும் சாண்டோஸ் எதையும் கண்டுகொள்ளவில்லை; யுத்தத்தில் தான் ஜெயித்துவிட்டதாக நினைத்தார். ஆனால் யுத்தம் தேவனுடையது. நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் என்னும் வசனத்தில் ஆஸ்கார் மனநிறைவு கொண்டார்.

அந்தக் கழிவறை கட்டிட நிபுணரின் ஆலோசனையில்

கட்டப்பட்டதன்று. ஒருநாள், சாண்டோஸ் அதில் தன் காலைக்கடனை நிறைவேற்றிக் கொண்டிருந்தார், அப்பொழுது கழிவறை முழுவதும் இடிந்து விழுந்தது. அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள். முற்றிலும் அருவருப்பான அந்தக் காட்சியை எவ்வாறு விவரித்துச் சொல்ல முடியும்? தேவனுக்கு விரோதமாகப் போர்தொடுத்து, தோற்றுப்போனதை உணர்ந்த சாண்டோஸ், முள்ளில் உதைத்த தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்கு ஒப்பாகக் காணப்பட்டார். அந்த நாளில் அடைந்த அனுபவத்தை மீண்டும் அனுபவிக்கக் கூடாது என்று அவர் முடிவு செய்தார்.

இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. அந்தப் பரிதாபத்திற்குரிய சரித்திரம் மகிழ்ச்சியோடு முடிவடைந்தது. அந்த நிகழ்ச்சி சாண்டோஸின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டுபண்ணியது. அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தனது கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டார். "சாண்டோஸ் தன்னுடைய வாழ்க்கையைக் கர்த்தரிடம் ஒப்புவித்தபோது அதை முற்றிலும் ஒப்புவித்தார். அதுவே இந்த நிகழ்ச்சியின் சிறப்பாகும். இது வியக்கத் தக்கதாயிருக்கிறது. அந்தச் சிற்றூரில் உள்ள சிறிய சபையில் ஐக்கியம் உடையவராக அவர் இருந்தது மட்டுமின்றி, கர்த்தருக்காக வைராக்கியம் மிக்கவராக மற்றவர்களிடம் கிறிஸ்துவைப் பறைசாற்றும் பக்தி நிறைந்த பண்பாளராகவும் விளங்கினார்"

"கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்" என்று விவிலியப் பாடலாசிரியர் கூறியுள்ளார் (சங். 149:4). ஆஸ்கார் கியூபாவைப் போன்ற மனிதர்களிடம் அவர் பிரியம் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்பது எளிது. கிறிஸ்துவை அவர் தன் வாழ்க்கையில் உயர்த்திக் காட்டினார். அவர் தனக்கு எதிராகச் செய்யப்பட்ட கொடுமைகளைப் பொறுமையோடு சகித்தார். தன்னுடைய உரிமைகளுக்காக அவர் போர்க்கொடி உயர்த்தவில்லை. தனக்கு உபத்திரவம் கொடுத்தவர்களுக்காக ஜெபித்தார். கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்று அவர் உறுதியோடு இருந்தார். அவர் எதிர்ச்செயல் ஒன்றும் செய்யவில்லை.

கிறிஸ்தவர்கள் ஏன் எதிர்த்துச் செயல்புரியக் கூடாது



என்ற கேள்வியைக் கேட்டுப்பார்ப்போம். பிறரைப் போலவே நாமும் செயல்படுவோமெனில், நாம் புதியதொரு சமுதாயத்தை உருவாக்குகிறவர்கள் என்னும் நம்பகத்தன்மையை இழந்து போனவர்களாக அவர்கள் முன் காட்சியளிப்போம். நாம் வெளிப்படுத்தும் தாழ்மையானது, மனிதர்களை இரட்சிக்கும் இயேசு கிறிஸ்துவின் கிருபைமிகு சாட்சியின் ஒரு பங்காயிருக்கிறது. கிறிஸ்தவர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகவோ பழிவாங்கும் நோக்கத்துடனோ செயல்புரிவார்களென்றால், சபைக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியமாகிய நற்செய்திப் பணியானது நலிவுற்றுப் போகும்.

# 14

# மறுகன்னத்தைக் காட்டிய கடமைவீரன்



**எகிப்தில் பணிபுரிந்த** ஒரு ஆங்கிலேயப் படைத்தலைவனைத் திருவாளர் ஹேரால்டன் என்னும் பிரசங்கியார் சந்தித்தார். அந்தப் படைத் தலைவன் ஒரு சிறந்த கிறிஸ்தவராகத் திகழ்ந் தார். அவர் எவ்வாறு கிறிஸ்துவைத் தனது கர்த் தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டார் என்பதை திரு ஹேரால்டனிடம் விவரித்துக் கூறினார்.

இரண்டாம் உலகப்போர் மும்முரமாக நடந்து கொண்டி ருந்தது. அப்பொழுது அந்த ஆங்கிலேயப் படைத்தலைவன் மால்டாவில் போர்க்களத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவருடைய படைப்பிரிவில் போர்வீரர்களுக்கு உதவிசெய் தவற்காக ஒரு சிப்பந்தி இருந்தார். எளிமையான அந்த மனிதர் ஒரு விசுவாசி. கர்த்தரைக் குறித்துப் பிறரிடம் சாட்சி கூறுவ தற்கு அவர் வெட்கப்பட்டதில்லை. ஆனால் போர்வீரர்களோ அவரை ஏளனப்படுத்தினார்கள். அதில் அவர்களுக்குப் பெரு மகிழ்ச்சி. ஆனால் அதைக் குறித்து அந்தச் சிப்பந்தி பொருட் படுத்தவேயில்லை. தன்னுடைய கடமையைச் செய்வதில் கண்ணும் கருத்துமாக விளங்கினார்.

படைத்தலைவர் தன்னுடைய கதையைக் கூறினார்:

“அன்று கடுமையான போர். இரவு எங்களுடைய குடியிருப்புகளுக் குத் திரும்பினோம். மழை பெய்து கொண்டிருந்தது, மிகவும் களைப் படைந்தவர்களாயிருந்தோம். எங்கள் சிப்பந்தியும் எங்களுடன்தான் வந் தார். எல்லோரும் அவரவர் படுக்கைக்குச் சென்றார்கள். ஆனால் அந்த மனிதன் தன்னுடைய படுக்கைக்கு அருகில் தரையில் முழங்காலில் நின்று ஜெபிக்கத் தொடங்கினார். அதைக் கண்ட நான் மிகுந்த ஆத்திரம் அடைந்தேன். இன்றைக்கு இந்த மனிதனுக்குச் சரியாகக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். என்னுடைய காலணி களிமண் சேர்ந்து மிகவும் கனமாக இருந்தது. அதில் ஒன்றை எடுத்து அவரு டைய ஒரு கன்னத்தில் அடித்தேன். அந்த மனிதன் அசையவில்லை. என்னுடைய கோபம் அதிகரித்தது. இன்னொரு காலணியை எடுத்தேன். மறு கன்னத்தில் ஓங்கி அடித்தேன். அந்த மனிதன் இப்பொழுதும் அசைய வில்லை. தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். நான் உறங்கச் சென்றுவிட்டேன்.”

“அடுத்த நாள் காலை. என் படுக்கையிலிருந்து எழுந்தேன். என்னு டைய படுக்கைக்கு அருகில் என்னுடைய காலணிகள் இருந்தன. பளிச் சென்ற புதியவைபோல அழகாக இருந்தன. எனக்குப் புரிந்துவிட்டது. நான் செய்த கொடுமைக்கு அந்தச் சிப்பந்தி செய்த கைம்மாறு இதுதான். என்ன புதுமையான மனிதன். என்னுடைய உள்ளம் நொறுங்கியது. அன்றைக்குத்தான் நான் இரட்சிக்கப்பட்டேன்”

“உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன் னத்தையும் கொடு” என்று நமது இரட்சகர் கூறிய சொற் களுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அந்தச் சிப்பந்தி விளங் கினார் (லூக். 6:29). படைத்தலைவன் செய்த கொடுமைக்கு அவர் கொடுத்த பதில் அவரது இரட்சிப்பிற்குக் காரணமா யிருந்தது. அந்த விசுவாசி தன்னுடைய கர்த்தரைப் பின்பற்றி யது வீண்போகவில்லை.

இங்கே ஒரு எச்சரிப்பின் வார்த்தையைச் சொல்ல நான் விரும்புகிறேன். சரீரத்தில் இழைக்கப்படும் அவமதிப்பு படை வீரர்கள் மத்தியில் எப்பொழுதும் உயிருட்டம் உண்டாக்க வல்ல சாட்சியை உண்டுபண்ணும் என்று நாம் எதிர்பார்க் கக் கூடாது. தன்னுடைய கொள்கையில் உறுதியுள்ள விசு வாசியை உலகீய மனிதர்களும் மேன்மை பாராட்டுவதை நாம் காண்கிறோம். சிலவேளைகளில் அந்த விசுவாசிக்காக அவர்கள் தோள்கொடுப்பதையும் காணமுடியும் என்றே நினைக்கிறேன். ஒருசில அவிசுவாசப் படைவீரர்கள் கிறிஸ் தவருக்கு எதிராகச் செயல்புரியும்போது, பிற அவிசுவாசிகள் அந்தக் கிறிஸ்தவருடைய நலன் பேண உடனடியாக முன் வருகின்றனர். மயிர் கத்தரிக்கப்படுகிற ஆட்டிற்கு ஏற்றாற்

போலவே கர்த்தர் காற்றை வீசச் செய்கிறார். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்பட அவர் இடங்கொடுப்பதில்லை.

# 15

## கடுங்குளிரில் இளஞ்சூடு



**வட ஸ்காட்லாந்தில்** ஒரு சிற்றூர். கடும் குளிர் காலம். வெளியில் பனி பெய்து கொண்டிருந்தது. பக்தி நிறைந்த இறையூழியர் ஒருவர் நெருப்பின் அருகில் அமர்ந்து வேதத்தைத் தியானித்துக் கொண்டிருந்தார். கர்த்தரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டிய அவ்வூழியருக்கு அது மனமகிழ்ச்சியின் நேரமாக இருந்தது. கர்த்தரோடு நெருங்கி உறவாடுகிற அந்த அருமையான நேரத்தைக் காட்டிலும் ஒரு ஆவிக்குரிய விசுவாசிக்கு வேறு எந்த நேரம் இன்பமளிக்கும்?

ஆனால், அவருடைய மனைவியோ ஆவிக்குரிய பெண்மணியல்ல. கர்த்தரிடத்திலும் அவருடைய வார்த்தையினிடத்திலும் எவ்விதப் பற்றுமின்றி வாழ்ந்தாள். தன் கணவன் வேதம் வாசித்துக் கொண்டிருந்தைக் கண்டவுடன் அடக்க முடியாத கோபம் கொண்டாள். வேகமாக அறைக்குள் நுழைந்தவள், அவர் கையில் இருந்த வேதப்புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி, எரிந்து கொண்டிருந்த நெருப்பிலே எறிந்து விட்டாள்.

கோபமும் மூர்க்கமும்கொண்டு ஒருவர் தேவநிந்தனை செய்தால் கிறிஸ்தவர் எவ்வாறு பதிற்செய்வது? இவ்வித அக்கிரமச் செயலைச் செய்த தன் மனைவியை அவர் கடுமையாகக் கடிந்துகொள்ள வேண்டாமா? அல்லது தனது கிறிஸ்தவக் குணநலனை வெளிப்படுத்துவதற்கு இதனை ஒரு அருமை

யான சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதா? எது முறையானது?

கிறிஸ்தவக் குணநலனை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான அரிய சந்தர்ப்பமாகவே இதனை இறையூழியர் கருதினார். தன் மனைவியைக் கரிசனையோடு நோக்கிப் பார்த்தவர், "கடுங்குளிரில் இளஞ்சூட்டை இதைக் காட்டிலும் நல்ல முறையில் இதுவரை நான் அனுபவித்ததாக எனக்கு நினைவில்லை" என்று அமைதியாகப் பதிலுரைத்தார். அவருடைய பதில், "மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்" (நீதி. 15:1) என்னும் நீதிமொழிக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

கிருபையினால் உண்டாகும் மகிமை (*From Grace to Glory*) என்னும் நூலில் இந்நிகழ்ச்சியைச் சித்தரித்துக் காட்டிய திரு முர்டோக் கேம்ப்பெல் தொடர்ந்து எழுதுகிறார்:

> "அவருடைய கிருபை நிறைந்த செயல் அந்தப் பெண்மணியின் மாற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. அவளுடைய கோபம் தணிந்தது. கிருபை நிறைந்த புதியதொரு வாழ்க்கையை வாழத் தொடங்கினாள். அவருடைய யெசபேல், லீதியாளாக மாறினாள். முள் லீலிபுஷ்பமாக மாறிற்று."

இந்தச் சிறந்த சித்திரத்தை நிறைவு செய்யத்தக்க வகையில் ஒன்றை எடுத்துச்சொல்ல வேண்டியதாயுள்ளது. பெரும்பாலும் ஆண்களைக் காட்டிலும் கிறிஸ்தவப் பெண்டிரே இவ்வகையான தாக்குதலுக்கு ஆளாகின்றனர். பொறுமையின் சிகரமாகச் சிலர் விளங்கி கிறிஸ்துவைப் பிரதிபலித்துக் காட்டியுள்ளனர்.

லிண்டா என்பவள் இதற்கொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறாள். டோனி கட்டழகன். பழகுவதற்கு இன்பமானவன். இவனைக் கணவனாக அடைவது எத்தனை பெரும் பாக்கியம் என்றே அவள் எண்ணினாள். அவனைத் திருமணமும் செய்து கொண்டாள். இவையாவும் அவளுடைய இரட்சிப்புக்கு முன்னர் நடந்தவை.

இப்பொழுது அவள் இயேசு கிறிஸ்துவைத் தனது கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டுவிட்டாள். அவர்களுக்கு முதல் குழந்தை பிறந்துவிட்டது. தனது கணவன் இரட்சிக்கப்படவில்லையே என்ற நினைவு அவளை வருத்தியது. வேலைக்குச் செல்வதென்றாலே அவனுக்கு வெறுப்பு. கணவனுக்குரிய கடமைகள் எதையும் செய்வதில்லை. மது அருந்துவதும் இளம் பெண்களுடன் உல்லாசமாகத் திரிவதும் அவனுக்குப் பிடித்தமான செயல்கள். தோற்றத்தைக் கண்டு தான் தவறிழைத்துவிட்டதாக லிண்டா எண்ணி வருந்தினாள்.



இடையிடையே அவன் வீட்டிற்கு வருவதில்லை. சில மாதங்கள் தொடர்ந்து வராமலும் இருப்பான். திரும்பவும் வருகிறபோது எதுவும் நடக்காதது போல நடந்துகொள்வான். தொடர்ந்து பல மாதங்கள் தன் மனைவியோடு இருந்தான். இரண்டாவது குழந்தை பிறந்துவிட்டது. மீண்டும் அவன் போய்விட்டான். குடும்பப் பொறுப்பு முழுவதும் அவள்மீது விழுந்துவிட்டது. வீட்டுத் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். குழந்தைகளைப் பராமரிக்க வேண்டும்.

*1 பேதுரு 3:1-2* - இல் கூறியிருக்கிறபடி பக்தி நிறைந்த மனைவியாக இருக்க வேண்டும் என்று லிண்டா விரும்பினாள்:

> அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.

லிண்டா தனது கணவனை எதிர்த்துப் பேசவில்லை, ஓயாமல் குறைகூறவுமில்லை. தனது கற்புள்ள நடக்கையினாலே கணவனை ஆதாயப்படுத்த முயற்சி செய்தாள். வேற்றுலகப் புதுமைப் பெண்ணாக அவள் நடந்துகொண்டாள்.

பேதுருவின் அறிவுரையைத் தங்களுடைய வாழ்க்கையில் வெளிப்படுத்திக் காட்டிய பெண்களைப் பற்றி எழுத வேண்டுமானால் புத்தகங்கள் கொள்ளா. ஆம், பல பெண்கள் நடக்கையினாலே தங்களுடைய கணவர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தியுள்ளனர். அவர்களுள் லிண்டாவும் ஒருத்தி.

16

# பகைஞரிடம் அன்பு பாராட்டிய பக்தன்



**"உங்கள் சத்துருக்களைச்** சிநேகியுங்கள்" என்று இயேசு கிறிஸ்து மொழிந்துள்ளார் (லூக். 6:27). இதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆயின் அதற்கு அவர் எழுத்தின்படியே பொருள் கொள்ள வேண்டும் என்று கூறினாரா? அல்லது அது ஒரு கருத்தளவிலான நிலை மட்டுமே என்றும், அந்நிலையை அடைவதற்கு நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினாரா? ஒருவன் தன்னுடைய பகைஞரிடம் அன்பு பாராட்டுவது என்பது இயற்கைக்கு அப்பாற்பட்டது. ஒருவேளை நாம் அன்பு கூர்ந்தாலும் அவர்கள் நம்மீது பகைமையை வளர்த்துக் கொள்ளக் கூடியவர்களாகவே இருப்பார்கள். அப்படிப்பட்ட மனிதர்களிடம் நாம் ஏன் அன்பு செலுத்த வேண்டும்? நம்மை வெறுக்கிறவர்களிடம் அன்புகூர்வது இயலாத ஒன்றாகவே தோன்றுகிறது. ஆகவே, கர்த்தர் கூறிய இக்கட்டளை, அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதன்று என்பதற்கான விளக்கத்தைக் கொடுக்க முயலுகிறோம். இக்கட்டளையைக் குறித்து நாம் கலக்கம் அற்றவர்களாக இருப்பதற்கு அதுவே வழிவகுக்கும் என்றும் கருதுகிறோம்.

இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து கூறிய சொற்கள் அவ்வாறே பொருள்கொள்ள வேண்டியவை என்று நமது இருதயத்தின் ஆழத்தில் அறிந்தவர்களாகவே இருக்கிறோம். அவர் ஒரு கட்டளையைக் கொடுக்கும்போது, அதற்குக் கீழ்ப்படிவதற்குத் தேவையான வலிமையைத் தருகிறார் என்பதை நாம் அவ்வப்போது மறந்து விடுகிறோம். மனித சிந்தனையின்படி கூறுவோமெனில், நமது பகைவரை நம்மால் நேசிக்க முடியாது. பொதுவாக, கிறிஸ்தவ வாழ்க்கையிலும் அது உண்மையாகவே காணப்படுகிறது. ஆயினும், நமது உள்ளத்தில் குடியிருக்கும் தூய ஆவியானவரின் வல்லமையினாலும், அவருடைய நிறைவினாலும் அப்படிப்பட்ட வாழ்க்கையை நம்மால் வாழ்ந்து, வெற்றிபெற முடியும்.

நமது இரட்சகருடைய இக்கூற்றின் உண்மையை மழுங்கச் செய்யும் மனப்பான்மை உடையோராகவே நாம் இருக்கிறோம். ஆனால் அதே சொற்களுக்கு வேறொரு விசுவாசி கீழ்ப்படியும்போது, நமது மனப்பான்மையில் மாறுதல் உண்டாகிறது. சிலருடைய வாழ்க்கையில் சில வசனங்களின் பிரதிபலிப்பு வெளிப்படும்போது அவ்வசனங்கள் உயிரூட்டம் பெற்றவையாகக் காட்சியளிக்கின்றன. உண்மையாக நடந்த நிகழ்ச்சிக்கு எதிராக நாம் வாதிட முடியாது. தன்னுடைய பகைஞரை உண்மையாகவே நேசிக்கும் ஒரு கிறிஸ்தவரைக் காட்டுங்கள்; அப்பொழுது அதை நான் உண்மையென்று நம்புவேன் என்று நீங்கள் கூறலாம்.

அந்த நிகழ்ச்சியை என் கண்கூடாக நான் கண்டேன். ஒரு மனிதருடைய வாழ்வில் லூக்கா 6:27 -ஆம் வசனம் பிரதிபலித்ததை நான் பார்த்தேன். அவருடைய பெயர் தியோ மேக்குலி என்பதாகும். நான் நிர்வாக அதிகாரியாக இருந்த வேத பள்ளியின் தலைவராக அவர் பணியாற்றினார். ஈகுவேடார் நாட்டில் இறையூழியம் செய்யும்படிச் சென்று, அங்கு தங்களது உயிரைக் கொடுத்த ஐவரில் ஒருவராகிய எட் மேக்குலி என்பாரின் தந்தையே அன்னார்.

வேத பள்ளியின் தேவைகளைக் குறித்து ஓர் இரவு நாங்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தோம். என்ன செய்ய வேண்டுமென்று என்னிடம் ஒருக்காலும் அவர் சொன்னதில்லை. "அதைக் குறித்து நாம் ஜெபிப்போம்" என்று மட்டுமே கூறுவார். ஆகவே அந்த இரவிலே நாங்கள் இருவரும் முழங்காற்படியிட்டு வேத பள்ளிக்காக ஜெபிக்கத் தொடங்கினோம்.

அவர் தம்முடைய ஜெபத்தின் இறுதிக்கு வந்துவிட்டார். அப்பொழுது அவருடைய எண்ணம் ஈகுவேடார் நாட்டை நோக்கிச் சென்றது. அங்கே குராரே ஆற்றங்கரையில் கற்கால மனிதர்களாக வாழ்ந்த இந்தியர்கள் அவருடைய மகனை ஈட்டியால் குத்திக் கொலை செய்து விட்டனர். இறையூழியம் செய்வதற்கென அங்கு சென்று மடிந்த அவரது மகன் எட் மேக்குலியைப் பற்றி சிந்தித்தார். எட் ஒரு சிறந்த மனிதன். நல்ல மகனும் ஆவார். தன்னுடைய பெற்றோர்கள் கவலைப்படும்படியான சந்தர்ப்பத்தை அவர் ஒருக்காலும் கொடுத்ததில்லை. "கர்த்தாவே, எங்களுடைய பிள்ளைகளைக் கொன்ற அந்த மனிதர்கள் இரட்சிக்கப்படும்வரை நான் உயிரோடு இருக்க வேண்டும். அவர்களை நான் காணும்போது என்னுடைய கரங்களை அவர்களுடைய தோளின்மேல் போட்டு, கிறிஸ்து அவர்களிடம் அன்புகூருவதால் நானும் அவர்களிடம் அன்புகூருகிறேன் என்று சொல்ல வேண்டும்" என்று தியோ மேக்குலி கூறி ஜெபித்து முடித்தார்.

நாங்கள் எங்களுடைய முழங்காலிலிருந்து எழுந்தபோது அவருடைய கன்னங்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று. அது ஒரு புனிதமான நேரம். அத்தகைய நேரத்தைத் திரும்பப்பெற முடியாது. தனது அன்பு மகனைக் கொலை செய்த அக்கொலைகாரர்களை உண்மையாகவே நேசித்த ஒரு மனிதனை இங்கே காண்கிறோம். ஔகா இந்தியர் இரட்சிப்படைய வேண்டும் என்ற உன்னத நோக்கம் கொண்டவராக, தன்னுடைய சட்ட நிபுணர் தொழிலை உதறித்தள்ளிவிட்டு நற்செய்தியை ஏந்திச் சென்று கொலையுண்ட தன் இனிய மகனை இழந்த அந்தப் பக்தனின் அன்பை என்னவென்று போற்றுவது?

அந்தப் பக்தனின் மன்றாட்டு தேவனுடைய விண்ணுலகத்தைச் சென்றடைந்ததில் எவ்வித வியப்பும் இல்லை. இறுதியில் ஔகா இந்தியர்களை இறையூழியர்கள் வெற்றிகரமாகச் சென்றடைந்தனர். (இப்பொழுது அவர்கள் வௌரானீஸ் என்றழைக்கப்படுகின்றனர்) காலம் செல்லச் செல்ல அந்தக் கொலைகாரரில் பலர் கிறிஸ்துவைத் தங்களது இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். திருவாளர் தியோ மேக்குலியின் விண்ணப்பத்திற்கு தேவன் பதில் கொடுத்துவிட்டார். அவர் ஈகுவேடார் சென்றார். அந்தப் புதிய விசுவாசிகளை அன்போடு அரவணைத்துக்கொண்டார். தனது இரட்சகர் அவர்களுடைய இரட்சகராகவும் இப்பொழுது இருப்பதால், தான் அவர்களிடம் அன்பு பாராட்டுவதாக அவர் கூறினார்.



ஆம், இயேசு கிறிஸ்துவின் திருவார்த்தைகள் வெளியரங்கமான பொருள் உடையவையாகவே இருக்கின்றன. நாம் நம்முடைய பகைவரை நேசிக்க வேண்டும். அவ்வாறு நாம் செய்யும் வேளையில், உலகில் ஆக்கபூர்வமாக விளைவுகளை உண்டு பண்ணுகிறோம். மற்ற விசுவாசிகளும் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய நமது செயல்பாடுகள் ஊக்கம் அளிக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் கடினமான சொற்களுக்கு உயிரூட்டம் அளிக்கின்றோம். இயேசு கிறிஸ்து எவ்வாறு இருக்கிறார் என்பதற்கு நாம் மெய்யான பிரதிபலிப்பாக விளங்குகின்றோம். அவருடைய பகைஞராகிய நம்மீது அவர் அன்பு பராட்டுகிறவராக இருக்கிறார். ஆம் அதுவே நமக்காக அவர் மரணம் அடைவதற்குப் போதுமான காரணமாயிற்று.

இதனை நாம் பிரதிபலித்துக்காட்ட வேண்டாமா?

# 17

## தெய்வீக மன்னிப்பு



**இரண்டாம் உலகப்போர்** வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. நாசி கட்சியினர் சென்ற இடமெல்லாம் வெற்றிபெற்றுக் கொண்டிருந்தனர். அவர்களது கொடுங்கோல் ஆட்சியில் மக்கள் சிக்குண்டு தவித்தனர். குறிப் பாக யூதர்கள் சொல்லொண்ணா துயரத்திற்கு ஆளாயினர். பல்லாயிரக் கணக்கான யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்த நாட்களில் டென் பூம் என்னும் குடும்பத்தினர் ஹாலந்து நாட்டில் வசித்தனர். தெய்வப் பற்று மிக்க அந்த இல்லத்தார் கிறிஸ்துவுக்கு நல்ல சாட்சிகளாக விளங்கினர். யூத மக்கள் நாசி கூட்டத்தாரிடம் சிக்குண்டு அல்லல்படுவதைக் கண்டு அவர்கள் உள்ளம் உருகினர். தங்களுடைய இல்லத்தை யூதர்களுக்குப் புகலிடமாகத் திறந்து கொடுத்தனர். ஆனால் அது எளியதொரு செயலன்று. யூதர்களுக்குப் புகலிடம் கொடுப்பது சட்டப்படி குற்றம் என்று அரசு அறிவித்திருந்தது.. அதுமட்டுமல்ல, அவ்வாறு புகலிடம் தருவோர் பிடிபட்டால் யூதர்கள் அடைக்கப்படும் சித்ரவதைக் கூடத்திலே அவர்களும் அடைக்கப்படுவார்கள். தாங்கொண்ணா வேதனை, சொல்லக் கூடாத பாடுகள் ஆகியவற்றை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். அங்கு சென்றவர்கள் திரும்பி வருவதில்லை. மரணமே அவர்களது முடிவு.

டென் பூம் இல்லத்தில் பல யூதர்கள் நீண்ட காலமாகப் பாதுகாப்பைப் பெற்றனர். கிறிஸ்துவின் அன்பை யூத மக்களுக்குத் தந்தருளின அந்தக் குடும்பமும் ஒருநாள் கொடுங்கோலரிடம் சிக்குண்டது. திருவாளர் டென் பூம், அவருடைய குமாரத்திகள் கூரி மற்றும் பெட்சி ஆகிய மூவரும் ரேவன்ஸ் பிரக் என்னுமிடத்தில் இருந்த கைதிகளின் முகாமிற்கு கொண்டுபோகப்பட்டனர்.

சித்ரவதைக் கூடத்தில் நடந்த கொடுமைகளை வாயினால் விவரிக்க முடியாது. அந்த மனிதர்களுக்கு இரக்கம் என்றால் என்னவென்று தெரியாது. அவ்வப்போது வெளிப்படும் அவர்களது காட்டுமிராண்டித்தனத்தை அளவிட முடியாது. திருவாளர் டென் பூம் அங்கே மடிந்தார். சகோதரி பெட்சியும் தாங்க முடியாத கொடுமைக்குள்ளாகி அந்தக் கூடத்திலேயே மரித்தார். தந்தையையும் சகோதரியையும் இழந்த கூரி சொல்லொண்ணா வேதனைகளுக்குட்பட்டவராகத் தவித்தார். எதிர்பாரா விதமாகப் போர் முடிவடைந்து விட்டது. நாசி அரசு படுதோல்வி அடைந்தது. இறுதியில் கூரி அந்தக் கூடத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்.

போர் முடிந்து அண்டை நாடுகளுக்குள்ளாக அமைதி நிலவியது. கூரி ஜெர்மனிக்குப் பயணம் மேற்கொண்டார். அங்கே ஓர் இரவு, கிறிஸ்தவ ஆலயம் ஒன்றின் கீழ்தளத்தில் அவர் பேசுவதற்கென்று கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கே கிறிஸ்துவின் அன்பைப் பற்றி கூரி பேசினார். தொடர்ந்து இயேசு கிறிஸ்து அருளும் மன்னிப்பைப் பற்றியும் பேசினார். "நம்முடைய பாவங்களை அவரிடம் அறிக்கை செய்வோமென்றால் அவற்றை மன்னிக்க அவர் தயை உடையவராக இருக்கிறார். அப்பாவங்களை அவர் ஆழ்கடலில் மூழ்கடித்துவிடுகிறார். மேலும் இங்கே எதையும் தேடாதீர்கள் என்ற அறிவிப்புப் பலகை ஒன்றையும் அவர் நிறுத்துகிறார்." இதுதான் கூரியின் செய்தியாக இருந்தது.

கூட்டம் முடிவடைந்துவிட்டது. வந்த மக்கள் உள்ளம் தொடப்பட்டோராய் அமைதியாக அரங்கைவிட்டு வெளியே சென்றனர். ஆனால் ஒரு மனிதன் அரங்கின் முன்பகுதியை நோக்கியவண்ணம் வந்து கொண்டிருந்தான். கூரியின் அருகில்

வந்து விட்டான். நீல நிறச் சட்டை அணிந்த அந்த மனிதன் தன் தலையில் நீண்டதொரு தொப்பி ஒன்றையும் அணிந்திருந்தான். அதில் ஒரு மண்டையோட்டின் படமும் அதற்கடியில் ஒன்றுக்கொன்று குறுக்காக இரண்டு எலும்புகளும் வரையப்பட்டிருந்தன. அந்த மனிதன் யாரென்று கூரிக்குத் தெரிந்துவிட்டது. ஆம், அவன் ரேவன்ஸ்பிரக்கில் பணியாற்றிய போர்வீரன்.

கூரியின் அருகாமையில் வந்த அந்தப் போர்வீரன் தனது கரத்தை நீட்டினான். "நல்ல செய்தி அம்மையாரே! நீங்கள் சொன்னபடி, நம்முடைய பாவங்கள் அனைத்தும் ஆழ்கடலில் மூழ்கிவிட்டன. இதை அறியும்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று அவன் கூறினான்.

சித்ரவதைக் கூடத்தில் நடந்த கொடுமைகள் கூரியின் கண்முன் தொடர் படங்களாகக் காட்சியளித்தன. அவருடைய இரத்தம் கொதித்தது.

"நீங்கள் ரேவன்ஸ்பிரக்கைப் பற்றிப் பேசினீர்கள். அங்கே நான் போர்வீரனாகப் பணிபுரிந்தேன். அங்கே பல கொடுமைகள் புரிந்தேன். ஆனால் அந்த நாட்களில்தான் நான் இரட்சிக்கப்பட்டேன். இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாக வாழ்கிறேன். நான் செய்த கொடுமைகள் அனைத்தையும் தேவன் மன்னித்துவிட்டார் என்பதை அறிவேன். ஆனால் உங்கள் வாயிலிருந்து அந்த மன்னிப்பின் வார்த்தைகளைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் என்னை மன்னிப்பீர்களா?" என்று தொடர்ந்து வினவினான் அந்தப் போர்வீரன்.

இந்த மனிதனையா மன்னிப்பது? கூரியின் உள்ளத்தில் கசப்பு பெருக்கெடுத்து ஓடியது. இவர்களல்லவா யூதர்களுக்குத் துரோகிகளாக விளங்கினர். எத்தனை கொடுமைகள் புரிந்தனர். இரக்கமற்ற காட்டுமிராண்டிகள், என்னுடைய குடும்பம் இவர்களால் அழிந்து போயிற்று. இரைப்பையில் ஊறிய கசப்புநீர் அமிலம் போலக் கொதித்தது.

கூரிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மலைத்துப்போய் நின்று விட்டார். பல மணி நேரம் கடந்தது போலத் தோன்றிற்று. ஆனால் ஒரு சில வினாடிகள்தான் அந்த நிலைமை தொடர்ந்தது. கூரி பதில் சொல்லத் தொடங்கினார். தனது மேலங்கியின் பையிலிருந்து கரத்தை வெளியே



எடுத்தார். எதிரே நின்ற மனிதனின் கரத்தைப் பிடித்துக் கை குலுக்கினார். "சகோதரனே, தேவன் உம்மை மன்னித்த பிறகு, நான் எப்படி உம்மை மன்னிக்காமல் இருக்கமுடியும்? இதய பூர்வமாக நான் உம்மை மன்னிக்கிறேன்" என்று கூறினார்.

முன்னாள் சிறைக் கைதியும், சிறைக் காவலனும் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டனர். எவ்வளவு நேரம் சென்றது என்று தெரியவில்லை. இப்பொழுது இருவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகிவிட்டனர்.

கிறிஸ்துவுக்கு ஒப்பான குணநல நடத்தையைக் குறித்து நான் சிந்திக்கும் போதெல்லாம், டென் பூம் குடும்பத்தாரைப் பற்றியே நான் நினைப்பேன். என்ன வேதனை, என்ன பாடுகள். எவ்வளவாக இழிவுபடுத்தப்பட்டனர். அந்தப் பாடுகளின் மத்தியில் கிறிஸ்துவின் சிந்தை அவர்களை ஆட்கொண்டது. அவர்கள் தங்களைக் குறித்து அல்ல, பிறரைக் குறித்தே சிந்தித்தனர். அவர்களது உள்ளம் கசப்படையவில்லை, எரிச்சல் அடையவில்லை, தேவனைக் குறைகூறவுமில்லை. நாசி கூட்டத்தால் படுவேதனை அடைந்த அக்குடும்பம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பிற்கும் கிருபைக்கும் மாதிரிகளாகத் திகழ்ந்தனர். கொடுமை என்னும் தீயில் தங்களை எறிந்தவர்களையே அவர்கள் மன்னித்தது புதுமையல்லவா? "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்."

# 18

## அற்ப ஆசை



**வயது முதிர்ந்த** பிலிப்பு பாட்டியின் மன மகிழ்ச்சிக்கு அளவில்லை. அவரும் அவருடைய இரண்டு குமாரர்களும் மருமக்களும் கிறிஸ்தவர்கள். பேரப் பிள்ளைகளும் கிறிஸ்துவைப் பின்பற்றும் நல்ல விசுவாசிகளாக இருந்தனர். மேலும் அவர்களுக்குள்ளாக நல்ல ஐக்கியம் நிலவியது. இதைக் காட்டிலும் ஒரு தாய்க்கு வேறு என்ன தேவை?

மூத்த மகன் ஸ்காட்டும் அவரது மனைவி சாராவும் பிள்ளைகளோடு அதே ஊரில் வசித்தார்கள். அவ்வப்போது அவர்கள் பாட்டியின் வீட்டிற்குச் சென்று அவருடைய நலம் விசாரித்து, அவருடைய தேவைகள் என்னவென்று அறிந்து அவற்றை நிறைவு செய்து வந்தனர். இரண்டாவது மகன் ரோனும் அவருடைய மனைவி ரோசும் இருபது கல் தொலைவில் உள்ள ஊரில் வசித்தனர். எனினும் அவர்களும் அவ்வப்போது பாட்டியைச் சந்தித்துச் சென்றனர். இருவரும் நல்ல வேலையில் இருந்தனர். இரண்டு குடும்பத்தாருக்கும் பணப்பற்றாக்குறை ஏதுமில்லை. நன்றியறிதல் நாள், புத்தாண்டு மற்றும் குடும்பத்தின் சிறப்பான நாட்களில் அனைவரும் ஒன்றுகூடி, உண்டு மகிழ்ந்து ஐக்கியத்தையும் அன்பையும் பரிமாறிக்கொண்டனர்.

திடீரென்று ஒருநாள் மாரடைப்பால் பாட்டி இறந்துவிட்டார். பிள்ளைகள் வந்து பார்த்தபோது தன்னுடைய சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் இருந்தார். அவருடைய வேதாகமம் திறந்தபடி இருந்தது. அவர் பெரிய சொத்து எதையும் விட்டுச் செல்லவில்லை. நடுத்தர வசதிகள் கொண்ட குடும்பம். அந்தச் சூழ்நிலையில்தான் பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்த்தனர். சில பங்குப் பத்திரங்கள் இருந்தன. சேமிப்புக் கணக்கில் பத்தாயிரம் டாலர் பணம் இருந்தது. இன்னும் சில அழகிய பொருட்கள், சைனா தேநீர் கோப்பைகள் போன்றவையும் இருந்தன. இருக்கின்ற பொருட்களையும் சொத்துகளையும் பிள்ளைகள் எவ்விதச் சச்சரவும் இன்றி பகிர்ந்து கொள்வார்கள் என்ற எண்ணத்தில் சாசனம் எதையும் பாட்டி எழுதிவைக்கவில்லை.

ஆனால் நடந்ததோ வேறு விதமாக இருந்தது. எல்லாச் சொத்துக்களும் தங்களுக்கே சேர வேண்டும் என்பதுபோல மருமகள் ரோஸ் நடந்துகொள்ள ஆரம்பித்தாள். ரோனுக்கு வேறு வழி தெரியவில்லை. என்னவாயினும் தன் மனைவியுடன் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் தன் மனைவியை ஆதரித்தார். மொத்தக் குடும்பமும் இணைந்து வாழ்ந்தனர்; ஆனால் இப்பொழுதோ பேராசையின் நிமித்தம் அந்த உறவு அறுந்துபோகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஸ்காட்டும் அவரது மனைவியும் சமாதானமாகப்போக வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்த முயற்சிகள் யாவும் வீணாயின. வெறுப்பே அதிகரித்தது.

ஸ்காட்டும் சாராவும் சமாதான உடன்பாடு அடைய ஊக்கமாக ஜெபித்தனர். அத்தருணத்தில் ஆபிரகாம் லோத்து ஆகியோருடைய கதை ஸ்காட்டின் நினைவிற்கு வந்தது. இந்த இரண்டு மனிதர்களும் எகிப்தை விட்டு கானான் நாட்டிற்கு வந்தனர். அவர்கள் இருவருடைய மந்தைகளுக்கும் போதுமான புல்வெளி அங்கே இல்லாததால் அவர்களுடைய மந்தை மேய்ப்பருக்குள்ளாக வாக்குவாதம் ஏற்பட்டது. சூழ்நிலை மோசமாகப் போயிற்று. அப்பொழுது ஆபிரகாம் லோத்துவை நோக்கிக் கூறியதாவது:

> "எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்து போகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ

வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்" (ஆதி. 13:8 – 9).

நீர்வளம் பெருகினயோர்தான் சமபூமியை லோத்து தெரிந்துகொண்டு சோதோம் நகரத்தில் வசித்தான். ஆபிரகாம் கானான் தேசத்தைத் தெரிந்து கொண்டான்.

சாராவிடம் இந்தக் கதையை ஸ்காட் நினைவுபடுத்தினார். அவர்கள் சிறந்ததொரு முடிவை எடுத்தனர். ரோனும் ரோசும் விரும்பினால் குடும்பச் சொத்து முழுவதையும் அவர்களே எடுத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் தீர்மானித்தனர். உலகப் பொருட்களை நாடி குடும்பத்தில் சச்சரவு ஏற்படுவதைவிட, அதை விட்டுக்கொடுத்து நல்லுறவு உடையவர்களாக இருப்பதே மேல் என்று அவர்கள் எண்ணினர்.

ரோனும் ரோசும் திகைத்துப் போயினர். அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள அவர்கள் வெட்கப்பட்டனர். சில அலங்கார நகைகள், சைனா கோப்பைகள் போன்ற சில அற்பமான பொருட்களில் ரோஸ் மனநிறைவு அடைந்தாள். மீதி எல்லாவற்றையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று அவர்களே கூறினர். உறவு முறிந்துவிடுவதுபோல இருந்த சூழ்நிலை மாறி சமாதான உடன்பாட்டை அவர்கள் எய்தினர்.

இதுபோல் எப்பொழுதும் நடைபெறுவதில்லை. "எங்கே சாசனம் எழுதப்பட்டதோ, அங்கே பல உறவினர்கள் உள்ளனர்" என்னும் கூற்று அவ்வப்போது உண்மையென வெளிப்படுகிறது. பொதுவாக, தாராள குணமுள்ளவர்களும் அமைதியான மனப்பான்மை உடையவர்களும்கூட, மங்கிப் போகிறதும் அற்பமானதுமான பொருட்களுக்காக வாக்குவாதம் செய்து உறவை முறித்துக்கொள்ளுகின்றனர்.

தேவனுடைய வழியே சிறந்த வழி. லோத்திற்குத் தனது உரிமையை விட்டுக்கொடுத்ததினால் ஆபிரகாம் செல்வந்தனானான். சோதோம் அருகில் இருந்த சமவெளியைத் தெரிந்தெடுத்த லோத்து வறுமையடைந்தான்.

# 19

## அனுக்கிரக கால மனிதன்



**புதிய ஏற்பாட்டில்** குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைச் சென்று பார்ப்பது என்றாலே கிறிஸ்தவர்களுக்குக் கொண்டாட்டம்தான். அதுவே ஒரே சபையைச் சேர்ந்த விசுவாசக் குடும்பத்தினர் பலர் ஒன்று சேர்ந்து சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளுவதாக இருக்குமென்றால் அதில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. குறிப்பிட்ட இடங்களைக் கண்டுகளிக்கும்போது அவர்கள் கண்முன் வேதாகம நிகழ்ச்சிகள் தொடர்படம் போல ஓடும். விசுவாசிகள் அந்நிகழ்ச்சிகளோடு ஒன்றிணைந்து விடுவார்கள்.

அவ்வாறு பயணம் மேற்கொண்ட ஒரு குழுவிற்குப் பாடல் தலைவராகத் திருவாளர் டிக் ஃபால்க்னர் பணியாற்றினார். அந்தக் குழுவை வழிநடத்த ஒரு வழிகாட்டியும் இருந்தார். அப்போஸ்தலனாகிய யோவான் கடத்தப்பட்ட பத்மு தீவிற்கு அன்று அவர்கள் பயணம் மேற்கொண்டனர். அத்தீவில் ஒரு குகையில் தங்கியிருந்து, வெளிப்படுத்தின விசேஷத்தை அவர் எழுதினதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குகையிலிருந்து வெளியே வந்த கூட்டத்தார் அருகில் இருந்த மலைமீது ஏறினார்கள். அங்கே நின்று யோவான் எவ்வாறு பேரரசன் டொமிடியனால் கைது செய்யப்பட்டார், நாடுகடத்தப்பட்டார் என்பதைப் பற்றி அந்த வழிகாட்டி ஒரு பிரசங்கம் ஆற்றினார். பின்னர் ஒரு பாடலைப் பாடும்படி டிக்கைக் கேட்டுக்கொண்டார்.

தன்னோடு ஒலிபெருக்கிகளை டிக் கொண்டுவந்திருந்தார். அவர் பாடும்போது இன்னிசை அந்தத் தீவு முழுவதும் தொனிக்கும். வெளிப்படுத்தின விசேஷம் 5:12-ஆம் வசனத்தைப் பாடலாக டான் வைர்ட்ஜன் என்பார் வரைந்துள்ளார். அதனை அன்று அவர் பாடினார்.

> ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே,
> அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே!
>
> வல்லமையையும் ஐசுவரியத்தையும்
> ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும்
> மகிமையையும் ஸ்தோத்திரத்தையும்
> பெற்றிடப் பாத்திரர் அவர்தாமே!
>
> ஆட்டுக் குட்டியானவர் பாத்திரரே,
> அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே!

இயேசு கிறிஸ்துவின் மீட்பின் செயலைப் பற்றிய நற்செய்தி மலைப்பாங்கான அத்தீவின் எட்டுத்திக்கிலும் தொனித்தது.

அவர் இன்னும் பாடலை முடிக்கவில்லை. வேறொரு சுற்றுலாக் குழுவினர் அங்கு வந்தனர். அக்கூட்டத்தைச் சேர்ந்த பலரும் இவர்களைக் கண்டும் காணாததுபோலக் கடந்து சென்றனர். ஆனால் ஒரு பெண்மணி, குள்ளமாக கறுப்பாக இருந்தாள். டிக்கின் அருகில் வந்தாள்; அவருடைய முகத்தில் காறி உமிழ்ந்தாள். அவளுடைய குறி தப்பவில்லை. ஆனால் அவளுடைய அநாகரிகச் செயல் அவர் பாடுவதைத் தடைசெய்யவில்லை. மெய் மறந்து பாடினார். அவருடைய முகம் விண்ணுலகில் சஞ்சரிப்பவர் போலவே தோன்றிற்று. "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரே" என்று பாடி முடித்தார்.

கிறிஸ்தவச் சுற்றுலாக் குழுவினர் கோபம் கொண்டனர். பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கூறினர். இந்த அநாகரிகச் செயலை சும்மா விடக்கூடாது என்றும் கூறினர். ஆனால் டிக் அதற்கு இடங்கொடுக்கவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முகத்தை இவ்வுலக மனிதர்கள் அவமானத்தாலும் உமிழ்நீரினாலும் மறைத்தனரே! அவர் எதிர்த்துப் போராடவில்லை. அவர் ஏளனம் செய்யப்பட்டார், அவர்மீது துப்பினார்கள். ஆனால் நமது இரட்சகரோ பதிலுக்குப் பதில் செய்யவில்லை. இயேசு கிறிஸ்துவின் முகத்தில் மனிதர்கள் காறி உமிழ்ந்தபோது, "உம்மைக்குறித்து இப்படித்தான் நாங்கள் எண்ணுகிறோம்" என்று படைப்பாளரைப் பார்த்து அவருடைய படைப்புகள் சொல்வதாக இருந்தது. ஆனால் அந்தப் படைப்பாளர் சிலுவையில் தம் உயிர் ஈந்தார். "உங்களிடம் எவ்வளவாக அன்பு கூருகிறேன் பாருங்கள்" என்று அவர் தம் படைப்புகளை நோக்கிக் கூறுகிறார்.

அவருடைய இத்தகைய ஆவியை உடையவர்களாக நாம் காணப்படும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" (ரோமர் 12:19). நாம் கர்த்தருடைய அநுக்கிரக காலத்திலே வாழ்கிறோம். தேவனுடைய கோபாக்கினை நாள் இதுவல்ல என்பதை நினைவுகூருவோம்.

20

# இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பாராட்டிய தயை



"பழைய பேப்பர், இரும்புச் சாமான், உடைந்த பிளாஸ்டிக்" தெருவில் சத்தம் ஒலித்தது. இப்பொழுதெல்லாம் இந்தச் சத்தம் எப்போதாவது தான் கேட்கிறது. சத்தத்தைக் கேட்டவுடன் அயர்ன்சைடு வேகமாக வீட்டிலிருந்து வெளியே வந்து அந்த மனிதனைக் கூவி அழைத்தார். அவன் ஒரு யூதன்.

பழைய செய்தித் தாட்களையும், வீணாகிப் போன உலோகப் பொருட்களையும் சேர்த்து வைத்துப் பணமாக்கும் பழக்கம் பழைய நாட்களில் மேலைநாடுகளிலும் இருந்து வந்தது; இப்பொழுது அந்தப்பழக்கம் அறவே நின்றுபோய்விட்டது.

அயர்ன்சைடு யூதர்களிடம் மிகவும் பாசமாக நடந்து கொள்வார். அவருடைய ஆன்ம இரட்சகரும் ஒரு யூதர்தானே!

பழைய பொருட்களை வாங்கி தன் வாழ்க்கையை நடத்தும் அந்த யூதனைப் பார்த்தவுடன் H. A. அயர்ன்சைடு மகிழ்ச்சியடைந்தார். வீட்டின் கீழ்தளத்திற்கு அவனை அழைத்துச் சென்றார். பழைய செய்தித்தாட்கள் அங்கே மறைவாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இரும்புக் குழாய்களும் மற்ற உலோகப் பொருட்களும் நிறையச் சேர்ந்து போயிருந்தன.

"இதெல்லாம் ரொம்ப விலை போகும்" என்று ஏதோ பெரிய வணிகன் போல அயர்ன்சைடு கூறினார். பேரம் பேசுவதில் அவர் ஒன்றும் சாமார்த்தியசாலி இல்லை. அந்த யூதனிடம் நட்பு பாராட்ட வேண்டும் என்று அவர் எண்ணினார். உண்மையில் அந்த அறையைச் சுத்தம் செய்ய வேண்டும், அந்தப் பணம் அவருக்குப் பெரிதில்லை. இதுவே அவரது நோக்கம்.

ஆனால் அந்த யூதனோ பேரம் பேசுவதில் மிகுந்த சாமர்த்தியசாலி. அது அவனுக்குக் கைவந்த கலை. மிகவும் குறைந்த விலைக்கு எல்லாப் பொருட்களையும் விலைபேசி முடித்துவிட்டான். பணத்தையும் கொடுத்துவிட்டு, பொருட்களைத் தன் வண்டியில் ஏற்றத் தொடங்கினான். கடைசிச் சுமையையும் தன் வண்டியில் ஏற்றிவிட்டு, அவரிடம் இருந்து விடைபெற அவரது முகத்தை நோக்கினான்.

"இதோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்தப் பணத்தைக் கொடுக்கிறேன்" என்று அந்த யூதனுடைய கையில் கொஞ்சம் பணத்தைத் திணித்தார் அயர்ன்சைடு.

ஒரு மணித்துளி அந்த வணிகள் மலைத்துப் போனான். "இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இதுவரை எனக்கு ஒருவரும் எதையும் கொடுத்ததில்லை" என்று தனக்குள்ளாகச் சொல்லிச் சென்றான் அந்த யூதன்.

*H. A.* அயர்ன்சைடு இரக்கம் நிறைந்தவராக விளங்கினார். அவருடைய செய்கை நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் தயைபாராட்டும் பண்பை வெளிப்படுத்துகிறது அல்லவா?

# 21

# விண்ணவரின் புகழ்பாடும் மாவீரர்கள்



**கர்த்தராகிய இயேசு கிறிஸ்து** உயிர்த்தெழுந்து விண்ணுலகிற்குச் சென்று விட்டார். கொடுங்கோல் பேரரசன் நீரோ ரோம அரசின் அரியணையில் வீற்றிருக்கிறான். கிறிஸ்தவ விசுவாசத்தை ஒடுக்க வேண்டும் என்ற கட்டளை அந்த நாட்களில் நிலவி வந்தது.

ரோம அரசின் படைவீரன் என்றாலே தனிச்சிறப்பு. அதிலும் மாமன்னனின் தனிப்படையில் அங்கம் வகிப்பது மாபெரும் சிறப்பாகக் கருதப்பட்டது. அவர்கள் வாளேந்திப் போர் புரிவதில் வல்லவர்கள். கட்டான உடலமைப்பு, வலிமை வாய்ந்த தோள்கள், முறுக்குவிட்ட தசை. வலிமை மிக்க அந்த மனிதர்கள் சரீரக் கட்டமைப்புக்கு மாதிரிகளாகத் திகழ்ந்தனர்.

பெருமக்கள் கூடி வரும் பேரரங்கை நோக்கி அணிவகுத்துச் செல்லும்போது மன்னனின் புகழ்பாடிச் செல்வார்கள்:

மல்யுத்தம் செய்யும் நாங்கள் மாவீரர்
மன்னனுக்காய் போர்புரியும் மாவீரர்,
என்றென்றும் வாளேந்திப் போர்புரிவோம்
வாழ்ந்தாலும் மடிந்தாலும் உம்மகிமை!
போர்புரிதல் ஒன்றுதானே எங்கள்தொழில்
மன்னவரின் மகிமைதானே எம்விருப்பம்!

அரங்கைச் சென்றவுடன் நீரோ மன்னனுக்காக யுத்தம் செய்வார்கள். மன்னனும் கண்டுகளிப்பான்.

ஜெர்மானியரை எதிர்த்துப் போர்புரிய அந்தப் படைவீரர்கள் வடக்கு நோக்கி அனுப்பப்பட்டனர். அந்தச் சமயத்தில் வேறொரு கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ விசுவாசம் ஒடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்தக் கட்டளை. அதுமட்டுமின்றி ரோமப் படையில் கிறிஸ்தவர்கள் இருப்பார்கள் என்றால் அவர்கள் களையெடுக்கப்பட வேண்டும் என்றும் நீரோ கட்டளை பிறப்பித்திருந்தான். "களையெடுக்கப்படுதல்" என்னும் சொல்லிற்கு "கொலை செய்யப்பட வேண்டும்" என்பதே பொருளாகும்.

அப்பொழுது ஜெர்மனியில் கடுங்குளிர். படைவீரர்கள் யாவரும் அணிவகுக்கும்படியாகக் கட்டளை கொடுக்கப்பட்டது. பேரரசின் தனிப்படையும் வரிசையில் வந்து நிற்க வேண்டும். தளபதி வெஸ்பாசியன் எதிரே நின்று அவர்களுடன் பேசினார். அவருடைய குரல் கணீரென்று தொனித்தது, "கிறிஸ்தவம் என்று புதியதொரு மூடநம்பிக்கை உண்டாயிருக்கிறது. சில போர்வீரர்கள் அந்த நம்பிக்கை உடையவராக இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். நீங்கள் அத்தகைய நம்பிக்கை கொண்டிருக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். நீங்கள் அவ்வளவு புத்தியீனர்கள் அல்லர் என்பதை அறிவேன். அப்படி யாராவது அந்த நம்பிக்கை உடையவராக இருப்பீர்கள் எனில் ஓர் அடி எடுத்து முன் வாருங்கள்." இதுவே அவர் கொடுத்த ஆணை. என்ன ஆச்சரியம். மாமன்னனின் தனிப்படையைச் சேர்ந்த நாற்பது வீரர்கள் ஓர் அடி எடுத்துவைத்து முன்வந்தனர். மரணமே அவர்களுக்கு வழங்கப்படும் தீர்ப்பு என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

மற்ற படைவீரர்கள் அனைவரையும் அவரவர் இருப்பிடங்களுக்குச் செல்லும்படியாகத் தளபதி கட்டளையிட்டார். தனித்திருந்த நாற்பது பேரோடு அவர் உரையாடினார். அவர்களுடைய விசுவாசத்தை விட்டொழிக்கும்படியாகக் கூறினார். "உங்களுடைய குடும்பத்தினரை நினைத்துப் பாருங்கள். உங்களுடைய உடன் படைவீரர்களை நினைத்துப் பாருங்கள். எதை இழக்கப் போகிறீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். கிறிஸ்தவ விசுவாசத்தை மறுத்துரைக்கவில்லையென்றால் என்ன நடக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்." அவருடைய வேண்டுகோள், அச்சுறுத்தல் எதுவும் அவர்

களது உரமேறிய நெஞ்சை அசைக்கவில்லை. உறுதியுடன் நிமிர்ந்து நின்றனர்.

அவருடைய முயற்சிகள் ஒன்றும் பயனளிக்காததைக் கண்ட வெஸ்பாசியன் மீண்டும் அனைத்துப் போர் வீரர்களையும் வரிசையில் நிற்கும்படி ஆணையிட்டார். முன்னர் அவர்கள் கூறியதை மாற்றிக்கூற இன்னொரு சந்தர்ப்பத்தை அளிக்கும்படி, "கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஓர் அடி எடுத்து முன்வாருங்கள்" என்று கூறினார். தனிப்படைப் பிரிவைச் சேர்ந்த நாற்பது வீரர்களும் எவ்விதத் தயக்கமுமின்றி முன் வந்தனர். கொலைப்படையினர் அங்கே ஆயத்தமாக இருந்தனர். அந்த இடத்திலேயே அந்த நாற்பது பேரையும் கொலை செய்யும்படி அவர் கட்டளை கொடுத்திருக்கலாம். ஆனால் வேறொரு திட்டத்தை வைத்திருந்தார் தளபதி.

இரவு வந்துவிட்டது; காரிருள் சூழ்ந்தது. அருகில் இருந்த ஏரியில் நீர் முழுவதும் உறைந்து வெட்டாந்தரை போலக் காணப்பட்டது. அந்த நாற்பது பேரையும் அங்கே அழைத்துச் சென்றனர். அவர்களுடைய உடைகள் அனைத்தையும் கழற்றும்படி தளபதி கட்டளையிட்டார். அந்தக் கடுங்குளிரில், பனிக்கட்டியாய் இருந்த ஏரியின் நடுவில், நடுங்கி அவர்கள் சாவை அடைய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆடையின்றி கடுங்குளிரில் நடுங்கி நின்ற நாற்பது பேரிடமும் வெஸ்பாசியன் கூறினர், "உங்களுக்குப் புத்தி தெளிந்து உங்களுடைய விசுவாசத்தை மறுத்துரைப்பீர்கள் எனில், கரையை நோக்கி வாருங்கள். ஆங்காங்கே நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. அங்கே குளிர்காயலாம். நல்ல கம்பளி ஆடைகள் தரப்படும், உயிர் தப்பலாம்." தளபதி முழக்கமிட்டார்.

ஏரியைச் சுற்றிலும் போடப்பட்டிருந்த காவல் கடுமையாயிருந்தது. வீரர்கள் ஏரியை நோக்கிப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தனர். ஆங்கே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அவர்களுக்குப் பெரும் ஆவல். அவர்களால் ஒன்றையும் காணமுடியவில்லை. ஆனால் அந்த நாற்பது பேரும் பாடும் பாடலைக் கேட்க முடிந்தது:

கிறிஸ்துவின் புகழ்பாடும் நாற்பதுபேர்
விண்ணவரின் புகழ்பாடும் மாவீரர்
என்றென்றும் புகழ்பாடி வாழ்த்திடுவோம்
வாழ்ந்தாலும் மடிந்தாலும் உம்மகிமை!
வாழ்த்துவது ஒன்றுதானே எங்கள்தொழில்
உம்மகிமை ஒன்றுதானே எம்விருப்பம்!



கிழக்கு வெளுக்கத் தொடங்கியது. பரிதாபமான ஓர் உருவம் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. வேதனையால் நடக்க முடியவில்லை. எப்படியாவது நெருப்பின் அருகில் வந்துவிட வேண்டுமென்ற விருப்பம் அந்த மனிதனின் முகத்தில் தெரிந்தது. வீரர்கள் அவனை நோக்கி ஓடிச் சென்றனர். கம்பளிப் போர்வையால் போர்த்தினர். நெருப்பின் அருகில் கொண்டுபோய்க் குளிர்காயச் செய்தனர். அந்த மனிதன் தன் விசுவாசத்தை மறுத்துவிட்டான்.

ஒவ்வொருவராக வந்து விடுவார்கள் என்று நினைத்த காவல் வீரர்களுக்குப் பெருத்த ஏமாற்றம். அங்கிருந்து பாடல் தொனித்தது:


கிறிஸ்துவின் வீரர்கள் முப்பத்தொன்பது
விண்ணவரின் புகழ்பாடும் மாவீரர்
என்றென்றும் புகழ்பாடி வாழ்த்திடுவோம்
வாழ்ந்தாலும் மடிந்தாலும் உம்மகிமை!
வாழ்த்துவது ஒன்றுதானே எங்கள்தொழில்
மாமன்னர் மகிமைதானே எம்விருப்பம்!

தன்னுயிர் விரும்பி, கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தை மறுத்துரைத்த ஒரு மனிதனையும், அந்த வெற்றி வீரர் முப்பத்தொன்பது பேரையும் காண, குறித்த நேரத்திற்கு வந்துவிட்டார் தளபதி வெஸ்பாசியன். அவரும் தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாக இருந்தார். தன்னுடைய படைக்கலன்களைக் களைந்தார். மடிந்து கொண்டிருக்கும் முப்பத்தொன்பது பேரோடு சேர்ந்து தானும் சாக அவர்களை நோக்கி நடந்தார். ஆம், தன்னுடைய கர்த்தரை மறுத்துரைப்பதைவிட மடிவதே மேல் என்று அவர் முடிவு செய்துவிட்டார்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பு அத்தளபதியை வென்று விட்டது.

# 22

# வாக்குறுதியுடன்கூடிய முதலாம் கற்பனை



***வேத ஆசிரியரும்*** நற்செய்திப் பணியாளருமாகிய ரூபன் டோரி என்பார் ஒரு விதவையைக் குறித்த கதையொன்றை அவ்வப்போது கூறுவதுண்டு.

ஜார்ஜியா மாநிலத்தைச் சேர்ந்த அந்த விதவை ஏழ்மையான வாழ்க்கையே நடத்தி வந்தார். ஆடைகளைத் துவைத்துக் கொடுக்கும் வேலை செய்து தன் குடும்பத்தின் தேவைகளைச் சந்தித்த அப்பெண்ணிற்கு ஒரே மகன் இருந்தான். தனது ஏழ்மையான நிலையைக் குறித்து அப்பெண் முறுமுறுக்கவுமில்லை, அதற்காகக் கர்த்தரைக் குறைகூறவுமில்லை. கர்த்தர் தாமே அந்நிலையைத் தனக்குத் தந்தருளியுள்ளார் என்னும் மனநிறைவோடு வாழ்ந்து வந்தார்.

அவருடைய மகன் மிகவும் அறிவுக்கூர்மை உடையவனாய் இருந்தான். அவன் படித்த பள்ளியில் இறுதி ஆண்டில் அவனே முதல் மாணாக்கனாக விளங்கினான். அவனுடைய தாய் கர்த்தருக்கு அடுத்த இடத்தைத் தன் மகனுக்களித்து அவனை மிகவும் நேசித்து வந்தார்.

பள்ளியில் நிறைவு விழா நடைபெற ஏற்பாடு செய்திருந்தனர். அக்கூட்டத்தில் அவனே பிரிவு வாழ்த்துரை வழங்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. அவன் படிப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்ததால் இந்தச் சிறப்பு அவனுக்கு அளிக்கப்பட்டது. மேலும் அன்று அவனுக்குத் தங்கப் பதக்கமும் அளிக்கப்படும்.

நிறைவு விழா நாளும் வந்துவிட்டது. அவனுடைய வாழ்வில் அது ஒரு குறிப்பிடத்தக்க நாள். அந்த விழாவில் தான் பேசுவதும், பதக்கம் வாங்குவதும் தாயாருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று எண்ணினான். ஆனால் அவன் தாயோ விழாவில் கலந்து கொள்வதற்கு இன்னும் ஆயத்தமாகவில்லை. அதைக் கண்டவுடன், "அம்மா, இன்று பள்ளி ஆண்டு விழா. இன்றைக்குப் பட்டம் பெறப்போகிறேன். இன்னும் ஏன் நீங்கள் ஆயத்தமாகவில்லை?" என்று வினவினான்.

அவனுடைய தாயோ சோர்வுற்றவராகக் காணப்பட்டார். "மகனே, நான் வரவில்லை. எனக்கு அணிந்துகொள்வதற்கு நல்ல ஆடைகள் இல்லை. இந்த ஊரில் பெரிய மனிதர்கள் எல்லாரும் அங்கே வருவார்கள். அவர்கள் யாவரும் விலை உயர்ந்த ஆடைகள் அணிந்திருப்பார்கள். உன்னுடைய வயதான அம்மா, சாயம்போன உடைகளை அணிந்திருந்தால் அது உனக்கு அவமானமாயிருக்கும்" என்று கூறினார்.

அவன் தன் தாயை நோக்கிப் பார்த்தான். அப்பார்வை ஒளிபொருந்தியதாய் இருந்தது. மிகுந்த மரியாதையுடன் அவன், "அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள்; உங்களைக் குறித்து நான் வெட்கப்படமாட்டேன். ஒருக்காலும் வெட்கப்பட மாட்டேன். இந்த உலகத்தில் எனக்குரிய எல்லா மேன்மைக்கும் நீங்களே காரணம். உங்களுக்கே நான் கடன்பட்டுள்ளேன். நீங்கள் வரவில்லையென்றால் நானும் அங்கே போக மாட்டேன்" என்று கூறினான். தாயார் ஒப்புக்கொள்ளும்வரை அவன் வற்புறுத்தினான். இருக்கும் ஆடைகளில் நல்லதை எடுத்து அணிந்துகொள்ளச் செய்தான்.

தெருவில் இருவரும் கைகோத்து நடந்து சென்றனர். பள்ளி அரங்கத்திற்குள் நுழைந்தவுடன் முன் வரிசையில் தனது தாயை அமரச் செய்தான். அந்த வரிசையில் அவ்வூர் பிரபலமான மனிதர்கள் பலர் அமர்ந்திருந்தனர். எளிய உடை அணிந்திருந்த அந்தத் தாய், ஆடம்பரமாக உடையணிந்திருந்த மக்களின் நடுவே அமர்ந்திருந்தார்.

அவன் பேச வேண்டிய நேரம் வந்துவிட்டது. பிரிவு வாழ்த்துரை வழங்கிய அவனுடைய உரை சரளமாக இருந்தது. எந்தத் தடுமாற்றமும் இல்லை. வந்திருந்த அனைவரும்

கைதட்டி ஆரவாரித்தனர். பள்ளி முதல்வர் அவனுக்குத் தங்கப் பதக்கத்தை அணிவித்தார். அதைப்பெற்ற அவன், மேடையைவிட்டு இறங்கி வந்தான். தன் தாயாரை நோக்கி நடந்தான். "இந்தத் தங்கப் பதக்கம் உங்களுக்குரியது. இதை நீங்கள் தான் சம்பாதித்தீர்கள்" என்று கூறினான். அப்பொழுது அனைவரும் எழுந்து நின்றனர். இடி முழக்கம்போல கைதட்டி ஆரவாரித்தனர். பலருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்னும் வசனத்திற்கு உயிரூட்டமுள்ள எடுத்துக்காட்டாக அந்த மகன் திகழ்ந்தான் (எபே. 6:3). இந்தக் கதையை முனைவர் டோரி சொன்ன பின்பு கீழ்க்கண்டவாறு கூறி தேவமக்களை உற்சாகப்படுத்துவார்:

> "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் வெட்கமடைய வேண்டாம். நீங்கள் அவருக்கு எல்லாவற்றிலும் கடன்பட்டிருக்கிறீர்கள். எழுந்து நின்று அவரை அறிக்கை செய்யுங்கள். அவருக்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் வெட்கப்பட்டதில்லை. பவுலைக் குறித்து ஒநேசிப்போரு வெட்கப்படவில்லை (2 தீமோ. 1:16). சுவிசேஷத்தைக் குறித்து பவுல் வெட்கப்படவில்லை (ரோமர் 1:16). அவர் யாரை விசுவாசித்தாரோ அவரைப் பற்றி வெட்கப்படவில்லை. கிறிஸ்துவைக் குறித்து நாம் ஒருபோதும் வெட்கப்பட வேண்டியதில்லை".

ஆம்! நான் ஒருபோதும் கிறிஸ்துவைக்குறித்து வெட்கப்படேன்.

# 23

# அன்புகூரும் தேவன்



**கிளாடிஸ் அய்ல்வார்ட்** சரீரத்தில் வளர்ச்சி குன்றியவர். கிறிஸ்தவ ஊழிய வரலாற்றில் "குள்ளமான பெண்மணி" என்றே அவர் அறியப்பட்டிருந்தார். ஆனாலும் அவருடைய சரீரத்தில் உண்டாயிருந்த குறைவு ஆவிக்குரிய செயல் திறமையின் மிகுதியால் ஈடுசெய்யப்பட்டு விளங்கியது. அந்தத் துணிவுமிக்க இறையூழியர் எளிய விசுவாசத்தை உடையவராக இருந்தார். கர்த்தருடைய பணியில் அச்சமின்றிச் செயல்பட உறுதி பூண்டவராக அவர் விளங்கினார். அதில் உண்டான இடர்ப்பாடுகளை எதிர்த்து நிற்க உளவலிமை மிக்கவராகவும், சகிப்புத்தன்மை உடையவராகவும் இருந்தார். அதன் பயனாக அவருடைய ஜெபங்களுக்கு வியத்தகு வகையில் விடைகள் கிடைத்தன; சூழ்நிலைகள் அதிசயிக்கத்தக்க வகையில் ஒன்று கூடின; சீன நாட்டில் வியப்பூட்டும் வகையில் நற்செய்திக்கு மிகுதியான எண்ணிக்கையில் கதவுகள் திறந்தன.

ஜப்பானியர்களுடைய தாக்குதலுக்கு உள்ளான சீன மாணவ அகதிகள் ஒரு காப்பகத்தில் தங்கியிருந்தனர். அவர்களோடு கிளாடிசும் தங்கியிருந்தார். அந்த நாட்டின் வடமேற்கு மாநிலத்திற்காக அவர்கள் யாவரும் ஒன்று கூடி ஜெபித்தனர். அந்தப் பகுதிக்கு அவர்கள் செல்வதற்குப் பல தடைகள் இருந்தன. தன்னையே அந்தப் பகுதிக்கு அனுப்ப, கர்த்தர் முடிவு செய்திருக்கிறார் என்பதை கிளாடிஸ் உணர்ந்தார்.

வடமேற்கு மாநிலத்தை நோக்கி கிளாடிஸ் பயணத்தைத் தொடங்கினார். ஒரு சிற்றூரிலிருந்து அடுத்த சிற்றூரை அடைய வழிகாட்டிகளின் உதவியை நாடினார். சின் சூய் என்னும் ஊரை அவர் சென்றடைந்தவுடன் அதற்கு அப்பால் செல்ல முடியாது என்று அந்த ஊர் மக்கள் அவரிடம் கூறினர். "இதுதான் எல்லை. இதற்கு அப்பால் ஒன்றுமில்லை" என்று அவர்கள் கூறினர். "உலகம் அப்படி முடிவடைந்து விடுகிறதில்லை. நான் அங்கே செல்ல வேண்டும். அதற்காகத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன்" என்று கிளாடிஸ் பதில் உரைத்தார்.

அந்தச் சிற்றூரில் ஹீவாங் என்னும் ஒரு கிறிஸ்தவ மருத்துவர் இருந்தார். கிளாடிஸ் தனது முடிவில் உறுதியாக இருப்பதைக் கண்ட ஹீவாங், அவருடன் வருவதாக ஒப்புக்கொண்டார். எனினும் ஐந்து நாட்கள் மட்டுமே தன்னால் பயணம் செய்யமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். ஐந்து நாட்கள் பத்து நாட்களாக நீண்டுகொண்டு போயிற்று. வழியில் சந்தித்தவர்களுடன் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவர்கள் பேசினார்கள். அதுவரை அந்த மக்கள் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை. பதினோராவது நாள். பாறைகள் நிறைந்த வறண்ட நிலத்தில் ஏறிச் சென்றனர். ஒரு மனிதனையும் அவர்கள் பார்க்கவில்லை. உறங்குவதற்கு இடமில்லை, உண்பதற்கு உணவுமில்லை. ஜெபநேரத்தில் கிளாடிஸ் மன்றாடத் தொடங்கினார்: "அன்புள்ள பிதாவே, எங்களுக்கு இரக்கம் பாராட்டும். எப்படிப்பட்ட அவலநிலையில் நாங்கள் இருக்கிறோம் என்பதை நீர் அறிவீர். எங்களுக்கு உண்ண உணவு தாரீர். இரவிலே உறங்குவதற்கு இடம் தாரீர்." தனக்காகவும் தன்னுடன் வந்த மருத்துவருக்காகவும் மட்டுமே ஜெபித்ததற்காக தன் ஆவியில் கடிந்துகொள்ளப்பட்டதை அவர் உணர்ந்தார்.

அதற்குப் பிறகு மருத்துவர் ஹீவாங் ஜெபித்தார்: "எங்கள் தேவனே, இயேசு கிறிஸ்துவைப் பற்றி யாரிடம் நாங்கள் பேச வேண்டும் என்று நீர் விரும்புகிறீரோ அந்த மனிதரை எங்களிடத்தில் அனுப்புவீராக. இன்றைக்கு உம்மைக் குறித்து நாங்கள் யாரிடமும் இதுவரை சொல்லவில்லை. இந்த இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் எங்களை நீர் அழைத்து வந்திருக்கிறீர். நீர் ஆசிர்வதிக்கச் சித்தம் கொண்டுள்ள மனிதனை நாங்கள் காணச்செய்யும்." இந்த மருத்துவர் கர்த்தருடைய ஊழியத்தைக் குறித்துக் கருத்துடையவராக இருந்தார்.



ஒரு பாடலைப் பாட கிளாடிஸ் எண்ணங்கொண்டார். அவர்கள் கர்த்தரைப் புகழ்ந்து பாடினார்கள். குன்றுகள் நிறைந்த அந்தப் பகுதியில் அவர்களுடைய இன்னிசை காற்றில் மிதந்து சென்றது.

தொலைதூரத்தில் ஒரு மனிதன் நடந்து வருகிறதை ஹீவாங் ஒரு சில மணித்துளிகளில் கண்டார். துள்ளிக் குதித்தவராக அந்த மனிதனைச் சந்திக்க அவர் விரைந்து சென்றார். "கிளாடிஸ் வாருங்கள்" என்று கூவி அழைத்தார். அந்தப் பகுதி மிகவும் கரடுமுரடாக இருந்தது. கொண்டுவந்த பொருட்களை அப்படியே விட்டுச் செல்ல அவருக்கு விருப்பமில்லை. ஆனால் மருத்துவர் விடவில்லை. திரும்ப கிளாடிசின் அருகில் வந்தவர் வற்புறுத்திக் கூப்பிட்டார். அந்தப் பொருட்களைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. அதைத் திருடுவதற்கு அங்கே ஒருவருமில்லை.

இருவரும் விரைந்து சென்றனர். நடந்து வந்த அந்த மனிதனைச் சென்றடைந்து விட்டனர். அந்த மனிதன் திபெத்து நாட்டைச் சேர்ந்த புத்த துறவி. அந்தத் துறவிகள் பெண்களோடு எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் இவரோ கிளாடிசையும் மருத்துவரையும் அவர்களது மடத்தில் வந்து இரவு தங்குமாறு அழைத்தார். கிளாடிசிற்கோ சற்று தயக்கம். இவருடைய தயக்கத்தைக் கண்ட அத்துறவி, "அன்புகூருகிற தேவனைக் குறித்து நீங்கள் எங்களுக்குச் சொல்லுவீர்கள் என்று நாங்கள் நீண்ட காலம் காத்திருந்தோம்" என்று கூறினார். அந்தச் சின்னப் பெண்மணிக்கு ஆச்சரியமாயிருந்தது. அன்புகூருகிற தேவன் என்று ஒரு தேவன் இருக்கிறார் என்பதை இவர்கள் எவ்வாறு அறிவார்கள்? இவர்கள் உலகத்தோடு எவ்விதத் தொடர்பும் இல்லாமல் வாழ்கிறார்களே. ஊழியக்காரர் யாரையேனும் இவர்கள் அறிந்திருப்பார்களோ? வேறு யார் வாயிலாக இவர்கள் தேவனைப் பற்றி அறிந்திருப்பார்கள்? இவ்விதமான சிந்தனையில் மூழ்கிய கிளாடிஸ் அவரது அழைப்பிற்கு இணங்கி மடத்தை நோக்கி நடந்தார்.

அந்த மடத்தில் அனைத்து வசதிகளும் இருந்தன. அமர்வதற்குப் பஞ்சு மெத்தைகளைக் கொடுத்தனர். குளிப்பதற்கு

நீர் தந்தனர். சுவையான உணவு பரிமாறினர். ஓய்வெடுப்பதற்கு அறையும் கொடுத்தனர். சிறிது நேரம் கழித்து, கிளாடிஸ் தங்கியிருந்த அறையின் வாசலுக்கு இரண்டு துறவிகள் வந்தனர். அவர்களோடு வரும்படியாக அழைத்தனர். வேறு இருவர் மருத்துவர் ஹீவாங்கையும் அதே இடத்திற்கு அழைத்து வந்தனர். அரங்கு போன்ற பெரிய அறையில் ஐந்நூறு துறவிகள் பஞ்சு மெத்தை போன்ற திண்டுகளில் அமர்ந்திருந்தனர். இவையாவும் கிளாடிஸ் உள்ளத்தில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. ஆனால் அந்த மருத்துவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவர்கள் கூடியிருந்த நோக்கத்தை அறிந்த மருத்துவர் கிளாடிஸைப் பாடும்படியாகக் கூறினார். கிளாடிஸ் தனது இனிய குரலில் பாடி முடித்தவுடன் மருத்துவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பற்றி விளக்கமாகப் பேசினார்.

மீண்டும் கிளாடிஸ் பாடினார். தொடர்ந்து கிறிஸ்துவின் அன்பைக் குறித்துப் பேசினார். மீண்டும் அவர் பாடினார். அதைத் தொடர்ந்து மருத்துவர் பேசினார். அதன் பிறகு பாடினார்கள். பின்னர் கிளாடிஸ் பேசினார். அதற்கு மேல் கிளாடிஸால் பேச முடியவில்லை. தன்னுடைய அறைக்குச் செல்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். அவருடைய சரீரத்தில் வலிமை குன்றி முற்றிலும் களைப்படைந்துவிட்டார். ஆனாலும் அவருடைய வேலை முடியவில்லை. இரண்டு லாமாக்கள் அவருடைய அறைக்கு வந்தனர். தேவனைப் பற்றிக் கூடுதலாக அறிய வேண்டுமென்று கேட்டனர். அவர்கள் பேசிச் சென்றவுடன் வேறு இருவர் வந்தனர். வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சென்றபின் வேறு இருவர் வந்தனர். இரவு முழுவதும் இவ்வாறு கழிந்தது. அன்புகூருகிற தேவனைக் குறித்து அறிந்துகொள்வதில் அவர்கள் யாவரும் மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருந்தனர்.

ஐந்து நாட்கள் இடைவிடாமல் இந்த நற்செய்தி நற்பணி தொடர்ந்தது. பிறகு தலைமை லாமாவைச் சந்திக்க கிளாடிஸ் அழைக்கப்பட்டார். மான்டரின் என்ற மொழியை கிளாடிஸ் கற்றிருந்தார். அந்த மொழியைத் தலைமை லாமாவும் அறிந்திருந்தார். ஆகவே அவர்கள் இருவரும் தாராளமாக உரையாடினர். வெளிநாட்டுப் பெண்மணி புத்த மடத்திற்குள் அனுமதிக்கப்பட்டதன் காரணத்தை அவரிடம் கிளாடிஸ் வினவினார். அது மட்டுமல்ல மற்ற துறவிகளுடன் அந்தப் பெண் பேசுவதற்கும் அனுமதிக்கப்பட்டார். காரணத்தை விளக்கினார் தலைமை லாமா:

மலைப்பகுதியில் விளைகிற சில மூலிகைகளை ஒவ்வொரு ஆண்டும் லாமாக்கள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று விற்று வருவதுண்டு. ஓர் ஆண்டு அவ்விதமாக விற்கச் சென்றபோது, ஒரு மனிதனைக் கண்டனர். அவன் தன் கரத்தில் சில கைப்பிரதிகளை வைத்துக் கொண்டிருந்தான். "யாருக்கு வேண்டும்? இரட்சிப்பு இலவசம். அதற்கு விலை கொடுக்க வேண்டியதில்லை. இரட்சிப்பை அடைகிறவன் என்றென்றும் வாழ்வான். இதைப் பற்றிக் கூடுதலாக அறிய நற்செய்திக் கூடத்திற்கு வாருங்கள்" என்று அந்த மனிதன் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே இருந்தான். அந்தத் துறவிகள் ஒரு கைப்பிரதியை வாங்கிக்கொண்டு வந்து, மடத்தின் சுவரில் அதை மாட்டி வைத்தனர். யோவான் 3:16 -ஆம் வசனம் அதில் எழுதியிருந்தது: "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". அன்புகூருகிற தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அந்த வசனம் அவர்களுக்குத் தொடர்ந்து நினைவுபடுத்திக் கொண்டிருந்தது.

ஐந்து ஆண்டுகள் அந்த மூலிகைகளை எடுத்துக்கொண்டு துறவிகள் சந்தைக்குச் சென்றனர். அன்புகூருகிற தேவன் எங்கே வசிக்கிறார் என்று ஒவ்வொரு முறையும் அவர்கள் கேட்டனர். லென் சௌ என்னுமிடத்தில் ஒரு மனிதர், அவர்களை சீன உள்நாட்டு ஊழியங்கள் என்னும் நிறுவனத்திற்குச் சென்று பார்க்கும்படியாக வழிநடத்தினார். அங்கே ஓர் இறையூழியர் இரட்சிப்பின் வழியை விளக்கிக் கூறினார். நற்செய்தி நூல்களையும் அவர்களுக்குக் கொடுத்தார். அவற்றை வாங்கிச் சென்ற துறவிகள் நற்செய்தி நூல்களைப் படித்தனர். மாற். 16:15 -ஆம் வசனம் அவர்களுடைய கவனத்தை ஈர்த்தது. "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." நற்செய்தியை ஏந்தியவர்களாக யாராவது தங்களுடைய இருப்பிடத்திற்கு வருவார்கள்

என்று அவர்கள் முடிவு செய்தனர். அவ்வாறு தேவனால் அனுப்பப்படும் தூதர்கள் வரும்போது அவர்களை வரவேற்க வேண்டும் என்றும் அந்தத் துறவிகள் முடிவு செய்து இருந்தனர்.

மேலும் மூன்று ஆண்டுகள் அவர்கள் காத்திருந்தனர். இரண்டு துறவிகள் மலையில் வேலை செய்துகொண்டிருந்த போது யாரோ ஒருவர் பாடும் குரலைக் கேட்டனர். "தேவனை அறிந்தவர்கள் மட்டுமே பாடுவார்கள்" என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டே இருவரில் ஒருவர் தேவனால் அனுப்பப்பட்டவர்களைச் சந்திக்க மலையிலிருந்து கீழே இறங்கி வந்தார். மற்றொருவர் மடத்திற்கு திரும்பிச் சென்று நீண்ட காலம் காத்திருந்து காணப்போகிற விருந்தினர்களை வரவேற்க மற்ற துறவிகளை ஆயத்தப்படுத்தினார்.

கிறிஸ்தவர்கள் இருவரும் அன்போடு வரவேற்கப்பட்டதின் காரணத்தை கிளாடிஸ் அறிந்து கொண்டார். அவர்களது இருதய தாகத்தையும் அவர் உணர்ந்துகொண்டார்.

இந்த புத்த துறவிகளில் யாராவது இரட்சிக்கப்பட்டார்களா? அங்கிருந்து கிளாடிஸ் திரும்பிவிட்டார். விளைவைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அது தேவனுடைய தீர்மானமாகும். மருத்துவரோடு தான் அங்கே சென்றதும், அங்கே தொடர்ந்து நற்செய்தி பகிர்ந்துகொண்டதும் கர்த்தருடைய வழிநடத்துதலே என்பதை அவர் தெளிவாக அறிந்திருந்தார். அந்தக் கடினமான பயணத்தையும் சூழ்நிலைகளையும் தேவன் வீணாக்க மாட்டார் என்றே அவர் கருதினார்.

அந்தக் குள்ளமான பெண்மணி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பல விதங்களில், பிரதிபலித்துக் காட்டினார். அவர் கொண்டிருந்த விசுவாசம் முழுமையானது, கர்த்தருடைய ஏவுதல்களுக்கு அவர் கீழ்ப்படிந்தார். மற்றவர்களுக்கு முன்பாக அவர் கிறிஸ்துவை உண்மையோடு அறிக்கை செய்தார். அவருடைய வாழ்க்கை அனுபவங்களில் பின்னிக் கிடந்தது. அவருடைய ஊழியம் மின்னிப் பிரகாசித்தது. மற்றவர்களோடு அவர் ஈடுபட்டபோது தேவனுக்கென்று சில பயனுள்ள செயல்கள் நடந்தேறின!

24

# நம்புதற்கரிய கிருபை



**அமெரிக்க ஐக்கிய** நாடுகளின் படையில் எர்னி ஒரு அதிகாரியாகப் பணியாற்றினார். அவருடைய மனைவி எல்சி குடும்பத் தலைவியாகச் செயல்படுவதில் மனநிறைவு உடையவராய் இருந்தார். வேறு எங்கும் அவர் வேலைக்குச் செல்லவில்லை. வீட்டிலே இருந்து இரண்டு பிள்ளைகளையும் வளர்ப்பது அவருடைய பொறுப்பாக இருந்தது. அதுவே தனக்குக் கர்த்தர் கொடுத்த வேலை என்று அவர் கருதினார். கணவன் மனைவி இருவருக்கும் இடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் அவர்களுடைய குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியுடையதாகவே விளங்கிற்று.

எர்னி ஜப்பான் நாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டார். அந்நாட்களில் இவ்விதமாக வெளிநாட்டிற்கு மாற்றம் பெறுபவர்கள், குடும்பத்தினரைத் தங்களோடு அழைத்துச் செல்ல முடியாது. அதற்கு அரசாங்கம் அனுமதி தருவதில்லை. ஆனாலும் இந்தக் குடும்பத்தினர் மடல் வாயிலாக மிக நெருக்கமாக இருந்தனர். ஒவ்வொரு வாரமும் தந்தையிடமிருந்து மடல் வரும். அந்த நாள் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான நாளாகும். தாயின் அருகில் பிள்ளைகள் இருவரும் அமர்ந்து கொள்வார்கள். மடலை அவர் வாசிப்பார். அப்பொழுது தந்தை அருகில் இருப்பது போல அவர்களுக்குத் தோன்றும். அந்த மடலில் காணப்பட்ட செய்திகளைக் குறித்தே அந்த நாள் முழுவதும் அவர்கள் பேசுவார்கள்.

ஒரு வாரம் தந்தையிடமிருந்து மடல் ஏதும் வரவில்லை. அவர்கள் அந்த வாரத்தை ஏக்கத்துடன் கழித்தனர். எல்சிக்குப் பலவித கற்பனை. ஏதாவது நோயில் எர்னி பாதிக்கப்பட்டுவிட்டாரா? அல்லது ஏதாவது விபத்தில் சிக்கிக்கொண்டாரா? ஒருவேளை அரசாங்கம் மிகவும் ஆபத்தான இரகசிய வேலையில் ஈடுபடுத்தியிருக்கக்கூடும். இரண்டு வாரங்கள் கழிந்தன. மடல் ஏதும் வரவில்லை. ஏதாவது நோயோ, விபத்தோ ஏற்பட்டிருந்தால் அரசாங்கம் நிச்சயமாகத் தெரியப்படுத்தியிருக்கும். மூன்று வாரங்கள் கழிந்தன. நான்காவது வாரமும் ஆயிற்று. இறுதியில் ஒரு கடிதம் வந்தது. எல்சிக்குப் பேரிடி விழுந்தது போலத் தோன்றியது. எல்சியின் அச்சம் உண்மையாகிவிட்டது. அவரால் நம்ப முடியவில்லை. இப்படி நடப்பதற்கு நான் என்ன தவறு இழைத்தேன் என்று எல்சி நினைத்தார். அவருடைய வாழ்க்கையில் பேரிழப்பு ஏற்பட்டுவிட்டது. தன் பிள்ளைகளிடம் உண்மையைக் கூறுவதற்கும் தைரியமற்று எல்சி நிலைகுலைந்து போனார்.

"அம்மா, என்ன நடந்தது? அப்பாவிற்கு என்னவாயிற்று? கடிதத்தில் அவர் என்ன எழுதியிருந்தார்?" மூத்த மகன் வினவினான்.

அவர்களுடைய தந்தை இப்பொழுது வேறொரு பெண்ணை விரும்புகிறார் என்று எப்படிச் சொல்லுவது? அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியுமா? அவர்களுடைய முகம் திகிலடைந்திருந்தது. எல்லாவற்றையும் அவர்களால் புரிந்துகொள்ளவும் முடியாது. தந்தை இனிமேல் தங்களிடம் வரப்போவது இல்லை என்பதை மட்டும் அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. "அம்மா, உங்களிடம் ஒன்றை நான் கேட்கவா? நம்மீது அப்பா இனிமேல் அன்புகூரப் போவதில்லை. நாம் அவரிடத்தில் அன்பு பாராட்டக்கூடாது என்பதுதான் அதன் பொருளா? நாம் ஏன் தொடர்ந்து அவரை நேசிக்கக் கூடாது?" என்று கேட்டான் இளைய மகன்.

சிறுவனின் கேள்வி எல்சியை மின்னல்போலத் தாக்கியது. "குழந்தைகள் பாலகர் வாயினால் தேவரீர் பெலன் உண்டு பண்ணினீர்" என்னும் வசனம் அவரது நினைவிற்கு வந்தது (சங். 8:2). அவரது நிலை புறக்கணிக்கப்பட்டதாகவும் வருத்தத்திற்குரியதாகவும் காட்சியளித்தது. அந்தக் கேள்வி எல்சியின் மனதோடு போராடியது. "நாம் அவரை நேசிக்க முடியும்" என்று பதிலுரைத்தார் எல்சி. அவருடைய தொண்டையில் ஏதோ ஒரு கட்டி அடைத்துக்கொண்டது போலத் தோன்றியது. "அப்படியா, நல்லது. அவரைத் தொடர்ந்து கடிதம் எழுதும்படியாக நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். நாம் அவரிடம் அன்புகூருகிறோம் என்பதையும் தெரியப்படுத்துங்கள்" என்றான் அச்சிறுவன். ஒருவேளை அவனுடைய தந்தை தொடர்ந்து மடல் எழுதக்கூடும்.



அதுபோல எல்சியும் மடல் எழுதினார். கணவனிடத்திலிருந்து பதிலும் வந்தது. அந்த மனிதனின் உண்மையற்ற தன்மை புலப்பட்டது. பதினைந்தே வயது நிரம்பிய வேலைக்காரச் சிறுமியைத் தான் விரும்பியதாகவும், அவளைத் திருமணம் செய்து பல பிள்ளைகளுக்குத் தகப்பனாக இருப்பதாகவும் அவர் எழுதியிருந்தார். நடந்த யாவற்றையும் எல்சியால் நம்ப முடியவில்லை. அவர் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. தனக்கு எதிராக மிகப்பெரிய அட்டூழியம் நடந்திருக்கிறது என்பதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

நீண்ட காலம் கழித்து எர்னியிடமிருந்து ஒரு மடல் வந்தது: "அன்புள்ள எல்சி, இவ்விதமாக நான் எழுதுவதற்கு வருந்துகிறேன். இப்பொழுது எனக்குப் புற்றுநோய் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இன்னும் அதிக நாட்கள் நான் வாழப் போவதில்லை. எனக்கு ஓய்வூதியம் கிடைக்காது. வசதியற்ற வாழ்க்கைதான் வாழ்கிறோம். நான் இறந்த பிறகு என்னுடைய குடும்பத்திற்கு உன்னால் பணம் அனுப்பி உதவி செய்ய முடியுமா?"

கடிதத்தைப் படித்த எல்சி தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டார், "எல்லாவற்றையும் அனுபவித்து விட்டேன்." தன் கணவனின் கசப்பு நிறைந்த தன்மையை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. தனக்குச் செய்த தீமையை நினைத்து அவர் எவ்வித வருத்தமும் அடையவில்லை. தவறுக்காக மன்னிப்பும் கேட்கவில்லை. ஆனால் உதவி மட்டும் கேட்கிறாரே.

ஆனால் தன்னுடைய மகன் கூறிய சொற்களை அவரால் மறக்க முடியவில்லை. "நம்மீது அப்பா இனிமேல் அன்புகூரப் போவதில்லை. நாம் அவரிடத்தில் அன்புபாராட்டக்

கூடாது என்பதுதான் அதன் பொருளா? நாம் ஏன் அவரிடத்தில் அன்புபாராட்டக் கூடாது?" இந்தக் கேள்வி மீண்டும் மீண்டும் எல்சியின் காதில் ஒலித்துக்கெண்டிருந்தது. தன்னால் அவர்களுக்குப் பணம் அனுப்ப முடியாது என்பதை விளக்கி எழுதிய எல்சி வேறொரு வகையில் தன்னால் உதவி செய்ய முடியும் என்று தெரியப்படுத்தினார். "நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். நீங்கள் இறந்த பிறகு உங்கள் குடும்பத்தினர் அமெரிக்காவிற்கு வர இப்பொழுதே ஏற்பாடு செய்துவிடுங்கள். இந்த வீட்டில் அவர்கள் தங்கிக் கொள்ளலாம். எவ்வாறு தங்களுடைய தேவைகளை அவர்கள் சந்திப்பது என்பதை அவர்களுக்கு நான் கற்றுத் தருவேன்."

அந்த ஆலோசனையின்படியே எல்லாம் நடந்தது. தன்னுடைய செய்கையை எல்சி பின்னர் இவ்வாறு விளக்கினார்: "இரண்டு வகைகளில் நான் செயல்பட்டிருக்கலாம். ஒன்று, என்னுடைய வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து, நான் அடைந்த தீமைகளை நினைத்து அந்த மனிதனைச் சபித்திருக்கலாம். மற்றொன்று, இந்த இருண்ட உலகில் கர்த்தருடைய ஒளியைப் பிரகாசித்துக் காட்ட தேவன் அருளிய சந்தர்ப்பத்தை எண்ணி அவருக்கு நன்றி செலுத்தலாம். இரண்டாவதையே நான் தெரிந்துகொண்டேன்."

இருண்ட பாதையில் கர்த்தருடைய ஒளியை எல்சி பிரகாசிக்கச் செய்தார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எல்சியின் பாதுகாப்பிற்குள் பிரவேசித்த அந்த எளிய குடும்பம் நற்செய்தியையும் அவர் மூலமாகக் கேட்டது. அவர்களும் கர்த்தருக்கு ஒளியாக மாற்றம் பெற்றனர்.

"நன்மைக்குப் பதிலாக தீமைசெய்தல் பிசாசின் தன்மை. நன்மைக்குப் பதிலாக நன்மை செய்தல் மனிதத் தன்மை. தீமைக்குப் பதிலாக நன்மை செய்தல் தெய்வீகத் தன்மை" என்று ஆர்ச் பிஷப் டெம்பிள் கூறியது சரியே. புதுமைப் பெண் எல்சி தனது வாழ்க்கையில் தெய்வீக சுபாவத்தை வெளிப்படுத்திக் காட்டினார்.

# 25

## ஏழைகளின் நண்பன்



**செல்வம்மிக்க இல்லத்தில்** வளர்ந்தவர் திருவாளர் ஜான் நெல்சன் டார்பி. உயர்குடி மக்கள் எவ்வாறான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க வேண்டும், செல்வந்தர்களோடு எவ்வாறு பழக வேண்டும் என்பதை அந்தக் குடும்பத்தினர் அறிந்திருந்தனர். உயர்குடி மக்களோடு ஐக்கியம் கொள்வதும், எல்லா வசதிகளும் உடைய இடங்களில் தங்குவதும் ஜான் நெல்சன் டார்பியின் சுபாவமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவரோ முகஸ்துதி செய்பவராகவோ, செல்வந்தர்களையும் புகழ்பெற்றவர்களையும் சார்ந்து வசதிகளைப் பெருக்கிக்கொள்பவராகவோ வாழவில்லை.

ஏழை எளியோரிடம் அவர் அன்பு பாராட்டினார். அதை மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படி சம்பிரதாயமற்ற முறையிலும் நடந்துகொள்ளவும் அவர் தயங்கியதில்லை.

ஒருமுறை மாநகர் ஒன்றில் அவர் வேதச் சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பலநாட்கள் தொடர்ந்து அவர் அங்கே செய்திகள் அளிக்க வேண்டும். இரயிலில் அவர் வருகிறார் என்பதை அறிந்திருந்த பலர் அவரை வரவேற்க இரயில் நிலையத்திற்கு வந்து விட்டனர். பெருங்கூட்டமாக வந்திருந்த கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் சில செல்வச் சீமாட்டிகளும் இருந்தனர். இந்தப் புகழ்மிக்க பேச்சாளரைத் தங்களுடைய வீட்டிற்கு விருந்தினராக அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று அவர்கள்

எண்ணங்கொண்டிருந்தனர். அவரை விருந்தினராகப் பெறுவது எத்தனை பெருமை? அவர்களில் யாராவது ஒருவருடைய செல்வச் செழிப்புமிக்க மாளிகைக்கு அவர் சென்றிருப்பார் எனில் சிறப்பான இருப்பிடம் கிடைத்திருக்கும், சுவைமிக்க உணவும் கிடைத்திருக்கும். புகழ்பெற்ற பிரசங்கியார் தங்களுடைய இல்லத்தில் விருந்தினராகத் தங்கினார் என்ற பெருமையை அவர்கள் பெற்றிருப்பார்கள். அதைக் குறித்து அவர்கள் தங்களுடைய உற்றார் உறவினர் நண்பர் ஆகியோரிடம் சொல்லி மகிழ்ந்திருப்பார்கள்.

இரயிலில் இருந்து இறங்கிய டார்பி அந்தப் பெருங்கூட்டத்தைச் சற்று நோட்டமிட்டார். அவருக்கு நிலைமை புரிந்துவிட்டது. அங்கே தலைவர்களாகத் தோற்றமளித்த சிலரைப் பார்த்து, “இங்கே வருகிற பிரசங்கிகளைப் பொதுவாக யார் கவனித்துக்கொள்வார்?” என்ற அவர் வினவினார். தொலைவில் நின்று கொண்டிருந்த ஒரு மனிதரை அவர்கள் சுட்டிக் காட்டினர். சாதாரணமாக உடையணிந்திருந்த அவர் எளிய தோற்றமுடையவராகத் தோன்றினார். டார்பி அவரை நோக்கி சென்றார். “உங்களுடைய வீட்டில் நான் தங்கலாமா?” என்று அவரை வினவினார். கவர்ச்சியற்ற அந்த சகோதரன் பெரு மகிழ்ச்சி அடைந்தார். டார்பியின் கையிலிருந்த பெட்டியை உற்சாகத்துடன வாங்கிக் கொண்டார். J. N. டார்பியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஒருவர் இந்நிகழ்ச்சியைக் குறித்து, “அறிமுகமற்ற பிரசங்கிகளை உபசரித்த மனிதர் இந்தப் பெரியவரை உபசரிக்கும் வாய்ப்பையும் பெற்றார்” என்று எழுதினார்.

ஏழை எளியோரிடம் அன்பு பாராட்டிய டார்பி அதைக் குறித்து விவரித்துள்ளார்:

> கிறிஸ்து எளியோரிடம் அன்பு பாராட்டினார்; எப்பொழுது நான் மனமாற்றம் பெற்றேனோ அப்பொழுது இருந்து நானும் எளியோரிடம் அன்பு பாராட்டுகிறேன். செல்வச் சூழ்நிலையை எதிர்ப்பார்க்கிறவர்கள் அதை அடைந்துகொள்ளட்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் அகப்பட்டுக் கொள்வேனென்றால், இந்த லண்டன் மாநகரில் என்னுடைய பாதை மாறிப்போய்விடுகிறது, என்னுடைய இருதயத்தில் நோயுற்றவனாகவே திரும்புகிறேன். நான் ஏழைகளிடமே செல்கிறேன். செல்வந்தர்களிடம் என்ன பொல்லாங்கான சுபாவம் இருக்கிறதோ அதே சுபாவம்தான் அவர்களிடமும் இருக்கிறது. ஆனால் ஒரு வேற்றுமையைக் காண்கிறேன்: செல்வந்தர்கள் தங்களுடைய வசதிகளை விட்டுக் கொடுப்பதில்லை. தங்களை எவ்விதத்திலும் ஒப்புவிக்காமல் கிறிஸ்துவை எவ்வளவாகப் பெற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவாக நிதானித்து, அளந்து பார்த்துப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் ஏழைகளோ தங்களுடைய வருத்தங்களில் எவ்வளவாக ஆறுதல் அடைய முடியுமோ அவ்வளவாகக் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்கிறார்கள்.



தம்முடைய எழுபது சீடர்களுக்குப் பயிற்சி அளிக்கும் போது, இயேசு கிறிஸ்து விருந்தோம்பலைப் பற்றிப் பேசியிருப்பது நமது கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது:

> ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது, இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து.... வீட்டுக்கு வீடு போகாதிருங்கள் (லூக். 10:5–7).

சமாதானத்தின் செய்தியை எவரொருவர் திறந்த உள்ளத்துடன் கேட்கிறாரோ அவர் தருகிற விருந்தோம்பலை அந்தச் சீடர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இங்கே கர்த்தர் கற்பித்ததைக் காண்கிறோம். அவர்கள் வசதிகள் நிறைந்த தங்குமிடமும், சுவையான உணவும் கிடைக்கும் என்று கருதி ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு செல்லக்கூடாது என்றும் அவர் கற்பித்தார்.

இதே விதமான சூழ்நிலையை டார்பி எதிர்கொள்ளவில்லை. அவர்களுக்கு என்ன தரப்படுகிறதோ அதை அந்தச் சீடர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் கண்ட வேதப் பகுதியில் காண்கிறோம். ஆனால் திருவாளர் டார்பி ஏழைகளோடு தங்குவதையே விரும்பினார். அதை ஒளிவு மறைவு இன்றியும் கூறினார். கொள்கையளவில் இரண்டும் ஒன்றாயிருக்கின்றன. செல்வச் செழிப்புள்ள வீடுகளை ஒருவர் நாடி, தேடி அலையக்கூடாது. கொடுக்கப்பட்ட கட்டளையை உற்று நோக்குங்கள். “அந்த வீட்டிலேதானே தங்கியிருங்கள்... வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்.”

# 26

# அலங்கார ஆலயத்தில் அழகான கால்கள்



**அனுதின அப்பம்** என்னும் நூல்வரிசையில் வெளிவந்த உண்மைக் கதையைக் கீழே தருகிறோம். டென்னிஸ் டி. ஹரான் என்பார் எழுதியது.

அன்று கர்த்தருடைய நாள். அந்தப் பெரிய நகரத்தில் அது செல்வச் செழிப்புள்ள மக்கள் வாழும் பகுதி. அந்தப் பகுதியில் இருந்த ஆலயம் கண்ணைக் கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருந்தது. காலை 9.00 மணிக்கு ஆராதனை தொடங்கி விடும். மக்கள் சொகுசான வாகனங்களில் வந்து இறங்கினார்கள். வந்தவர்கள் யாவரும் அலங்காரமாக உடையணிந்திருந்தனர். விலையுயர்ந்த மேலங்கிகள், பளபளக்கும் காலணிகள். அவரவர் தத்தம் இடத்தில் அமர்ந்து தங்களுடைய மேன்மையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது ஓர் இளைஞன், ஜீன்சும், டிசர்ட்டும் அணிந்தவனாக அவ்வாலயத்தை நோக்கி வந்தான். அருகில் உள்ள கல்லூரியில் படிக்கும் அந்த மாணவன் வெறுங்காலுடன் நடந்து வந்தான். எளிய தோற்றம். அங்குள்ள மக்களுடைய தோற்றத்திற்கும் அவனுடைய தோற்றத்திற்கும் எவ்விதப் பொருத்தமும் இல்லை. அவனைக் கண்ட ஆலய உறுப்பினர்கள் அசைந்து நெளிந்தனர். அவர்களுக்கு இருக்கையில் இருப்புக்கொள்ளவில்லை. வெறுங்காலுடன் ஆலயத்திற்கு வரக்கூடாது என்பது இவனுக்குத் தெரியாதா? ஆண்கள் உடை அணிந்து, மேலங்கி தரித்து வரவேண்டும் என்பதை இவன் அறியானோ? இவ்வாறு அவர்களது எண்ணம் ஓடியது.

ஆலயத்தின் இருக்கைகள் அனைத்திலும் மக்கள் அமர்ந்திருந்தனர். ஆகவே உள்ளே நுழைந்த இளைஞன் முன் பகுதிக்கு நடந்து வந்து, சுற்றிலும் பார்த்தான். ஒரு இருக்கையும் காலியாக இல்லை. முன்னே வந்தவன் மேடைக்கு முன்னர் தரையில் அமர்ந்துவிட்டான். இதுபோல ஒருவரும் இதுவரை நடந்துகொண்டதில்லை. அந்த அலங்கார ஆலயத்தின் மரபு மீறப்பட்டுவிட்டது. ஆலயப் பொறுப்பாளர்களுக்குச் சங்கடமான நிலையை இது உண்டாக்கிவிட்டது.

அந்த ஆலயத்திற்கு ஒரு வயதானவரும் வந்திருந்தார். அவருடைய எலும்புகள் யாவும் பலமிழந்துபோய் விட்டன. தடியூன்றியே அவரால் நடக்க இயலும். இவ்வாலிபனைக் கண்ட அவர் தனது இருக்கையைவிட்டு எழுந்தார். தனது தடியை எடுத்துக்கொண்டு மெதுவாக முன்னோக்கி நடந்தார். என்ன நடக்கப்போகிறது என்று எல்லாரும் வியப்போடு பார்த்தனர். தடியைக் கீழே போட்டார். கால்களை மடக்கி அந்த இளைஞனின் அருகில் அமர்ந்தார். அவர் உட்காரும்போது அவருடைய உடலில் ஏற்பட்ட வேதனை அவரது முகத்தில் பிரதிபலித்தது. அந்த இளைஞன் தனியே விடப்பட்டவன் என்றோ, பிறரால் வெறுக்கப்பட்டவன் என்றோ நினைவு கொள்ளலாகாது என்று கருதிய முதியவர், அங்கே தன்னைத் தாழ்த்தினார். அந்த ஆலயத்தில் இரண்டாவது முறையாக மரபு மீறப்பட்டுவிட்டது!

மேலே சொல்லப்பட்ட சம்பவம், இதைப்போன்று நடந்த வேறொரு நிகழ்ச்சியை எனக்கு நினைவுபடுத்துகிறது. நான் வசிக்கிற பகுதியில் உள்ள ஒரு சபைக்கூடத்தில் அந்நிகழ்ச்சி நடந்தது. அந்நாட்களில் ஹிப்பிகள் அதிகமாக நடமாடுவார்கள். புதிதாக இரட்சிக்கப்பட்ட ஒருவர் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்க வந்தார். அவர் காலணி அணியாமல் வெறுங்காலுடன் வந்துவிட்டார். பலர் அதைப்பொருட்படுத்தவில்லை. ஆனால் ஒரு முதியவர் அதைக் கண்டார். அந்த மனிதன் எவ்விதக் கிலேசமும் அடையாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தன்னுடைய உள்ளத்தில் நினைத்தார். பிரசங்கம் முடிவடைந்தது. முதியவர் அந்த

இளைஞன் அருகில் சென்றார். அவனுடைய கழுத்தைத் தன் கரம்கொண்டு அணைத்துக்கொண்டார். “நீங்கள் இதைக் குறித்துப் பொருட்படுத்த வேண்டியதில்லை. உங்களுடைய கால்கள் அழகானவை” என்று அவர் அவனிடம் கூறினார். “ஆம், அவை உண்மையானவை” என்று அவன் பதிலுரைத்தான்.

எலும்புகள் வலுவிழந்த அந்த முதியவரையும், நயவுள்ள மூப்பரையும் வாழ்த்தி வணங்குகிறோம். வெளியரங்கமான தோற்றத்தைக் காணாமல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நேசிக்கிற இருதயங்களைக் கண்டறிகிற விசுவாசிகள் அனைவரையும் வாழ்த்துகிறோம். குறை கூறுதல் மனிதர்களைத் துரத்திவிடும். அன்போ அவர்கள் வளர்ச்சியடைய உதவி செய்யும். “என்னிடத்தில் இவர்கள் வருகிறதற்கு இடங் கொடுங்கள்” என்றே கிறிஸ்துவின் சாயலை அணிந்த ஆவி கூறும்.

# 27

## எரிந்த விமானத்தில் எரியாத உள்ளங்கள்



**பெரு நாட்டின் பசுமை நிறப்** புல்வெளிச் சரிவுகள் தேவனின் அற்புதப் படைப்பிற்கு அரியதொரு எடுத்துக் காட்டாகும். அக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டுகளிக்கும் மனிதன், தேவனின் படைப்பை எண்ணி அவரைப் போற்றிப் புகழாமல் இருக்க மாட்டான்.

அந்த அடர்ந்த புல்வெளிக்கு மேலாக வானத்தில் ஒரு சிறிய செஸ்னா விமானம் பறந்து கொண்டிருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பௌவர்ஸ் குடும்பத்தினர் அதில் பயணம் செய்து கொண்டிருந்தனர். ஜிம் பௌவர்ஸ் தனது குடும்பத்தோடு பெரு நாட்டில் கர்த்தருடைய பணியை ஆற்றிக்கொண்டிருந்தார். கொலம்பியா நாட்டைச் சேர்ந்த ஏழுமாதக் குழந்தை ஒன்றைத் தத்தெடுத்து, அக்குழந்தை பெருவில் வசிப்பதற்காக விசா எடுப்பதற்காகவே அவர்கள் கொலம்பியா சென்றனர். சென்ற வேலை முடிந்தவுடன் தங்கள் இருப்பிடத்திற்கு திரும்பி வந்து கொண்டிருந்தனர். விமானத்தை மற்றொரு இறையூழியரும் நண்பருமான கேவின் டொனால்ட்சன் ஓட்டினார். விமானியின் பக்கத்து இருக்கையில் ஜிம் பௌவர்ஸ் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின் இருக்கையில் ஏழு வயது நிரம்பிய மகன் கோரி பௌவர்ஸ் அமர்ந்து தேவனுடைய படைப்பின் அழகைக் கண்டு களித்துக்கொண்டிருந்தான். விமானிக்குப் பின் இருக்கையில் ரோனி பௌவர்ஸ் மடியில் சேரிட்டியைக் கிடத்திய வண்ணம் அமர்ந்திருந்தார்.

அவர்களது இனிதான பயணம் சடுதியில் ஆழ்ந்த துக்கத்திற்கு உரியதாக மாறிவிட்டது. அந்த நாட்களில் கொலம்பியாவிலிருந்து போதை மருந்தைப் பெருமளவில் அமெரிக்காவிற்குப் பெரு நாட்டின் வழியாகக் கடத்தல்காரர்கள் கடத்தி வந்தனர். அதைத் தடைசெய்வதற்காக அமெரிக்க உளவு விமானிகளும் பெருநாட்டு போர் விமானிகளும் இணைந்து அந்தப் பகுதியைக் கண்காணித்து வந்தனர்.

செஸ்னா விமானத்தைக் கண்ட அமெரிக்க உளவு விமானத்தில் இருந்த அதிகாரிகள், அதனை போதை மருந்து கடத்தும் விமானம் என்று தவறாகக் கருதிவிட்டனர். உடனே பெரு நாட்டு விமானிக்கு அதைக் குறித்து எச்சரிப்பு செய்தனர். செஸ்னா விமானத்தைப் பெரு நாட்டு போர்விமானம் பின் தொடர்ந்தது. அந்தச் சிறிய விமானத்தில் பயணம் செய்கிறவர்கள் கடத்தல்காரர்கள்தான் என்று உறுதிசெய்த பிறகே அதைச் சுடவேண்டும் என்று அமெரிக்க உளவு விமான அதிகாரிகள் கூறிக்கொண்டிருந்தனர். ஆனால் அதற்குள் எல்லாம் முடிவடைந்துவிட்டது. போர்விமானத்திலிருந்து குண்டுகள் சரமாரியாக அந்தச் சிறிய விமானத்தை நோக்கிப் பாய்ந்தன.

ஒரு குண்டு ரோனியின் முதுகில் பாய்ந்தது. இன்னொன்று கைக்குழந்தை சேரிட்டியின் தலையில் பாய்ந்தது. உடனடியாக இருவரும் இறந்துபோயினர். இன்னொரு குண்டு விமானியின் வலது காலைப்பிளந்து சென்றது. இன்னொன்று எரிபொருள் பெட்டகத்தைத் துளைத்தது. உடனே விமானம் தீப்பற்றிக் கொண்டது.

ஜிம் தீயணைப்பு இயந்திரத்தை இயக்கத் தொடங்கினார். எரிந்து கொண்டிருந்த விமானத்தை கேவின் கீழ் நோக்கி இறக்கினார். அந்த மிதவை விமானம் அமேசான் ஆற்றின் ஒரு துணை ஆற்றில் மெதுவாக இறங்கியது. அதை அற்புதம் என்றுதான் சொல்லவேண்டும். நீரில் இறங்கிய விமானத்தைக் குண்டுகள் தொடர்ந்து தாக்கிக்கொண்டிருந்தன.

விமானம் எரிந்துகொண்டிருந்தது. ஆனாலும் இரண்டு சடலங்களையும் ஜிம் விமானத்திலிருந்து வெளியே கொண்டுவந்துவிட்டார். எரிகிற நெருப்பின் அனலிலிருந்து வெளியே வந்தவர் நீரின் குளிர்ச்சியை உணர்ந்தார்.



அதே நேரத்தில் கேவின் கோரியைத் தோளில் சுமந்து கொண்டு எரிகிற விமானத்திலிருந்து நீந்திய வண்ணம் வெளியே வந்தார். தனது மனைவி, குழந்தை ஆகியோரின் உடல்களைப் பற்றி இழுத்த வண்ணம் ஜிம் சற்றுத் தொலைவு நீந்தினார். இறந்துபோன தனது தாயையும் தங்கையையும் கோரி பார்க்காதபடி அவர்களது முகத்தை ஜிம் மறைத்துக் கொண்டார்.

விமானம் மூழ்கிவிட்டது. தீயும் அணைந்துவிட்டது. கேவினும் ஜிம்மும் அதை நோக்கி நீந்தி ஒரு மிதவையைப் பிடித்துக்கொண்டனர். அவர்களுக்கு உதவுவதற்காக அருகில் இருந்த ஊர்மக்கள் சிலர் ஒரு தோணியில் அவர்களை நோக்கி வந்தனர்.

உண்மையை அறிந்த பெரு நாட்டு அதிகாரிகளும், அமெரிக்க உளவு அதிகாரிகளும் ஒருவரையொருவர் குறை கூறத் தொடங்கினர். அறிவற்ற முறையில் இருவரைக் கொலை செய்து, விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதற்கான பொறுப்பை மற்றவர்கள்மீது சுமத்தவே இரு நாட்டினரும் முயற்சி செய்தனர்.

ஆனால் ஜிம் பௌவர்ஸ், கேவின் டொனால்ட்சன் மற்றும் அவர்களது அமெரிக்க ஊழியத் தலைமையகம் யாவரும் கிறஸ்துவிற்கு ஒப்பான மனநிலையோடு நடந்துகொண்டனர். அவர்கள் யாரையும் குற்றம் சுமத்தவில்லை. நீதியை நாடி நீதிமன்றத்திற்குச் செல்வோம் என்று அச்சுறுத்தவும் இல்லை. மாறாக அவர்களது விசுவாச அறிக்கையையே மீண்டும் மீண்டும் கூறினர். நிலைமையைக் கர்த்தரிடம் முற்றிலுமாக ஒப்புவித்த அவர்கள் வேறு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

சிலகாலம் கழித்து ஜிம் பௌவர்ஸ் இவ்வாறு அறிக்கை வெளியிட்டார்:

> "நாங்கள் குற்றமிழைத்தவர்களை மன்னிக்கும் மனப்பான்மை உடையவர்களாகவே நடந்து கொண்டோம். அது ஆச்சரியமாக இல்லையா? ஆனால் கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு அதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை... அந்த விமானிகளுக்காக ஜெபித்தேன். அவர்களது மேல் அதிகாரிகளோடு அவர்களுக்காகப் பேசினேன். அந்த அதிகாரி கிறிஸ்துவைக் குறித்து அறிய அதிக ஆர்வம் உடையவராக

இருந்தார். எங்கள் வீட்டிலிருந்து அவரோடு பேசினேன். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்றே நினைக்கிறேன். எங்கள் உள்ளத்தில் அவர்கள் மீது எவ்வித வெறுப்பும் இல்லை."

அவர்களது வாழ்க்கையைச் சீர்குலைக்கும் பேரிழப்பை அவர்கள் சந்தித்தனர். ஆனாலும், "நானும் எனது மகன் கோரியும் சொல்லிமுடியாத சமாதானத்தை அனுபவிக்கிறோம்" என்று ஜிம் கூறினார். "சிலரே இவ்வித விசுவாசம் உடையவராக இருப்பார்கள்" என்று "வாரச் செய்திகள்" என்னும் பத்திரிக்கை இதைக் குறித்து கருத்து வெளியிட்டது.

தனது பக்தி நிறைந்த இனிய மனைவியையும் குழந்தையையும் இழந்த ஜிம் அவர்களுக்காக நடத்தப்பட்ட நினைவுக் கூட்டத்தில், அந்த நாளில் நடந்த சோக நிகழ்ச்சியில் தாங்கள் பெற்ற அற்புதமான நன்மைகளை எடுத்துரைத்தார். ஆம், கடும் மழையில் வெளிப்பட்ட கதிரவனின் வெளிச்சத்தைப் போலவே அது விளங்கியது. தேவனின் அற்புதமான கரத்தை அவரால் அந்தக் கொடூர நாளிலும் காண முடிந்தது.

சரமாரியாக குண்டுகள் விமானத்தைத் துளைத்தன. ஆனால் அவற்றில் ஒன்றுகூட அவரையோ மகன் கோரியையோ தாக்கவில்லை. அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு நேராக விமானத்தில் குண்டு துளைத்திருந்தது. ஆனால் அது அவர்களைத் தாக்கவில்லை.

தீயணைப்பு இயந்திரம் அன்று மிக நேர்த்தியாகச் செயல்பட்டது. பொதுவாக அவ்வளவு திறம்பட அது செயல்புரிகிறதில்லை. அது அவருக்கு ஆச்சரியமளித்தது.

ரோனியையும் குழந்தையையும் தாக்கிய குண்டுகள் அவர்கள் உடலிலேயே நின்றுவிட்டன. அவர்களது உடலைத் துளைத்து மேலும் நேராகச் சென்றிருந்தால் அது விமானியையும் கொன்றிருக்கும். அவ்வாறு நிகழ்ந்திருக்குமாயின் அனைவரும் இறந்து போயிருப்பார்கள்.

ஜிம்மும் கோரியும் அச்சத்தினால் திகிலடையவில்லை. அவர்கள் அன்று அழவுமில்லை, கூக்குரல் இடவுமில்லை. எல்லா அறிவிற்கும் அப்பாற்பட்ட கிறிஸ்துவின் சமாதானம் அவர்களை ஆட்கொண்டது. மிகத் தெளிவான முறையில் நிகழ்ச்சிகளைப் புரிந்துகொண்டு சிந்திக்கவும், விரைவாகச் செயல்படவும் முடிந்தது.



பறக்கும் செஸ்னா விமானத்தைத் தரையில் இறக்க, விமானி கால்களைப் பயன்படுத்த வேண்டும். ஒரு காலில் பெரும் காயம் ஏற்பட்டும் கேவின் மிக நேர்த்தியாக எரிகிற விமானத்தை ஆற்றில் இறக்கினார். அந்த ஆறு வெகு தொலைவில் இருந்தது. ஆனால் சுடப்பட்ட விமானம் தொடர்ந்து அவ்வளவு தொலைவு பறந்து சென்றது. தேவனே அந்த விமானத்தை ஆற்றில் இறக்கினார் என்றே கேவின் கருதினார்.

தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. ஆனாலும் ரோனி மற்றும் சேரிட்டி ஆகியோருடைய உடல்களை விமானத்திலிருந்து வெளியே கொண்டுவரத்தக்க பலம் அவருக்கு இருந்தது எத்தனை ஆச்சரியம்! அப்பொழுது அனலின் கொடுமையை உணராததும் ஆச்சரியமே ஆகும். விமானத்தின் உள்ளே இருந்தபோது அனலின் கொடுமையை அவர் உணராதது எரிகிற சூளைக்குள் நடந்து திரிந்த மூன்று எபிரெய மனிதர்களை அவருடைய நினைவிற்குக் கொண்டு வந்தது (தானி. 3:27).

விமானம் மூழ்கிய பிறகு தீயும் அணைந்துவிட்டது. அதனால் சிறிது நேரம் நீந்திக்கொண்டிருந்த மூவரும் மிதவையைப் பிடித்துக்கொண்டு உதவி செய்பவர்கள் வரும்வரை காத்திருக்க ஏதுவாயிற்று.

கோரியையும் அந்த இரண்டு உடல்களையும் நீரில் மூழ்கிவிடாதபடி கேவினும் ஜிம்மும் மிதவையைப் பிடித்துக் கொண்டு உதவி வரும்வரை நீந்த அவர்களது உடலில் தெம்பு இருந்தது ஆச்சரியமே.

அவர்களது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்திற்கு அருகில் இருந்த ஊரில் ஒரு சிலர் ஜிம்மிற்கு அறிமுகமானவர்கள். அவர்கள் என்ன நடந்தது என்பதற்குச் சாட்சி கூறினர். உதவியைப் பெறுவதற்கு ஒரு வானொலியைப் பயன்படுத்தினர். அந்த வானொலி எவ்விதத் தடையுமின்றி அன்று வேலை செய்தது. ஜிம் அந்த வானொலியைப் பயன்படுத்தி கேவினுடைய மனைவியை அழைத்தார். அப்பொழுது அவர்கள் வீட்டில் இருந்தது மட்டுமின்றி ஒரு விமானி உடனடியாகக் கிடைத்தார். அவர்கள் உடனே ஒரு விமானத்தில் நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு வந்து கேவினை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட சமாதானத்தை கோரியும் ஜிம்மும் உடையவராக இருந்தனர். தேவனுடைய மக்கள் ஏறெடுத்த ஜெபத்தின் விளைவே அது என்று கூறலாம். நீண்ட நாட்கள் இந்தச் சமாதானம் நிலைத்திருக்காது என்று சிலர் ஜிம்மிடம் கூறினர். ஆனால் அது நிலைத்திருக்கும் என்றே ஜிம் உறுதியுடன் இருந்தார்.

இறுதியாக ஒரு அற்புதத்தைச் சொல்லியே ஆக வேண்டும். பௌவர்ஸ், டொனால்ட்சன் குடும்பத்தினர் மற்றும் இந்த நிகழ்ச்சியோடு சம்பந்தப்பட்ட கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்தச் சோக நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தவர்களை மன்னிக்கும் இயல்பு உடையவர்களாக இருந்தனர். தேவனுடைய அன்பு அவர்களுடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தது.

ரோனியும் சேரிட்டியும் இறந்துபோனது வீண்போகவில்லை. இறை ஊழியத்தில் புதிய வகை உற்சாகம் உண்டாயிற்று. உன்னதமான கட்டளைக்குப் பதில் செலுத்தும் வகையில் தங்களுடைய உள்ளங்களில் பலர் ஏவப்பட்டனர். "உறங்கும் கிறிஸ்தவர்களை அவர் எழுப்ப விருப்பம் கொண்டார் என்றே நான் கருதுகிறேன். அதில் நானும் அடங்குவேன். அதன் விளைவாக தேவனிடத்தில் பற்று அற்ற மனிதர்களை அவர்களது நிலையிலிருந்து எழுப்ப நாங்கள் இப்பொழுது ஊக்கம் பெற்றிருக்கிறோம்" என்று ஜிம் அறிக்கை வெளியிட்டார்.

கடைசியாக, கோரி உயிர்தப்பி, அவனுடைய வாழ்வு நீடித்தது. அதன் காரணமாக இயேசு கிறிஸ்துவைத் தனது கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள ஏதுவாயிற்று.

நாட்கள் செல்லச்செல்ல, கிறிஸ்தவர்கள் புதுமையான மனிதர்கள் என்பது மிகத் தெளிவாக இவ்வுலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. அன்று டயானா சாயர் என்பார் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் இவ்வாறு உரைத்தார்: 2001 மே 24 - ஆம் நாள் இந்த நிகழ்ச்சியின் எல்லா விவரங்களும் ஒரு செய்தி நிறுவனத்தின் மூலம் இவ்வுலகிற்கு வெளியிடப்பட்டது.

> "பாடுகள் அனுபவித்த மனிதர்களின் அன்பு உள்ளத்தை விவரிக்கும் ஒரு உன்னதமான கதை. நம்மில் பலர் அவர்களது விசுவாசத்தைத் தொலைவில் இருந்து காண்கிறவர்களாகவே இருக்கிறோம்."

28

# பெரிய விருந்திற்கு அழைக்கப்பட்ட சிறிய நண்பர்



**நிறைவான இல்லத்தரசியாகத்** திருமதி லாயிஸ் விளங்கினார். ஒரு கிறிஸ்தவ மனைவி அல்லது ஒரு கிறிஸ்தவத் தாய் எவ்வாறு விளங்க வேண்டும் என்று திருமறை கூறுகிறதோ, அதற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக அவர் திகழ்ந்தார். தனது ஏழு பிள்ளைகளையும் கர்த்தருக்கென்று வளர்ப்பது அன்னாருக்கு மிகுந்த மகிழ்ச்சியாயிருந்தது. பற்பல இடங்களுக்குப் பயணம் செய்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கென்று அயராது உழைக்கும் தனது கணவனுக்கு உதவி செய்வது அவருக்கு இன்பமளிப்பதாகவே இருந்தது. இதற்கோர் எடுத்துக்காட்டினைக் காணலாம். நியூஜெர்ஸி என்னும் மாநிலத்தில் சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற கணவன், அந்நாள் தன் மனைவியின் பிறந்த நாள் என்பதை நினைவுகூர்ந்தார். தன் மனைவியோடு அன்று இருக்கமுடியவில்லை என்றும், ஒரு அன்பளிப்பை வாங்கித் தர முடியவில்லையென்றும் அவர் தொலைபேசியில் மனைவியிடம் கூறி தன் வருத்தத்தை வெளிப்படுத்தினார். "நீங்கள் எங்கே இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அங்கே நீங்கள் இருப்பதையும், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அதை நீங்கள் செய்வதையும் தவிர மேலான பரிசை உங்களால் எனக்கு அளிக்க முடியாது" என்று எவ்விதத் தயக்கமுமின்றி லாயிஸ் பதிலுரைத்தார்.

லாயிஸைக் குறித்து வேறொன்றையும் சொல்லியே ஆக வேண்டும். சுறுசுறுப்பாக வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பு நிறைந்த அவர், ஆர்வமிக்க வகையில் ஆத்தும ஆதாயம் செய்பவராகவும் விளங்கினார்.

தன் வீட்டின் அருகில் இருக்கும் குடியிருப்புகளில் வசிக்கும் பெண்களுடன் நட்பு பாராட்டி அவர்களை அவ்வப்போது தேநீர் வேதபாடக் கூட்டங்களுக்கு அவர் அழைத்துச் செல்வதுண்டு. ஆனால், சில வாரங்கள் தொடர்ந்து வரும் அப்பெண்மணிகள் தொடர்ந்து வரவிரும்பவில்லை. பல காரணங்களைக் கூறித் தட்டிக் கழித்தனர். தாங்கள் சார்ந்திருந்த மதமே போதுமானது என்று அவர்கள் மனநிறைவோடு இருந்தனர் போலும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் நேரடியான உறவுகொள்ளுவதற்கு அவர்கள் விருப்பம் கொள்ளவில்லை.

ஒருநாள் காலை தன் அறையில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது லூக்கா 14 -இல் சொல்லப்பட்டுள்ள பெரிய விருந்தைப் பற்றி லாயிஸ் நினைவுகூர்ந்தார். அழைக்கப்பட்டவர் அனைவரும் சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்தனர். ஆகவே, பெருவழிகளிலும், வேலிகளருகிலும் சென்று அங்குள்ள மக்களை வருந்தி விருந்திற்கு அழைக்கும்படி எஜமானன் தன் ஊழியக்காரர்களுக்குக் கட்டளை கொடுத்தான்.

லாயிஸ் இதனைத் தன் ஜெபத்தின் பொருளாக ஏறெடுத்தார். “கர்த்தாவே, நான் அழைத்தவர்கள் அனைவரும் போக்குச் சொன்னார்கள். மற்றவர்களிடம் செல்ல நான் விரும்புகிறேன். உமக்காக அவர்களை அழைக்க நான் வெளியிலே செல்ல வேண்டும். ஆனால் குழந்தைகள் என்னோடு இருப்பதால் அவ்வாறு செல்லமுடியாது. பெருவழிகளிலிருந்தும் வேலிகள் அருகிலிருந்தும் யாரையாவது நீர் அனுப்புவீர் என்றால், நான் அவர்களை உமது விருந்திற்கு அழைப்பேன்” என்று அவர் மன்றாடினார்.

பீப் பீப் என்ற ஒலியுடன் குப்பை வண்டி பின்புறச் சாலையில் வருவது அவருடைய செவிக்குக் கேட்டது. ஆம், அந்த வண்டியை ஓட்டி வருபவர் பெருவழியிலிருந்தும் வேலியின் அருகிலிருந்தும் வருபவர் அல்லவா? ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார் லாயிஸ். அவரை இப்பொழுது குப்பை



வண்டிக்காரர் என்று யாரும் அழைப்பதில்லை, துப்புரவு வல்லுநர் என்னும் மங்களகரமான வார்த்தைகளால் எல்லாரும் அழைக்கின்றனர். பக்கத்து வீட்டு குப்பைப் பெட்டியை வாங்கி வண்டியில் போட்டுவிட்டு வெறும் பெட்டியைத் திருப்பிக் கொடுத்தார் துப்புரவு வல்லுநர். அந்தப் பெட்டியை அவ்வளவு எளிதாகத் தூக்க முடியாது. அவருடைய உடல் வளைந்து நெளிந்தது. உடலில் உண்டான வலியைப் போக்கிக்கொள்ள அவர் தன் கைகளை முறுக்கிக் கொண்டார்.

குப்பைப் பெட்டியை இழுத்துக்கொண்டு வாசல்வரை சென்ற லாயிஸ், அவர் தனது வண்டியை அங்கே கொண்டு வரும்வரை காத்திருந்தார். அந்த வண்டியோட்டி படியில் ஏறினார். அவரைப் பார்த்து “ரெக், உங்களுக்கு முதுகு பிடித்துக் கொண்டிருக்கிறதா? அது வேதனை தருகிறதா?” என்று லாயிஸ் கேட்டார். “இல்லையில்லை, இருதயத்தில்தான் வேதனை” என்று பதிலுரைத்தார் ரெக்.

“எல்லா நேரத்திலும் ஏன் இந்தப் பாரமான குப்பைத் தொட்டிகளை நீங்கள் தூக்க வேண்டும். என்னுடைய தொட்டியை நான் தூக்கிப் போடுகிறேன்” என்று சொல்லி குப்பைத் தொட்டியைத் தூக்கி, குப்பையை வண்டியில் கொட்டினார் லாயிஸ்.

“இந்த வேலைதான் எனக்குக் கிடைத்திருக்கிறது” என்று பதில் கூறினார் ரெக்.

“நல்லது, உங்களுக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும் அல்லது நல்ல இருதயம் கிடைக்க வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்.”

“குப்பை வண்டிக்காரனைக் குறித்து எவருக்கும் அக்கறையில்லை” என்று அவர் சோகத்துடன் விடை கூறினார்.

“தேவன் அக்கறை உடையவராயிருக்கிறார்” என்று லாயிஸ் விடை பகர்ந்தார்.

வண்டியை ஓட்டிய வண்ணம் துப்புரவுத் தொழிலாளி அடுத்த வீட்டை நோக்கிச் சென்றார். சிறிது நேரத்தில் அந்தத் தெருவை அவர் கடந்துவிட்டார்.

ஒருவாரம் கழிந்தது. குப்பை வண்டி வந்துவிட்டது. வாசல் விளிம்பில் நின்று கொண்டிருந்த லாயிஸ், அவர் வண்டியை

விட்டு இறங்குவதற்கு முன்னரே குப்பையை வண்டியில் கொட்டிவிட்டார். அவருடைய முகத்தை வியப்புடன் பார்த்த ரெக், "எனக்காக நீங்கள் ஜெபம் செய்தீர்களா?" என்று வினவினார்.

"ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறோம்"

ரெக்கிற்கு அதை நம்ப முடியவில்லை. ஆனாலும் அவர் தனது சந்தேகத்தை வெளிப்படையாகச் சொல்லவில்லை.

"கேளுங்கள், கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்று வேதம் கூறுகிறது. நான் ஜெபிக்கிறேன். ஆனால் நீங்கள்தான் வேறு ஒரு வேலைக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்" என்று கூறிய லாயிஸை நோக்கியவண்ணம் ரெக் தலையசைத்துவிட்டுப் பதில் ஒன்றும் கூறாமல் வண்டியை ஓட்டினார்.

குப்பை வண்டி அடுத்த தெருவிற்குச் சென்றது. அந்த வழியாக லாயிஸ்ஸின் மகள் மோய்ரா பள்ளிக்கு நடந்து சென்றுகொண்டிருந்தாள். இரண்டாம் வகுப்பு படிக்கும் அச்சிறுமி குப்பை வண்டியைக் கண்டவுடன் நின்று, "ஹேறெ, உங்களுக்காக நாங்கள் வீட்டில் ஜெபிக்கிறோம்" என்று சத்தமிட்டுக் கூறினாள். குப்பை வண்டிக்காரரைக் குறித்து அக்கறை கொள்வதற்குச் சிலர் இருக்கின்றனர் என்று அப்பொழுது ரெக் உணர்ந்தார்.

அடுத்த வாரம். குப்பை வண்டி வரக்கூடிய நேரம் வந்துவிட்டது. லாயிஸ் வாசற்படியில் காத்திருந்தார். "அம்மா, தேவன், பரலோகம் மற்றும் நரகம் எல்லாவற்றையும் நம்புகிறேன். ஆனால் நான் செய்ய வேண்டியது ஏதோ ஒன்று இருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படி ஏதாவது இருக்கிறதா?" என்று வினவினார் ரெக்.

இரட்சிப்பின் வழியைக் குறித்து விளக்கமாகக் கூறிய லாயிஸ் விசுவாசிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறினார். அவர் கவனத்துடன் கேட்டார். பின்னர் புன்னகை பூத்த வண்ணம் கையசைத்துச் சென்றார். "உறுதியோடு இருங்கள், ஒரு வேலைக்கு விண்ணப்பம் செய்யுங்கள்" சத்தமிட்டு லாயிஸ் கூறினார்.



அடுத்த வாரமும் தொடர்ந்து லாயிஸ் அவருக்காக ஜெபித்தார். ஒரு நாளிலாவது ஜெபிக்க மறக்கவில்லை. குப்பை வண்டி வரும் நாள். குறித்த நேரத்தில் வாசற்படியருகில் லாயிஸ் நின்றுகொண்டிருந்தார். ரெக் சிரித்த வண்ணம் தனது இருக்கையிலிருந்து இறங்கி வந்தார். "நான் அதைச் செய்துவிட்டேன்" என்று அவர் கூறினார்.

"என்ன செய்தீர்கள்?" ஒருவேளை புதிய வேலை ஒன்றுக்கு அவர் மனுச் செய்திருப்பாரோ?

"நான் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்துவிட்டேன்." கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டதாக அவர் கூறினார்.

அது உண்மையா? உண்மையாகவே அவர் இரட்சிக்கப்பட்டுவிட்டாரா? அது உண்மையோ, பொய்யோ, அவர் இப்பொழுது வேதத்தைப் படிக்கவேண்டும். விசுவாசம் கேள்வியினாலே வரும். இதுதானே உண்மை. கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். "ரெக், நீங்கள் வேதத்தைப் படிக்கத் தொடங்க வேண்டும். அதுதான் ஆத்துமாவிற்கு உணவு" என்று கூறினார் லாயிஸ்.

"என்ன? இதை நீங்கள் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் அவ்வாறு செய்ய வேண்டுமென்றால், அதை என்னால் செய்ய முடியாது. நான் எதையும் படிக்கிறதில்லை. செய்தித்தாளைக் கூட நான் படிக்கிறதில்லை." அங்கிருந்து நகர்ந்தார் ரெக்.

அடுத்த தெரு முனை. பெரிய பெட்டி ஒன்றுடன் ஒருவர் காத்திருந்தார். என்ன இவ்வளவு பெரிய பெட்டி? ஆர்வத்துடன் உள்ளே பார்த்தார் ரெக். மேலாக ஒரு புத்தம் புதிய வேதாகமம். அதனுடைய மெல்லிய பிளாஸ்டிக் உறை இன்னும் கிழிக்கப்படவில்லை. ரெக் தனது உள்ளத்தில் குத்தப்பட்டார். "கர்த்தர் என்னை வாசிக்கும்படி சொல்லுகிறார். உம்முடைய புத்தகத்தை நான் வாசிப்பேன் கர்த்தாவே" என்று தனக்குள் சொல்லிக்கொண்ட ரெக் அதை எடுத்து வைத்துக்கொண்டார்.

அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார். திருமதி லாயிஸ் குடும்பத்தினர் செல்கிற சபைக்குச் சென்றார். அவர்

வேலை செய்யும் நிறுவனத்தின் பெயர் பொறித்த புதிய ஆடையைப் பளிச்சிடும் வண்ணம் அணிந்தவராகச் சபைக்கு வந்தார். அதுதான் அவர் வைத்திருந்த ஆடைகளில் சிறந்தது. முதல் வரிசையில் அமர்ந்து கொண்டார். இனிப்பு மிட்டாய்க் கடையில் எல்லாவற்றையும் ஆவலுடன் பார்க்கும் சிறு குழந்தையைப் போல பார்த்த அவருக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது.

எல்லாம் அவருக்கு மிக நேர்த்தியாகத் தோன்றியது. இனிமையான பாடல்கள், பிரசங்கம், அங்கு இருந்தவர்கள் அன்புடன் பேசினார்கள். ஒருவர் அவர் அருகில் வந்தார். செவ்வாய்க்கிழமை ஜெபக் கூட்டத்திற்கும், வெள்ளிக்கிழமை வேத பாடக் கூட்டத்திற்கும் வரும்படி அழைத்தார். "நான் இரண்டு மடங்கு வேலை செய்ய வேண்டும், அன்றைக்கு நிறைய தெருக்களுக்குப் போக வேண்டும்" என்று ரெக் பதிலுரைத்தார்.

ரெக் மனமாற்றம் அடைந்த சிறிது காலம் கழித்து ஞானஸ்நானம் பெற்றார். இப்பொழுது அவர் குடிப்பதில்லை. அந்தப் பழக்கத்தை விட்டொழிக்க தேவன் அவருக்கு மனஉறுதியைத் தந்தார். உண்மையுள்ள மனதோடு அவர் சபைக்கு வந்தது மட்டுமின்றி, சுவிசேஷக் கூட்டங்களுக்குத் தனது நண்பர்களையும் அழைத்து வந்தார். ஆம், அவர் தனது இரட்சிப்பின் முதல் நாளிலிருந்து அதை மகிழ்ச்சியோடு அனுபவித்தார்.

அவருடைய இருதய வலி மாறவில்லை. ஆனால் எளிமையான வேலை அவருக்குக் கிடைத்தது. பல வருடங்கள் அந்த வேலையை அவர் செய்தார். கிறிஸ்துவுக்குள்ளான அந்த அருமையான சகோதரன் பரமவீட்டிற்கு அழைத்துக்கொள்ளப்பட்டார். பெருவழிகளிலிருந்தும் வேலியருகிலிருந்தும் வருந்தி பெரிய விருந்திற்கு அழைக்கப்பட்ட ரெக் இப்பொழுது கர்த்தருடைய சமுகத்தில் இருக்கிறார்.

இவையாவும், உண்மையுள்ள இல்லத்தரசியின் ஆர்வமிக்க ஜெபத்தின் விளைவாகும். "கர்த்தாவே, என்னைப் பயன்படுத்தும்."

# 29

## இன்னும் பலர் . . .



**இயேசு கிறிஸ்து** எவ்வாறு நடந்துகொள்வார் என்பதை ஒவ்வொரு நாளும் இவ்வுலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் பலர் பிரதிபலித்துக் காட்டுகின்றனர்.

"அவர்களது உடல் அமைப்பிலே கிறிஸ்துவின் சாயலை அவர்கள் வெளிப்படுத்திக் காண்பிக்கிறதில்லை. புதிதான அவர்களுடைய மனதினாலும், இருதயத்தினாலுமே அவர்கள் அவரை வெளிப்படுத்துகின்றனர். பரிசுத்தம், அன்பு, தாழ்மை, தயவு, மன்னிப்பு ஆகிய நற்குணங்களினால் நிறைந்து தெய்வீக இயல்பை அவர்கள் பிரதிபலிக்கின்றனர்."

விருந்தோம்பலின் வாயிலாக சிலருடைய வாழ்வில் இரட்சகர் பிரதிபலிக்கப்படுவதை நான் கண்டிருக்கிறேன். தங்களுடைய பெரிய படுக்கை அறையை எனக்குக் கொடுத்துவிட்டு வேறு இடத்தில் படுத்துக்கொண்ட மனிதர்களை அவ்வப்போது நான் சந்தித்தது உண்டு. ஒருமுறை சபையொன்றில் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. ஒருவருடைய இல்லத்தில் பதினாறு விருந்தினர் தங்கியிருந்தனர். அது அவ்வளவு பெரிய வீடும் இல்லை. தங்களுடைய படுக்கை அறைகளை விருந்தினர்களுக்குக் கொடுத்துவிட்டு அந்தத் தம்பதிகள் தங்களுடைய மூன்று பிள்ளைகளுடன் கார் நிறுத்தும் இடத்தில் படுத்துறங்கினர். தாய்வானுக்குச் சென்றிருந்த நான் ஒரு ஊழியருடைய வீட்டில் தங்கினேன். எனக்கு தனது படுக்கையைக் கொடுத்துவிட்டு குளிருக்காக நெருப்பு எரியும் இடத்திற்கு அருகில் அவர் தரையில் படுத்துக்கொண்டார். அதற்காக அவர் பெருமைப்படவில்லை. இதமான சூடு

இருக்கும் இடத்தில் படுத்து என்னைக் காட்டிலும் சுகமாக உறங்கியதாக அவர் கூறினார். ஒவ்வொரு விருந்தினரையும் கிறிஸ்துவை நடத்துவது போலவே அவர் நடத்தினார். கொலாரொடா மாகாணத்தில் ஞாயிறு காலை சபைக்குச் செல்லும் வழியில் கார் விபத்து நேரிட்டுவிட்டது. அதில் பயணம் செய்த சகோதரி நினைவு திரும்பியவுடன் முதலில் கூறிய சொற்கள், “சபைக்கு வந்திருந்த புதிய நபர்களை யார் விருந்திற்கு அழைத்துச் சென்றனர்?” என்பதாகும்.

இயேசு கிறிஸ்துவின் அருட்குணத்தைக் குறித்துச் சிந்திக்கும் வேளையில், சிறுவர்களிடம் அவர் பாராட்டிய அன்பைக் குறித்து நம்மால் சிந்திக்காமல் இருக்க முடியாது. கவனத்தைத் திசைதிருப்பித் தொல்லை தருபவர்கள் என்றே சிறுவர்களைக் குறித்துச் சீடர்கள் எண்ணங்கொண்டிருந்தனர். ஆனால் இயேசு கிறிஸ்து அவ்வாறு நினைக்கவில்லை. தேவனுடைய அரசிற்கு ஏற்ற குடிமக்களாகவே அவர் அவர்களை எண்ணினார். உண்மையில் சிறியவர்களைக் காட்டிலும் பெரியவர்கள் மூலமாகவே அவர் அதிகத் தொல்லைகளுக்கு ஆளானார்.

சாது சுந்தர் சிங் தன்னுடைய கர்த்தரைப் பிரதிபலித்துக் காட்டியவர் ஆவார். அவர் விருந்தினராகச் செல்லும் வீடுகளில் தரையில் அமர்ந்து அங்கிருக்கும் குழந்தைகளுடன் விளையாடுவார். ஒருநாள் ஒரு வீட்டில் பிள்ளைகள், “கிறிஸ்து எங்களைத் தூங்க வைப்பாரா” என்று தங்களது தாயாரிடம் வினவினர். அக்குழந்தைகள் சாது சுந்தர் சிங்கினிடத்தில் கிறிஸ்துவைக் கண்டனர்.

இது போலோரு மற்றொரு கதையையும் நான் அறிவேன். ஒரு மூட்டையை ஒரு சிறுவன் சுமந்து சென்று கொண்டிருந்தான். வேகமாக எதிரே வந்த மனிதன் அச்சிறுவன் மீது மோதி மூட்டை கீழே விழுந்துவிட்டது. அதிலிருந்த பொட்டலங்கள் தரையில் சிதறி விழுந்தன. சிறுவன் மீது மோதிய மனிதனோ அச்சிறுவனைக் குற்றம் சுமத்தித் திட்டிச் சென்றான். அதைக் கண்ட வேறொருவர் கீழே விழுந்த பொட்டலங்களை எடுத்துத் தந்து அந்தச் சிறுவனுக்கு உதவி செய்தார். பின்னர் ஒரு டாலர் நோட்டை எடுத்து அச்சிறுவன் கையில் கொடுத்து, நீ அடைந்த இழப்பை இது சரிசெய்யும் என்று



நினைக்கிறேன்” என்று அவர் கூறினார். அந்தப் புதுமை மனிதரைப் பார்த்த சிறுவன் “நீங்கள்தான் இயேசுவா?” என்று வினவினான். அவருடைய தயவு அவனுக்கு கிறிஸ்துவை வெளிப்படுத்தியது. “இல்லை, நான் அவரைப் பின்பற்றும் சீடன்” என்று அந்தக் கிறிஸ்தவர் விடை பகர்ந்தார்.

கோபமூட்டப்படும்போது பல கிறிஸ்தவர்கள் பொறுமையோடு சகித்துக் கொள்ளுகிறதினால் கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்துகின்றனர். க்யூட்டோ என்னுமிடத்தில் ஊழியம் செய்யும் ஒருவருடைய வாகனத்தின் மீது தவறான வழியாக வந்த வேறொரு வாகனம் மோதிவிட்டது. தவறிழைத்த பெண்மணி தன்னுடைய வாகனத்திலிருந்து கோபத்துடன் கீழே இறங்கினார். அவரைப் பார்த்து ஓலமிட்டார். அவருடைய நிறத்தைப் பார்த்து அவரையும் அவருடைய நாட்டையும் திட்டினார். அமைதியோடு நின்று கொண்டிருந்த ஊழியரைக் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். தன்னுடைய வாகனத்தில் மீண்டும் ஏறிய ஊழியர் ஆவியின் கனியாகிய நீடிய பொறுமை தன்னிடத்தில் அப்போது நிலைத்திருந்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத்தினார். “என்னுடைய வாகனத்திற்குக் கொஞ்சம் பாதிப்பு ஏற்பட்டது உண்மைதான். கர்த்தர் என்னோடு இல்லாதிருந்தால் எவ்வாறு எனது நடத்தை இருந்திருக்கும்? இதை எண்ணியெண்ணிக் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்” என்று அவர் கூறினார்.

மருத்துவர் ஐடா ஸ்கட்டர் இந்தியாவில் பல ஆண்டுகள் இறைப்பணி ஆற்றினார். அவர் கோபமூட்டப்படும் வேளைகளில் எதிர்த்துச் செயல்படாமல் இருக்கும் அமைதியின் ஆவியை உடையவராக இருந்தார். இவ்வாறு அவர் இருப்பதன் காரணம் என்னவென்று ஒரு இஸ்லாமிய நண்பர் வினவினார். அம்மையார் பதிலுரைப்பதற்கு முன் அவரை அறிந்த அருகில் இருந்த ஓர் இந்து நண்பர் அதற்குரிய பதிலைக் கூறினார். “இது ஏன் என்று உங்களுக்குத் தெரியாதா? இந்த மருத்துவரின் தேவன் பொறுமையும் அன்பும் உடையவர். ஆகவே இவரும் தனது தேவனைப் போலவே நடந்து கொள்கிறார்.”

தாழ்மையுள்ளவர்களிடம் தயவும் மனஉருக்கமும் பாராட்டுகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் நாம் அன்புகூர்

கிறோம். அதே குண நலன்களை அவருடைய மக்களிடம் காணும்போது அதில் நாம் களிகூருகிறோம். செல்வச் செழிப்பும் சுகபோகமும் நிறைந்த வீட்டில் வளர்க்கப்பட்டவர் போர்டன். வறியவர்கள் வாழும் பகுதியில் ஊழியம் நடைபெறுகிறபோது அந்த யேல் மாநிலச் செல்வந்தர் சமையல் செய்து கொடுத்தார். இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு தேவ ஊழியர் தன் தாய்நாடு திரும்பியவுடன் அவரைப் பார்த்து, “அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உங்களை மிகவும் கவர்ந்தது எது?” என்று ஒருவர் வினவினார். “கோடீஸ்வரனின் மகன் வில்லியம் போர்டன் ஊழிய முகாமில் வறுமை நிறைந்த பிச்சைக்காரர் ஒருவருடைய தோளில் கையைப் போட்டுக் கொண்டு அன்பு பாராட்டியதே என்னை மிகவும் கவர்ந்தது” என்று அந்த ஊழியர் பதிலுரைத்தார்.

பால் சாண்ட்பெர்க் என்பார் தனது எஜமானனைப் பின்பற்றியது வீணாகப் போகவில்லை. ஒருநாள் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றபோது ஃபிரட்டி என்பவரைக் கண்டு அவர் அருகில் அமர்ந்து, நற்செய்தியை அவரிடம் பகிர்ந்து கொண்டார். ஃபிரட் விரைவில் தேவனுடைய இறை அரசில் நுழைந்தார்; புதிய பிறப்பை அடைந்தார்.

சில காலம் கழித்து ஃபிரட் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவராக, எளியதொரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பால் அவரை நாள்தோறும் சென்று சந்தித்தார்; அவருடைய தேவைகள் அனைத்தையும் செய்து வந்தார். ஃபிரட் மரணமடைந்த இரவில், அவரைத் தனது கரங்களில் தாங்கினவராக, வேத வசனங்களைக் கூறிக்கொண்டே இருந்தார். இது வன்றோ மெய்யான இரக்கம் பாராட்டுதல்!

ஜப்பானில் சபைக் கட்டிடம் ஒன்றைக் கட்ட ஒரு கிறிஸ்தவச் சபையினர் தீர்மானித்தனர். அந்தச் சிறிய சபையினர் கட்டிடத்திற்குரிய வரைபடத்தை எடுத்துக்கொண்டு அருகில் உள்ள வீடுகளுக்குச் சென்று, தங்களுடைய நோக்கத்தைத் தெரிவித்து, அதனால் அவர்களுக்கு ஏதாகிலும் இடர்ப்பாடு உண்டாகுமா என்று வினவினர். ஒருவரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கட்டடத்தைக் கட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டனர். அப்பொழுது அயலகத்தார் ஒருவர் இந்தக் கட்டடம் தனது வீட்டிற்கு வரும் சூரிய ஒளியைத் தடுத்துவிடும் என்று கூறினார். ஏன் முன்னமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென்று அந்தக் கிறிஸ்தவர்கள் அவரைக் குறைகூறவில்லை. மாறாக, கட்டட வல்லுநருக்கு மீண்டும் பணம் கொடுத்து கட்டிடத்தின் உயரத்தை மாற்றியமைக்க ஏற்பாடு செய்தார்கள். மகிழ்ச்சியடைந்த அந்த அயலகத்தார் குழம்பியும் போய்விட்டார். தன்னுடைய வீட்டிற்குச் சூரிய ஒளி கிடைக்கும் என்று மகிழ்ச்சி அடைந்தார். கிறிஸ்தவர்களின் கிருபை மிக்க செயல் அவருக்குப் புதிராயிருந்தது.



நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போன்று இருப்போமென்றால் வாழ்க்கையில் அனைத்துதர மக்களிடமும் அன்பும் பரிவும் பாராட்டுகிறவர்களாக விளங்குவோம். காலை உணவு உண்ணுவதற்கு முன்னர் எலியட் குடும்பத்தினர் ஒன்றுகூடி வேதத்தைத் தியானிப்பது வழக்கம். ஒருநாள் காலையில் தந்தையார் மற்றவர்களுக்கு வேதத்தை வாசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது குப்பையை ஏற்றிச் செல்லும் தொழிலாளி தோட்டத்திலிருந்து பெட்டிகளை அகற்றும் சத்தம் கேட்டது. உடனடியாக வேதாகமத்தை ஒருபுறம் வைத்துவிட்டு, பலகணியைத் திறந்து அவ்வூழியருக்கு உற்சாகமாக வாழ்த்துதல் கூறினார். எந்த ஒரு வேலையும் மற்ற வேலையைக் காட்டிலும் அதிக புனிதமானது என்று அவர் கருதவில்லை. புனிதமானது, உலகுசார்ந்தது என்று வேலைகளை அவர் பிரித்துப்பார்க்கவில்லை.

அனைத்துப் பிரிவு கிறிஸ்தவ மக்களிடையிலும் கிறிஸ்து மாதிரியாகப் பின்பற்றப்படுகிறார். கிறிஸ்தவத் தொழிலதிபர் ஒருவரைப்பற்றி, அதே தொழிலைச் செய்யும் வேறொரு தொழிலதிபர் கூறிய கருத்து, “அவரோடு நீங்கள் வணிகம் செய்யும்போது எழுத்தின் மூலமாக ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அவருடைய வார்த்தையே போதுமானது” என்பதாகும். அந்தத் தொழிலதிபர் தனது வாடிக்கையாளர்களோடு எழுத்தின் மூலமாக ஒப்பந்தம் செய்துகொண்டதேயில்லை.

தன்னுடைய வாடிக்கையாளரிடம் வருமானவரி அறிவுரை வழங்கும் ஒருவர் சில ஆலோசனைகளைக் கூறினார். அந்த ஆண்டில் அவர் பெற்ற பெருந்தொகையை வருமானமாகக் காட்டவேண்டியதில்லையென்றும், அதை அரசாங்கம் அறியப்போகிறதில்லை என்றும் உறுதியளித்தார். அந்த வாடிக்கையாளர் ஒரு கிறிஸ்தவர். “அதை நான்

வருமானமாகக் காட்டியே ஆகவேண்டும். ஏனெனில் நான் ஒரு கிறிஸ்தவன்" என்று பதிலுரைத்தார் அந்த வாடிக்கையாளர். அவருடைய விசுவாசத்தினால் தன்னுடைய பொருளாதாரம் பாதிக்கப்படுவதை அவர் பொருட்படுத்தவில்லை.

பழைய கார்களை விற்பனை செய்யும் நிறுவனத்தில் விற்பனையாளராகப் பணிபுரிந்த ஒருவர் இரட்சிக்கப்பட்டார். அங்கே வாகனம் ஒன்றை வாங்குவதற்காக ஒரு வாடிக்கையாளர் வந்திருந்தார். "இங்கே இருக்கிற வாகனங்களில் ஒன்றேனும் தகுதியுடையது இல்லை" என்று அந்த விற்பனையாளர் உண்மையைக் கூறினார். விற்பனைத் திறன் உள்ள எவரும் அவ்வாறு கூறமாட்டார்கள்.

தவறாகப் பணம் கோரி காப்பீட்டுக் கழகத்திற்கு எழுதப்பட்ட விண்ணப்பத்தில் ஒரு கிறிஸ்தவ மருத்துவர் கையெழுத்திட மறுத்துவிட்டார். அந்த நோயாளி தகாத சொற்களால் மருத்துவரைத் திட்டினார்.

ஒரு இறையூழியரின் பயணப் பெட்டிகளை சுங்க இலாகாவினர் தர மறுத்துவிட்டனர். அவர்கள் அதற்காக அவரிடம் லஞ்சம் கேட்டபோது அவர் தர மறுத்ததே அதற்கான காரணம்.

தன் வீட்டை 250,000 டாலருக்கு விற்க ஒரு விசுவாசி வாய்வார்த்தையாக ஒப்புக்கொண்டார். அப்பொழுது வேறொருவர் அந்த வீட்டை 265,000 டாலர் விலைக்கு வாங்க முன்வந்தார். அவர் என்ன செய்ய வேண்டும்? அதற்குரிய விடை சங்கீதம் 15:4 -இல் இருக்கிறது. "ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறவனே" கர்த்தருடைய கூடாரத்தில் தங்குகிறவன். வாய்மையை இழப்பதைக் காட்டிலும் 15,000 டாலரை இழப்பதே மேல். ஞாயிற்றுக்கிழமை என்ன மதத்தைத் சார்ந்திருக்கிறீர்களோ அதே மதத்தை திங்கட்கிழமையிலும் கடைப்பிடிப்பது சிறந்தது.

சோதனைகளைச் சகிப்பவர்களிடம் கிறிஸ்துவின் சாயலை நாம் காணமுடியும். நீண்ட காலம் காத்திருந்து ஒரு கிறிஸ்தவத் தம்பதியினர் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தனர். சில மாதங்களுக்குள்ளாக அந்தக் குழந்தை தொட்டிலிலேயே இறந்துவிட்டது. அந்நிகழ்ச்சியைக் குறித்து இறையூழியர் ஒருவர் இவ்வாறு கூறினார்: "அந்நிகழ்ச்சியின்போது சபைக்கூடத்தில் பாடிய பாடல் எனக்கு ஓர் அறைகூவலாக அமைந்தது. 'கன்மலையாகிய நமது தேவனுக்கு எல்லா மேன்மையையும் செலுத்துங்கள். அவருடைய கிரியைகள் நிறைவானவை. அவருடைய வழிகள் நீதியுடையவை. உண்மையுள்ள தேவன், அவரிடத்தில் அநீதி இல்லை. அவரே நல்லவர்' என்னும் கருத்துடைய பாடலைப் பாடினார்கள். அந்தக் குழந்தையின் தாய் தனது கணவன் அருகே நின்று அப்பாடலைப் பாடினார். கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் தேவனை நோக்கி ஏறெடுத்த அவரது முகம் பிரகாசித்தது."

பெவர்லி வெஸ்ட் என்னும் பெண்மணியைப் பற்றிய உண்மை என் நினைவிற்கு வருகிறது. அவருக்குப் புற்றுநோய் இருப்பதாகவும் அதனால் அவர் கூடியவிரைவில் இறக்க நேரிடும் என்றும் மருத்துவர்கள் கூறிவிட்டனர். அதே சமயத்தில் கேரி வில்சன் என்பார் கணையத்தில் நோயுற்றுக் கவலைக்கிடமாக இருக்கிறார் என்பதை அவர் கேள்விப்பட்டார். அந்த அம்மையார் எழுதிய மடலை வாசியுங்கள்:

அன்புள்ள கேரி, பெத் மற்றும் குடும்பத்தினருக்கு,

எங்களுடைய அனுதின ஜெபத்தில் உங்களுக்காக இடைவிடாமல் மன்றாடுகிறோம். நித்திய தேவனின் கரங்கள் உங்களை அணைத்து ஆறுதல் தருவதாக. அவரே உங்களுக்குத் தமது பெலனையும் கிருபையையும் தருகிறவராக இருக்கிறார்.

என்னைப் புற்றுநோய் தாக்கியிருப்பதாகச் சமீபத்தில் மருத்துவர் கூறினார். அதனால் நான் விரைவில் இறக்கநேரிடும். எனக்கு கெமோதிரபி செலுத்துகிறார்கள். அதனால் ஜெபம் செய்தவற்கு எனக்கு அதிக நேரம் கிடைத்திருக்கிறது. உங்களுடைய பெயரே ஜெபப்பட்டியலில் முதலிடம் வகிக்கிறது.

"நிலவின் ஒளியில் பளிச்சிடும் பொன்" என்னும் நூலில், அது ஏமி கார்மிகேல் அம்மையார் எழுதியது என்று நினைக்கிறேன், கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்கியத்திற்கு முன்னதாகவே அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை பிலிப்பியர் 3:10 – இல் குறிப்பிடப்பட்டுள்ளதை நினைவுபடுத்தி இருக்கிறார். இந்த வழிகளில் நாம் கிறிஸ்துவை அறிந்துகொள்வோம். சிலுவையின் ஐக்கியத்தையும், கெத்சமனே ஐக்கியத்தையும் கொஞ்சமேனும் புரிந்துகொள்ளும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். "என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று அவருடைய பலத்தினால் கூறுவோமாக.

அவருடைய அன்பில் கட்டப்பட்டுள்ள

ஜான், பெவர்லி.

சோதனையை நகைச்சுவையாக எடுத்துக்கொண்ட ஒருவரைக் காண்போம். கிறிஸ்தவர் ஒருவருடைய ஒரு கண் அகற்றப்பட்டு அங்கு கண்ணாடியால் செய்யப்பட்ட கண்ணைப் பொருத்த வேண்டும் என்று மருத்துவர் கூறினார். "கண் சிமிட்டும்படியாக அதைத் தயவு செய்து பொருத்துங்கள்" என்று அவர் மருத்துவரை வேண்டிக்கொண்டார். தேவனுக்குக் கீழ்ப்படிந்த இந்த நண்பர்கள் யாவரும் தங்களுடைய வாழ்க்கையில் வெற்றி சிறந்தார்கள்.

கிறிஸ்துவைத் தேடி வருபவருக்கு முன் அவருடைய குணநலன்களைத் தரித்தவராக அவரைப் பிரதிபலித்துக் காட்டுவது எவ்வளவு உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாய் வாழ்ந்து, தன்னுடைய கர்த்தரைக் கவர்ச்சிமிக்க ஒருவராக ஒரு சீடனால் காட்டமுடியும். "நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத் தக்கதாக" வேலைக்காரர்கள் தங்களுடைய எஜமான்களைப் பிரியப்படுத்தவேண்டும் என்று பவுல், தீத்துவிற்கு எழுதியுள்ளார் (தீத்து 2:9, 10). "சத்தியத்தை மக்கள் கேட்கும்படியாக மட்டும் அதைச் சொல்வது போதாது. அது வெளியரங்கமாகக் காணக்கூடியது என்பதை அவர்கள் நம்மிடத்தில் காணவேண்டும்" என்று ஒருவர் கூறியுள்ளார்.

# 30

## தெய்வீக இயல்பு வாழ்க்கை



**தன்னுடைய சிற்பக் கூடத்திலே** ஒரு பளிங்குக் கல்லை உற்று நோக்கிக் கொண்டிருந்தார் மைக்கேல் ஏஞ்சலோ என்னும் கலைஞர். கற்பனை உலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்த சிற்பியை நோக்கி, அந்தக் கரடுமுரடான பாறையை அவ்வளவு நேரம் உற்றுநோக்குவதன் காரணம் என்னவென்று உடனிருந்தவர் வினவினார். மைக்கேல் ஏஞ்சலோவின் முகம் பிரகாசித்தது. "இந்தக் கற்பாறைக்குள் ஒரு தேவதூதன் கட்டுண்டு கிடக்கிறான். அவனை நான் விடுதலை செய்யப் போகிறேன்" என்று மிகுந்த உற்சாகத்துடன் அவர் விடை பகர்ந்தார்.

இதற்கு இணையான ஆவிக்குரிய உண்மை ஒன்றைக் காணலாம். தேவனுடைய பிள்ளையாக விளங்குகிற ஒவ்வொருவருக்குள்ளாகவும் கிறிஸ்து குடிகொண்டுள்ளார். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்" என்று பவுல், கொலோசெயருக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டுள்ளார் (கொலோ. 1:27). விசுவாசிகளுக்குள்ளாக கிறிஸ்து வாழ்கிறார் என்று தெளிவாக கலாத்தியர் 2:20-ஆம் வசனத்தில் அவர் கூறியுள்ளார். தேவ பக்தியோடு வாழ்ந்து, கிறிஸ்துவை நாம் பிரதிபலித்துக் காட்டுவதாலே அது விளங்கும். கர்த்தர் ஒவ்வொரு சூழலிலும் எவ்வாறு பேசுவார், எவ்வாறு நடந்துகொள்வார் என்னும் முறையில் நாமும் செயல்படுவோமெனில் கிறிஸ்து நமக்குள் வாழ்

கிறார் என்னும் உண்மை பிறரால் காணப்படும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையில் வாழ நாம் அனுமதிப்போம் என்றால் அது நிறைவேறும்.

ஏதோ ஒரு சில நேரங்களில் மட்டும் தெய்வீக இயல்புடையவர்களாக நடந்து, கிறிஸ்துவை உலகிற்குப் பிரதிபலித்துக் காட்டுவது போதாது. அதுவே நமது வாழ்வின் நடைமுறையாக விளங்க வேண்டும். அதுவே நமது குணநல நடத்தையின் பாங்காகக் காணப்பட வேண்டும். ஆவிக்குரிய பிரதிபலிப்பு நம்மில் அநேகரிடத்தில் சற்று மெதுவாகவே வெளிப்படுகிறது; இது பிரச்சனைக்குரிய ஒன்றாகும். சராசரி வாழ்க்கையைக் காட்டிலும் மேம்பட்ட வாழ்வினை பிரதிபலித்துக் காட்டுவதற்கான அரிய சந்தர்ப்பங்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உண்டாவது உண்டு. அச்சந்தர்ப்பங்களில் இயேசு கிறிஸ்து எவ்வாறு பேசியிருப்பாரோ மேலும் எவ்வாறு செயல்பட்டிருப்பாரோ, அதுபோலவே புத்திகூர்மையுடன் நானும் பேசியிருக்க வேண்டும் அல்லது நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று பின்னரே நாம் நினைத்துப் பார்க்கிறோம். உண்மையில் அந்த அரிய சந்தர்ப்பங்களை நாம் இழந்து போனோம். பொதுவாக மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் மேலாக நாம் உயர்ந்து செயல்படுவதில்லை.

உண்மையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பலர் ஏற்க மறுக்கிறதில்லை. நாம் வெளிப்படுத்திக் காட்டுகிற கிறிஸ்துவையே அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். நம்முடைய முன்கோபம், நம்முடைய ஏளனப் பேச்சு, நம்முடைய இச்சை, நம்முடைய பெருமை ஆகியவையே அவர்களது மறுப்பிற்குக் காரணங்களாக அமைகின்றன. அவருடைய அன்பு, அவருடைய பண்பு, அவருடைய கிருபை ஆகியவற்றை அவர்கள் நம்மிடத்தில் காண்கிறதில்லை.

கிறிஸ்துவைக் காணாததும், அறியாததுமான இவ்வுலகிற்கு எங்ஙனம் நாம் தொடர்ந்து கிறிஸ்துவை வெளிப்படுத்திக் காட்ட இயலும்? சராசரி வாழ்க்கையைக் காட்டிலும் மேம்பட்ட வாழ்க்கையை எவ்வாறு நாம் வாழ்ந்து காட்ட முடியும்? அவருடைய சிந்தையை நம்முடைய வாழ்க்கையில் பயிற்றுவிப்பதன் மூலமாகவே அதனைச் செயல்படுத்த முடியும். தாழ்மை, தியாக மனப்பான்மை, அடிமையின்



சிந்தை, தன்னலமின்மை, நம்மைக்காட்டிலும் பிறரை மேன்மையாகக் கருதுதல் ஆகியவை கிறிஸ்துவின் சிந்தையின் ஆக்கக் கூறுகளாக இருக்கின்றன. கர்த்தரை நெருங்கி வாழ்வதன் மூலமாகவும், சுற்றுப்புறத்தில் வாழ்வதை விட்டொழித்து பரிசுத்த ஸ்தலத்தில் வாழ்வதன் மூலமாகவும் "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவர்களாக" நாம் காணப்பட முடியும் (சங். 91:1). எப்பொழுதும் அவருடன் தொடர்பு கொண்டு, அவரால் நிறைந்திருப்பதாலும் அதை நாம் நிறைவேற்றலாம்.

> "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18).

வேதத்தில் அதிகமதிகமாகக் கர்த்தரை நாம் உற்றுக் காண்கிறவர்களாக இருப்போமென்றால், அவருக்கு ஒப்பாக அதிகமதிகமாகப் பரிசுத்த ஆவியானவர் நம்மை மறுரூபப்படுத்துவார்.